விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

நாவாந்துறை
கிளை நூலகம்

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 ஆவணி 15 வியாழக்கிழமை (31.08.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 255

## இதுவரை நடவடிக்கை எதுவும் இல்லை!

### விக்னேஸ்வரன் ஆதங்கம்

(யாழ்ப்பாணம்)

காணாமல் போனோர் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்குமாறு கூறப்பட்டிருந்த போதும், இதுவரை ஆக்கபூர்வமான எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தை முன்னிட்டு வட 23

## ஐ.நா.செயலருக்கு உறவுகள் மகஜர்

(யாழ்ப்பாணம்)

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான சர்வதேச தினத்தை முன்னிட்டு வடக்கில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் நேற்றையதினம் யாழ் நல்லூர் கந்தசுவாமி ஆலய முன்றலில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டதுடன் ஐ.நா. செயலாளர் நாயகத்துக்கு மகஜர் ஒன்றும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. 21

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள்

# வடக்கு - கிழக்கில் நேற்று கண்ணீருடன் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தினமான நேற்றையதினம் வடக்கு கிழக்கில் பாரிய போராட்டங்கள் நடைபெற்றிருந்தன. இந்தப் போராட்டங்களில் கடத்தப்பட்ட காணாமல் ஆக்கப்பட்ட பிள்ளைகள், உறவினர்கள் எங்கே என தாய்மார்கள் வீதிகளில் புரண்டு கதறினார்கள். இதனால் சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினமான நேற்றையதினமும் ஈழத்தாய்மார்களுக்கு கண்ணீருடனேயே கடந்து சென்றுள்ளது. (23ஆம் பக்கம் பார்க்க)




## பண்ணை படகு விபத்து; பல்கலை மாணவி பலி



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பண்ணை. குருசடி தீவு அந்தோனியார் ஆலயத்துக்கு கடந்த 24 ஆம் திகதி சென்ற வேளை படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் நீரில் மூழ்கி ஆபத்தான நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று 23

## உறவுகளுக்கு என்ன நடந்தது? அரசு பதிலளிக்கக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்று இந்த வருடத்துக்குள்ளேயே அரசு பதிலை கொடுக்க வேண்டும் என கேட்டுக்கொண்டுள்ள வடக்கில் காணாமல் ஆக்கப்பட்டவர்களுடைய உறவினர்கள், சர்வதேசமும் எம்மை இறுதி நேரத்தில் ஏமாற்ற வேண்டாம் எனவும் கேட்டுக்கொண்டுள்ளனர்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான சர்வதேச தினத்தை முன்னிட்டு வடக்கில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் நேற்றையதினம் யாழ். நல்லூர் கந்தசுவாமி ஆலய முன்றலில் கவனயீர்ப்பு போராட் 04

## இந்திய மீனவர்கள் 76 பேர் விடுதலை

(யாழ்ப்பாணம்)

இலங்கை கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டதாக இலங்கை கடற்படையினரால் இந்த வருடம் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருந்த 80 இந்திய மீனவர்களில் 76 மீனவர்களை விடுதலை செய்யுமாறு சட்டமா அதிபர் திணைக்களத்தில் இருந்து அறிவித் 23

## புலத்திலும் உறவுகளால் கவனயீர்ப்பு

(லண்டன்)

அனைத்துலக காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தினை முன்னிட்டு தாயகத்தில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் போராட்டங்களுக்கு வலுச்சேர்க்கும் வகையில் நேற்றையதினம் புலம்பெயர் தமிழர்களினால் அறவழியில் கவனயீர்ப்பு போராட்டம் நடைபெற்றுள்ளது.

நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தினால் ஒழுங்கமைக் 04




## காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் ஒரு கண்துடைப்பு

### த.தே.ம. முன்னணி குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

இலங்கை அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டு வரும் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகம் வெறும் கண்துடைப்பு நாடகம். இந்த அலுவலகம் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் கவனத்தைத் திசை திருப்பி அவர்களுடைய நம்பிக்கையைச் சிதறடித்து நட்ட ஈட்டையும், மரணச்சான்றிதழையும் ஏற்றுக்கொள்ளச் செய்து குடும்பத்தினரைத் தேடுவதற்கான முயற்சியைக் கைவிடச் செய்கின்ற சதி நடவடிக்கையே தவிர 24

## தமிழ் மக்களின் அன்பை வடக்கே வந்து பாருங்கள்!

### மகாநாயக்க தேரர் முன்பாக ஆளுநர் உரை

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்கள் அப்பாவிகள், அன்பானவர்கள் என்பதை எனது சேவை காலத்தில் புரிந்து கொண்டுள்ளேன் என வடமாகாண ஆளுநர் 23



## யாழில் மீண்டும் சிங்கள மகா வித்தியாலயம்

### மஹாநாயக்க தேரர் உறுதி

(யாழ்ப்பாணம்)

மும்மொழியின் முக்கியத்துவத்தின் அடிப்படையில் யாழ் மாவட்டத்தில் உள்ள சிங்கள மகா வித்தியாலயத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் மேற் 23

## உண்ணாவிரதத்தை கைவிட்டார் முருகன்

(சென்னை)

தொடர்ந்தும் 13 நாட்களாக உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருந்த முருகன் தனது போராட்டத்தை கைவிடுவதாக அறிவித்துள்ளார். பொலிஸ் ஆணையாளரின் கோரிக்கையை 23

## நேற்று-3 இன்று-3 இறுதிக்கிரியைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - மண்டைதீவில் படகு கவிழ்ந்ததில் உயிரிழந்த 6 மாணவர்களில், மூவரின் இறுதிக்கிரியைகள் நேற்று நடைபெற்றன. யாழ்ப்பாணம் - அத்தியடி பகுதியைச்சேர்ந்த 04

## பௌத்தத்தின் முன்னுரிமையை ஏற்கிறோம் அது ஏனைய மதங்களை பாதிக்கக் கூடாது

### சின்மயா மிஷன் சுவாமிகள் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

பௌத்த மதம் பிரதான மதம் என்பதை ஏற்றுக்கொள்கிறோம். புத்தபெருமானின் தர்மத்தை மதிக்கிறோம். அதேநேரம் வேறு மதங்களை பாதிகாது இருக்கும் வகையில் அந்த பிரதானப்படுத்தல் இருக்க வேண்டுமென சின்மயா மிஷன் யாக்கிரத சைத்தன்ய சுவாமிகள் தெரிவித்துள்ளார்.

சர்வமத தலைவர்களுடனான கலந்துரையாடல் ஒன்று நேற்றைய தினம் யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. 04

## புலி இலட்சினையுடன் வவுனியாவில் பிரசுரங்கள்

(குருமன்காடு)

வவுனியாவில் தமிழீழ விடுதலைப் புலிகளின் இலச்சினை பொறிக்கப்பட்ட துண்டுப்பிரசுரங்கள் பல இடங்களில் விநியோகிக்கப்பட்டுள்ளன.

வவுனியா, குருமன்காடு போன்ற பகுதிகளில் இவ்வாறான 23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரி புகையிரத விடுதியில் கஞ்சா வளர்ப்பில் ஈடுபட்ட குடும்பம்!

(சாவகச்சேரி)

புகையிரத கொலனி விடுதியில் கஞ்சா செடி வளர்த்த குடும்பஸ்தர் கைது செய்யப்பட்டுள்ளார். சாவகச்சேரி மடத்தடியில் புகையிரதப் பாதைக்கு அருகில் உள்ள புகையிரதத் திணைக்களத்திற்குச் சொந்தமான கொலனி விடுதியில் தங்கியிருந்த தெற்கைச் சேர்ந்த குடும்பம் ஒன்றே கஞ்சா வளர்ப்பில் ஈடுபட்டிருந்தது.

நேற்றுக் காலை 10.00 மணியளவில் சுகாதார உத்தியோகத்தர்கள் டெங்கு நுளம்பு பரிசோதனைகளில் அப்பகுதிகளில் ஈடுபட்டிருந்தனர். இதன்போது குறித்த விடுதியிலும் பரிசோதனைகள் மேற்கொண்டிருந்த வேளையிலேயே வெண்டிச் செடிகளுக்கு இடையில் வளர்க்கப்பட்ட சுமார் 20 கஞ்சா செடிகளை அவதானித்துள்ளனர்.

உடனடியாக சாவகச்சேரி பொலிஸ் பொறுப்பதிகாரி மற்றும் சாவகச்சேரி பிரதேச செயலர் ஆகியோருக்கு அறிவிக்கப்பட்டது.

இதையடுத்து குறித்த விடுதியில் சல்லடை போட்டு தேடுதல் இடம்பெற்றது. இதன்போது பேணி ஒன்றில் அடைக்கப்பட்ட ஒரு தொகுதி கஞ்சாவும் கஞ்சா பீடிகளும் மீட்கப்பட்டது. விடுதியின் பின்னால் வளர்க்கப்பட்ட 20 கஞ்சா செடிகளையும் பொலிஸார் கைப்பற்றினர்.

மேலும் கஞ்சா வளர்ப்பில் ஈடுபட்ட குறித்த விடுதியில் தங்கியிருந்த குடும்பத்தின் தலைவரையும் சாவகச்சேரி பொலிஸார் கைது செய்துள்ளனர். தெற்கைச் சேர்ந்த சிங்கள மொழி பேசும் குறித்த குடும்பத்தினர் தொடர்ச்சியாக கஞ்சா வளர்ப்பிலும் விற்பனையிலும் ஈடுபட்டு வந்தார்களா என்ற கோணத்தில் பொலிஸார் விசாரணைகளை முடுக்கி விட்டுள்ளனர். (மு-89)

# கனடா பிரதமரின் ‘வணக்கம்’ டுவிட்டரில் குவியும் வரவேற்பு

கனடா தமிழ் விழாவை சிறப்பித்த அந்நாட்டின் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடேயின் 'வணக்கம்' ட்வீட் தற்போது பல்லாயிரக் கணக்கான விருப்புகளை அள்ளியிருப்பதுடன், இலட்சக்கணக்கான கனடா தமிழர்களின் பாராட்டுகளையும் குவித்து வருகிறது. கனடாவின் டொரன்டோ நகரில் 2 லட்சத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் பங்கேற்ற 'தமிழர் திருவிழா' நடைபெற்றது.

பேதமின்றி பல நாட்டு மக்களுக்கும் ஆதரவுக்கரம் நீட்டும் நட்பு நாடுகளின் பட்டியலில் எப்போதும் முதலிடத்தில் இருக்கும் நாடு 'கனடா'. கலாசார வேற்றுமைகள் மறந்து உலகின் அத்தனை நாடுகளின் பல முக்கிய விழாக்களை அந்தக் கலாசாரத்துக்குச் சொந்தமான மக்களோடு இணைந்து அதை அரசு விழாவாகவே கொண்டாடி வருகிறது கனடா. கனடாவின் இந்த நட்புறவு முயற்சிகளுக்கு முழுமுதற் காரணமாக இருப்பவர் கனடா பிரதமர் 'ஜஸ்டின் ட்ரூடே'.

இந்த வகையில், சமீபத்தில் 'தமிழர் விழா' ஒன்றை கனடா சிறப்பானதொரு விழாவாகக் கொண்டாடியுள்ளது. இந்தச் சிறப்பு விழாவில் விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்பித்தார் ஜஸ்டின் ட்ரூடே. தமிழர்களின் கலாசாரத்தைப் பல்வேறு பரிமாணங்களிலும் அரங்கேற்றிய அவ்விழாவில் பேசிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடே, 'கனடா என்றுமே தமிழர்களுக்குத் தன்னுடைய தொடர் ஆதரவை அளித்து வருகிறது. ஈழத் தமிழர்களுக்காகவும் கனடா குரல் கொடுக்கத் தவறியதில்லை.

இலங்கையில் போர் நடந்த சமயங்களில் கனடா தமிழர்களுக்கு பெரும் ஆதரவு அளித்தது. போர் முடிவுக்கு வந்தாலும், தமிழர்களின் பிரச்சினைகளுக்கான நீண்ட நாள் தீர்வு விரைவில் கிடைக்கும். 1980களில் அதிகளவிலான தமிழர்கள் கனடாவில் குடியேறத் தொடங்கினர். இன்று பல லட்சம் தமிழ்க் குடும்பங்கள் கனடாவில் வசிக்கின்றன. அவர்களைக் கௌரவிக்கும் வகையில் இனி ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி மாதம் தமிழர் பாரம்பரிய மாதமாகக் கொண்டாடப்படும் என்றார்.

இதையடுத்து, தன் டுவிட்டர் பக்கத்தில் இளநீர் அருந்தும் புகைப்படத்துடன் 'வணக்கம்' தெரிவித்திருந்த ஜஸ்டின் ட்ரூடேவின் புகைப்படம் அவரது செயல்களுக்காவும் வாழ்த்துக்களைக் குவித்து வருகிறது. (மு-11)

# பாடசாலை மாணவி துஷ்பிரயோகம்; சந்தேக நபர் தப்பியோட்டம்

## உடந்தை என 2 பெண்கள் கைது

(மல்லாவி )

கனகராயன்குளம் பொலிஸ் நிலையப் பிரிவில் ஏ9 வீதியில் உள்ள மன்னகுளம் பகுதிக்கு அண்மையாகவுள்ள கிராமம் ஒன்றில் இருந்து காணாமல்போன 16 வயதுடைய பாடசாலை செல்லும் சிறுமி ஒருவர் 47, வயதுடைய நபர் ஒருவரினால் துஷ்பிரயோகத்திற் குள்ளான நிலையில் மடுப் பொலிஸாரினால் சிறுமி மீட்கப்பட்டு கனகராயன்குளம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக கனகராயன்குளம் பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

கடந்த வெள்ளிக்கிழமை காலை முதல் தமது 16, வயதுடைய பாடசாலை செல்லும் மகளைக் காணவில்லை என்று கனகராயன்குளம் பொலிஸ் நிலையத்தில் காணாமல போன சிறுமியின் பெற்றோரால் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து, கனகராயன்குளம் பொலிஸார் சிறுமி காணாமல் போனது தொடர்பான தகவலை அனைத்து பொலிஸ் நிலையங்களிற்கும் அறிவித்திருந்த நிலையில் கனகராயன்குளம் பொலிஸாரும் பல இடங்களிலும் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டு இருந்தனர்.

இந் நிலையில் மடுப் பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள மடு கிராமத்தில் உள்ள வீடு ஒன்றில் சந்தேகத்திற்கிடமான வகையில் சிறுமி ஒருவருடன் சுமார் 47 வயதுடைய நபர் ஒருவர் தங்கியிருப்பதாக அப்பகுதி கிராம அலுவலர் மடுப் பொலிஸ் நிலையத்திற்கு தகவலை வழங்கியுள்ளார்.

இதனையடுத்து, சம்பவ இடத்துக்கு சென்ற மடு பொலிஸார் குறித்த வீட்டை சுற்றி வளைத்து சோதனையிட முற்பட்டபோது, சிறுமியுடன் தங்கியிருந்த சந்தேக நபர் தப்பி ஓடிய நிலையில் சிறுமி ஒருவர் மீட்கப்பட்டுள்ளார்.

மீட்கப்பட்ட சிறுமியிடம் மடுப்பொலிஸார் மேற்கொண்ட விசாரணையின் போது, கன கராயன்குளம் பொலிஸ் நிலையப் பிரிவில் இருந்து காணாமல் போன சிறுமி இவர் தான் என்பது தெரியவந்துள்ளது.

இதனையடுத்து, மேலதிக நடவடிக்கைக்காக சிறுமியை கனகராயன்குளம் பொலிஸாரிடம் மடுப் பொலிஸார் ஒப்படைத்துள்ளனர்.

கனகராயன்குளம் பொலிஸார் சிறுமியிடம் விசாரணைகளை முன்னெடுத்துள்ள நிலையில், சிறுமியை அவரின் வீட்டில் இருந்து தந்திரமான முறையில் வவுனியாவிற்கு வரவழைத்து தப்பிச் சென்ற சந்தேக நபரினால் சிறுமியை துஷபிரயோகம் மேற்கொள்ள உடந்தையாக இருந்தவர்கள் என்று சந்தேகத்தின் அடிப்படையில் 35 வயதையும் 55 வயதையும் உடைய இரண்டு பெண்களையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு மீட்கப்பட்ட சிறுமியை வைத்திய பரிசோதனைகளிற்காக கனகராயன்குளம் பொலிஸார் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதித் துள்ளதுடன், கைதான பெண் சந்தேக நபர்களை இன்று வியாழக்கிழமை வவுனியா மாவட்ட நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக கனகராயன்குளம் பொலிஸார் இது தொடர்பில் மேலும தெரிவித்துள்ளனர். (மு-15)


**அறிவித்தல்**

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 09ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி 10.07.2017 முதல் கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர்:**ஜெப்னா எகடமி டர்ஸரி எடியுகேஷன் (பிறைவட்) லிமிட்டட்**

கம்பனியின் பதிவு இல:-PV 122998

பதிவு முகவரி:- “அருளகம்”

இல.126, ஆடியபாதம் வீதி,

திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்.

(282)

**ஏல விற்பனை**

யா/சென் ஜேம்ஸ் பெண்கள் பாடசாலையில் கீழ்வரும் பொருட்கள் ஏல விற்பனை செய்யப்படவுள்ளது.

நேரம்:-மு.ப 10.00 மணி காலம்:-2017.09.12

01. 1 சிறிய உருக்கு அலுமாரி 4X3
02. 2 மாணவர் மேசை மரம்
03. 2 மாணவர் கதிரை மரம்
04. 2 ஆசிரியர் மேசை மரம்
05. 1 dot matrix printer
06. 5 ups line interactive
07. 1 தட்டச்சு இயந்திரம்
08. 1 printer lq 300
09. 5 ups 600w

-அதிபர் (280)

**வலம்புரி**

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603, 021 567 1532

# அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 1946 – 08 – 21



மறைவு 2017 – 06 – 04

அமரர்

**சின்னையா சிவபாலசுப்பிரமணியம்**

புலோலியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட எமது குடும்பத் தலைவர் அமரர் சின்னையா சிவபாலசுப்பிரமணியம் 04.06.2017 இல் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு மரணச் சடங்கில் கலந்து கொண்டோருக்கும் தொலைபேசி மூலம் தமது அனுதாபத்தினை நம்முடன் பகிர்ந்து கொண்டோருக்கும் எமது நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். அன்னாரின் அந்தியேட்டிக் கிரியை 01.09.2017 நாளை வெள்ளிக்கிழமை காலை புற்றளை அந்தியேட்டி மடத்திலும் அதனைத் தொடர்ந்து காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண கிரியையிலும் மதிய போசனத்திலும் கலந்து அன்னாரின் ஆத்மசாந்திக்கு பிரார்த்திக்குமாறு அழைக்கிறோம்.

இந்த அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

புற்றளை,
புலோலி தெற்கு, புலோலி

குடும்பத்தினர்

# கண்ணீர் அஞ்சலி



**கயித்தாம்பிள்ளை முடியப்பு**

(சுவாம்பிள்ளை)

சட்டத்தரணி மு.றெமிடியஸ் அவர்களின் அன்புத் தந்தையார் 28.08.2017 திங்கட்கிழமை காலமான செய்தியறிந்து ஆழ்ந்த துயர் அடைவதுடன் அவரின் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கு அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பெ.மோகனதாஸ்
சட்டத்தரணி
130, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்

இ.மயில்வாகனம்
சமாதான நீதவான்
[illegible], நாயன்மார்கட்டு

(8-9469)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கே எங்கள் உறவுகள்?

## காணாமற் போனோரை மீட்டுத்தரக்கோரி உறவினர்கள் நேற்று கண்ணீர் போராட்டம்




வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான சர்வதேச தினத்தை முன்னிட்டு வடக்கில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் நேற்றுக் காலை நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்றலில் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டதுடன் ஐ.நா.செயலாளர் நாயகத்துக்கு மகஜர் ஒன்றும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (படங்கள்:-பொ.சோபிகா)

## காணாமல் ஆக்கப்பட்டவர்கள் மீளக் கிடைக்க வேண்டும்

### மட்டு. நகரிலும் நேற்றுப் போராட்டம்



காணாமல் ஆக்கப்பட்டவர்கள் மீளக் கிடைக்க வேண்டுமென, வலியுறுத்தி, மட்டக்களப்பு நகரில் சுடரேற்றி ஆர்ப்பாட்டமொன்று மேற்கொள்ளப்பட்டது.

மட்டக்களப்பு நகரின் காந்தி பூங்காவுக்கு முன்னால் நேற்றுக் காலை ஒன்று திரண்ட கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் மீளக் கிடைக்க வேண்டுமென வலியுறுத்தினர்.

மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் இருந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் பெருமளவிளானோர் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான சர்வதேச தினத்தில் காணாமல் ஆக்கப்பட்ட எங்களின் அன்புக்குரியவர்களின் உண்மைநிலைமை கண்டறிவதற்கான பயணமாக இந்த ஆர்ப்பாட்டத்தை மேற்கொள்வதாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் தெரிவித்தனர்.

காணாமல் ஆக்கப்பட்டோரின் புகைப்படங்களைத் தாங்கி மட்டக்களப்பு நகரில் ஆர்ப்பாட்டப் பேரணியில் ஈடுபட்ட இவர்கள், காணாமல் ஆக்கப்பட்டமைக்கு நீதி மற்றும் இழப்பீடு வழங்குவதுடன், இவ்வாறான காணாமல் ஆக்கப்படும் சம்பவங்கள் மீள நிகழாமையை உறுதிப்படுத்துமாறும் வலியுறுத்தினர்.

காணாமல் ஆக்கப்படுத்தலுடன் தொடர்புடைய படைத்தரப்பினர், பொலிஸ் மற்றும் அரச அதிகாரிகளை பணி நீக்கம் செய்தல் மற்றும் அதிகாரங்களைக் குறைத்தல் கொடுப்பனவுகளை இரத்துச் செய்தல் போன்று நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் இதன் போது வலியுறுத்தினர்.

வடக்கு, கிழக்கில் இராணுவ மயமாக்கலை முடிவுக்கு கொண்டு வந்து, சிவில் வாழ்க்கையை மீளக் கட்டியெழுப்புமாறும் வலியுறுத்தினா.

இந்த ஆர்ப்பாட்டத்தின் முடிவில் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளருக்கான மகஜரை, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மட்டக்களப்பு பிராந்திய இணைப்பாளர் அப்துல் அஸீஸிடம் காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்ப உறவினர்கள் கையளித்தனர். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலிங்கவின் தலைமைத்துவத்தில் பட்டையைக் கிளப்புமா இலங்கை?

## 4ஆவது ஒரு நாள் போட்டி இன்று கொழும்பில் ஆரம்பம்

இலங்கை - இந்திய அணிகளுக்கு இடையிலான 4ஆவது ஒரு நாள் போட்டி இன்று கொழும்பு ஆர். பிரேமதாஸ மைதானத்தில் நடைபெறுகிறது.

விராட் ஹோலி தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி இலங்கையில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது.

இரு அணிகள் இடையேயான 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை இந்தியா 3-0 என்ற கணக்கில் முழுமையாக கைப்பற்றி இருந்தது.

இரு அணிகளுக்கு இடையிலான 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் முதல் போட்டியில் 9 விக்கெட்டுக்கள் வித்தியாசத்திலும் 2ஆவது போட்டியில் 3 விக்கெட்டுக்கள் வித்தியாசத்திலும் 3ஆவது போட்டியில் 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்திலும் வெற்றி பெற்று இந்தியா ஏலவே தொடரை கைப்பற்றி இருந்தது.

இந்நிலையில் இரு அணிகளுக்கும் இடையிலான 4ஆவது ஒருநாள் போட்டி இன்று கொழும்பில் ஆரம்பமாகிறது.

இந்திய அணியின் வெற்றி இந்த ஆட்டத்திலும் நீடிக்குமா? என்று ரசிகர்கள் ஆவலுடன் எதிர்நோக்குகின்றனர். இந்தப் போட்டியிலும் வென்று 4-0 என்ற கணக்கில் முன்னிலை பெறும் ஆர்வத்துடன் இந்திய அணி உள்ளது.

தொடரை வென்று விட்டதால் விளையாடாத வீரர்களுக்கு 11 பேர் கொண்ட அணியில் வாய்ப்பு வழங்கப்படும் என்று அணித் தலைவர் விராட் ஹோலி ஏற்கெனவே தெரிவித்து இருந்தார்.

ரகானே, மனிஷ் பாண்டே, குல்தீப் யாதவ், ஷர்துல் தாக்கூர் ஆகிய 4 வீரர்களுக்கு இதுவரை வாய்ப்பு கொடுக்கப்படவில்லை. இதனால் இன்றைய ஆட்டத்தில் அவர்களில் சிலருக்கு வாய்ப்பு கிடைக்கலாம்.

வைட்-வோஷ் முனைப்பில் இருப்பதால் இந்திய வீரர்கள் தொடர்ந்து திறமையை வெளிப்படுத்த போராடுவார்கள். தோனி, ரோகித் சர்மா துடுப்பாட்டத்திலும், பும்ரா பந்துவீச்சிலும் மிகவும் நல்ல நிலையில் உள்ளனர்.

டெஸ்ட் மற்றும் ஒருநாள் தொடரை இழந்ததால் இலங்கை வீரர்கள் நெருக்கடியில் உள்ளனர். அந்த அணி கடைசி 2 போட்டிகளிலும் போராடியே வீழ்ந்தது. இதனால் இப்போட்டியில் வெற்றி பெற கடுமையாக போராடும். அணித் தலைவர் கபுகெதர காயம் அடைந்ததால் ஆடுவது சந்தேகமே. அவர் ஆடாவிட்டால் மலிங்க தலைவராக இருப்பார்.

இரு அணிகளும் இன்று மோத இருப்பது 154ஆவது போட்டியாகும். இதுவரை நடந்த 153 போட்டிகளில் இந்தியா 86, இலங்கை 55 போட்டிகளில் வெற்றி பெற்றுள்ளன. ஒரு போட்டி 'சமனிலையானது. 11 போட்டிகள் முடிவு இல்லாமல் போனது.



பகல்-இரவாக நடைபெறும் இந்த ஆட்டம் பிற்பகல் 2.30 மணிக்கு ஆரம்பமாகிறது. சொனி டென் மற்றும் தூர்தர்சனில் இந்தப்போட்டி நேரடியாக ஒளிபரப்பு செய்யப்படுகிறது.

**இந்தியா:** விராட் ஹோலி (அணித் தலைவர்), தவான், ரோகித் சர்மா, ராகுல், கேதர் ஜாதவ், தோனி, ஹர்த்திக் பாண்ட்யா, அக்ஷர் பட்டேல், புவனேஷ்வர் குமார், பும்ரா, யசுவேந்திர சஹால், ரகானே, மனிஷ் பாண்டே, குல்தீப் யாதவ், ஷர்துல் தாக்கூர்.

**இலங்கை:** மலிங்க (அணித் தலைவர்), திரிமானே, டிக்வெல, குஷல் மெண்டீஸ், மத்யூஸ், ஸ்ரீவர்த்தன, தனஞ்செய, சமீர, பெர்னாண்டோ, ஹசரன்கா, திஷரா பெரேரா, புஷ்பக்குமார, சண்டகன், குணதிலக.

# ஜோ ரூட்டின் தவறான கணிப்பால் தீவுகளிடம் மண்டியிட்ட இங்கிலாந்து



அணித் தலைவர் ஜோ ரூட், மேற்கிந்தியத் தீவுகளை எளிதாக எடைபோட, அதை தமக்கு சாதகமாக பயன்படுத்திய மேற்கிந்திய வீரர்கள் ஹெடிங்லே டெஸ்டில் இங்கிலாந்து வீரர்களை துவைத்து எடுத்துடன் 5 விக்கெட்டுக்களால் வெற்றியையும் சுவைத்தது.

இங்கிலாந்து - மேற்கிந்தியத் தீவுகளுக்கு அணிகளுக்கு இடையிலான 2ஆவது டெஸ்ட் ஹெடிங்லே லீட்ஸில் நடைபெற்றது.

நாணயச்சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.

பந்துவீச்சுக்கு ஆடுகளம் ஒத்துழைத்ததால், மேற்கிந்தியத் தீவுகள் வேகப்பந்து வீச்சாளர்கள் கேப்ரியல், ரோச் அபாரமாக பந்து வீசினர். இதன்காரணமாக இங்கிலாந்து 258 ஓட்டங்களில் ஆட்டமிழந்தது.

தொடர்ந்து முதல் இன்னிங்சுக்காக களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் சாய் கொப் (147), கார்லேஸ் பிராத்வெய்ட் (134) ஆகியோரின் துடுப்பாட்டம் கைகொடுக்க 427 ஓட்டங்கள் குவித்தது.

பொதுவாக டெஸ்ட் போட்டியை பொறுத்தவரை மூன்று நாட்களுக்குப் பிறகு ஆடு களம் பந்து வீச்சுக்கு அதிக அளவில் ஒத்து ழைக்கும். ஆனால் ஹெடிங்லேயில் நாட்கள் ஆக ஆக பந்து வீச்சுக்குப் பதிலாக ஆடுகளம் துடுப்பாட்டத்துக்கு சாதகமாக மாறியது.

இதனால் 169 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் இருந்த இங்கிலாந்து அணி, தனது 2ஆவது இன்னிங்ஸை 4ஆவது நாள் ஆட்டம் முடியும் தருவாயில் 8 விக்கெட்டுக்களை இழந்து 490 ஓட்டங்கள் எடுத்திருந்த போது இடைநிறுத்தியது.

மொயின் அலி 84, அணித் தலைவர் ஜோ ரூட் 72, கிறிஸ் வோக்ஸ் 61 ஓட்டங்களை எடுத்தனர்.

இதன்மூலம் இங்கிலாந்து அணி 321 ஓட்டங்களால் முன்னிலை வகித்தது. இறுதி நாளில் மேற்கிந்தியத் தீவுகள் இவ்வளவு ஓட்டங்களை எடுக்க இயலாது என்று நினைத்த ஜோ ரூட் ஆட்டத்தை இடைநிறுத்திய மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு 322 ஓட்டங்களை வெற்றி இலக்காக நிர்ணயித்தார்.

322 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 4ஆவது நாள் ஆட்ட நேர முடிவில் விக்கெட் இழப்பின்றி 6 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

நேற்று முன்தினம் நடந்த 5ஆவது நாள் ஆட்டத்தில் பிராத்வைட் (95), சாய் ஹோப் (118 அவுட் இல்லை), பிளாக்வுட் (41) ஆகியோரின் சிறப்பான ஆட்டத்தால் 91.2 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 322 ஓட்டங்கள். எடுத்து 5 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக மேற்கிந்தியத் தீவுகளின் சாய் கொப் தெரிவானார்.

இந்த வெற்றியின் மூலம் மேற்கிந்தியத் தீவுகள் தொடரை 1:1 என சமநிலைப்படுத்தியதுடன் சுமார் 10 வருடங்களுக்குப் பிறகு இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டியை வென்று வரலாறு படைத்தது.

இரு அணிகளுக்கும் இடையிலான 3ஆவது டெஸ்ட் லண்டன் லோட்ஸில் செப்ரெம்பர் 7ஆம் திகதி ஆரம்பமாகிறது.

## உறவுகளுக்கு என்ன...

டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. அதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர். அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

எமது உறவுகளை நினைத்து மன உளைச்சலுக்கு உள்ளாகியுள்ளோம். எமது கண்ணீர் இதற்கு காரணமானவர்களை தண்டிக்க வேண்டும். எமது உறவுகள் இருக்கிறார்களா இல்லையா என அறிவிக்க வேண்டும். இனியும் எம்மால் போராட முடியாது. மேலும் மேலும் எமக்கு மன உளைச்சலை உண்டு பண்ணவேண்டாம். யாரிடம் சென்றாலும் எமக்கு எந்தவிதமான முடிவும் சொல்கிறார்கள் இல்லை. எங்கள் குடும்பம் சிதறடிக்கப்பட்டுள்ளது. எமது உறவுகளை எல்லா இடங்களிலும் தேடுகிறோம். யாரிடம் இருந்தும் பதில் வருவதாக இல்லை

இராணுவம்தான் எமது பிள்ளைகளை கூட்டிச்சென்றது. அவர்களை என்ன செய்தார்கள் என்று சொல்லுங்கள். எமது பிள்ளைகள் வெளிநாடு சென்று விட்டார்கள் என்று சொல்கிறார்கள். எமது பிள்ளைகளுக்கு அறிவு உள்ளது.அவ்வாறு வெளிநாடுகளுக்கு சென்றிருந்தால் இதுவரை காலமும் எம்முடன் தொடர்பு கொள்ளாமல் இருக்க மாட்டார்கள். அவர்கள் எங்கே என்று எமக்கு சொல்ல வேண்டும். அதற்காக தான் நாம் எல்லா இடமும் அலைகிறோம்.

எமது உறவுகளை என்ன செய்தீர்கள் எங்கு வைத்துள்ளீர்கள் என்று சொல்ல வேண்டும். எம்மை மீண்டும் மீண்டும் ஏமாற்றிக்கொண்டு உள்ளார்கள். இதற்கு ஒரு முடிவு வேண்டும். சர்வதேசம் இதில் உறுதியாக நின்று எமக்கான நீதியை பெற்றுத்தர வேண்டும் என கேட்டுக்கொண்டுள்ளனர். (மு-9)

## நேற்று 3; இன்று 3...

கோணேஸ்வரன் பிரவீனின் பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இதேவேளை உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்த லிங்கநாதன் ரஜீவின் இறுதிக் கிரியைகள் இடம்பெற்று உரும்பிராய் இளங்காடு இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்பட்டது.

சண்டிலிப்பாயைச் சேர்ந்த புலேந்திரன் தனுஷனின் இறுதிக்கிரியைகளும் நேற்று நடைபெற்றது. படகு கவிழ்ந்ததில் உயிரிழந்த ஏனைய மூவரின் இறுதிக்கிரியைகள் இன்று இடம்பெறவுள்ளன. (மு-11)

## புலத்திலும் உறவு...

கப்பட்ட குறித்த போராட்டமானது பிரித்தானிய பிரதமரின் காரியாலயத்திற்கு முன்பாக நடைபெற்றது.

இந்த போராட்டத்தில் காணாமல் போனவர்கள் எங்கே?அவர்கள் தொடர்பான பதில்களை வழங்கு! ஐ.நாவே ஏன் இந்த அமைதி? பிரிட்டன் அரசே இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடு! என்ற வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகளை தாங்கியும் புலிக்கொடியினை ஏந்தியவாறும் போராட்டத்தில் கலந்து கொண்ட அனைவரும் காலநிலை இடையூறு விளைவித்ததையும் பொருட்படுத்தாது உணர்வுபூர்வமான கோஷங்களை எழுப்பினார்கள். அத்துடன் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் இலங்கை அரசு விரைவில் பதில்களை வழங்க பிரித்தானியா அழுத்தம் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து பிரிட்டன் பிரதமரிடம் மகஜர் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (மு-11)

## பௌத்தத்தின் முன்...

அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

அனைத்து மதத் தலைவர்களும் சிந்திக்க வேண்டிய ஒரு விடயம் உள்ளது. எமது இளையவர்களுக்கும் சிறுவர்களுக்கும் அறம், தர்மம், பண்பாடு போதிக்கப்பட வேண்டும். நாடு முழுவதும் அறநெறி வகுப்புக்கள் ஒவ்வொரு மதத்திலும் நடைபெறுகின்றது. அவற்றை மேலும் சிறப்பாக நடத்துவதற்கு வெள்ளிக்கிழமை மாலையிலும் ஞாயிற்றுக்கிழமை காலையிலும் தனியார் கல்வி நிலையங்கள் மூடப்பட வேண்டும். அதற்கு மதத்தலைவர்களாகிய நாம் முன்னின்று செயற்பட வேண்டும். ஜனாதிபதியிடம் இதை தெரிவித்து நடைமுறைப்படுத்த வேண்டும். 30 வருடங்களாக நடைபெற்ற யுத்தம் நிறைவடைந்துள்ளது. மதத்தலைவர்களாகிய நாம் தான் சாந்தி சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற எதிர்பார்ப்பு அனைவரிடத்திலும் உள்ளது. தற்போதைய அரசியல் அமைப்பு சீர்திருத்தத்தில் ஏற்படவிருக்கும் மாற்றத்திற்கும் பௌத்த பீடங்கள் முழுமையான ஆதரவை வழங்க வேண் டும். அதில் நாம் அனைவரும் சேர்ந்து சிந்திக்க வேண்டும். அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய ஒரு நல்ல தீர்வை இலங்கையில் அனைத்து மதம் இனம் ஒற்றுமையாக வாழக் கூடிய விதத்தில் ஏற்படுத்த வேண்டும். அதற்கு பௌத்த மதகுருக்கள் ஆவன செய்ய வேண்டும்.

இலங்கை ஒரு சிங்கள பௌத்த நாடு என்றால் ஏனைய மதத்தினர் பயப்படுகிறார்கள். தமிழர் தனிநாடு என்றால் பிரிவினை ஏற்படுகிறது. இது இரண்டையும் நாம் மறுக்கிறோம். இலங்கையர் என்ற ரீதியில் அனைத்து உரிமையுடனும் தங்களின் உரிமையுடன் வாழ எதிர்பார்க்கிறோம் என்றார். (மு-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதிக்கப்பட்டவர்களுக்கு கொடுப்பனவு

உமா ஓயா வேலைத்திட்டத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கொடுப்பனவை வழங்க, அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

இதற்கமைய, குறித்த வேலைத் திட்டத்தால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த மக்களுக்காக மாற்று இடங்களை தெரிவு செய்து மீள் குடியேற்றும் வரை இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது

இதன்படி மாதாந்தம் 10,000 - 25,000 வரை ஆறு மாதங்களுக்கு இந்த கொடுப்பனவு வழங்கி வைக்கப்படவுள்ளது. அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று இடம்பெற்ற போது அமைச்சர் கயந்த கருணாதிலக்க இதனைத் தெரிவித்தார். (இ-7)

# 200 பேருக்கு மூக்குக்கண்ணாடிகள்

தெல்லிப்பழை பொலிஸாரின் பொலிஸ் நடமாடும் சேவையின் ஓர் அங்கமாக வறுமைக்கோட்டின் கீழுள்ள 200 பேருக்கு மூக்குக் கண்ணாடி வழங்கும் நிகழ்வும் விசேட தேவையுடைய 10 பேருக்கு சக்கர நாற்காலிகள் வழங்கும் நிகழ்வும் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வும் எதிர்வரும் 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பன்னாலை கற்பக விநாயகர் திருமண மண்டபத்தில் காங்கேசன்துறை பொலிஸ் பிரிவு பொலிஸ் அத்தியட்சகர் ரஞ்சித் மாசிங்க தலைமையில் நடைபெறும்.

எனவே இதில் பயன்பெற விரும்புபவர்கள் எதிர்வரும் 3 ஆம் திகதிக்கு முன்னர் தங்கள் கிராம சேவையாளரின் சிபார்சுக் கடிதத்துடன் தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் தமது முன்பதிவுகளை செய்யுமாறு தெல்லிப்பழை பொலிஸ் நிலைய பொலிஸ் பரிசோதகர் சமிந்த குணரட்ன அறிவித்துள்ளார். (இ-10-104)


சிவமயம்

சந்நிதியான் ஆச்சிரம சுவாமிகளுக்கு

## பட்டமளிப்பு விழா

*தமிழ்நாடு, மத்திய பல்கலைக்கழகம் வழங்கியுள்ள கௌரவ "டாக்டர்" பட்டம் வழங்கும் விழா*



**இடம்:**
**சந்நிதியான் ஆச்சிரமம்**

**காலம்:**
**01.09.2017 வெள்ளிக்கிழமை**

**நேரம்:**
**காலை 9.00 மணி**

**நிகழ்ச்சி நிரல்**

- **பஞ்சபுராணம் ஓதுதல்**
- **ஆசியுரை:**
  நல்லை ஆதீன முதல்வர்
  ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள்
- **வரவேற்புரை:**
  திரு செ.பரமேஸ்வரன் அவர்கள்
  (அதிபர்)
- **அறிமுகவுரை:**
  திருமதி சசிலேகா ஜெயராஜன் அவர்கள் (ஆசிரியை)
- **தலைமையுரை:**
  பேராசிரியர் திரு நா.யோகராஜா அவர்கள்
  (பணிப்பாளர், தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களம், தலைமைச் செயலகம், கொழும்பு)
- **சிறப்புரையும் விருது வழங்கலும்:**
  - பேராசிரியர் இரட்ணம் விக்னேஸ்வரன் அவர்கள் (துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்)
  - பேராசிரியர் கந்தையா தேவராசா அவர்கள் (முகாமைத்துவ பீடம், யாழ். பல்கலைக்கழகம்)
- **ஏற்புரை:**
  ஆச்சிரம சுவாமிகள்
- **நன்றியுரை:**
  இரா.செல்வவடிவேல் அவர்கள் (ஆசிரியர்)

**குறிப்பு:**
**செல்வச்சந்நிதியில் நடைபெறும் விசேட பூசை வழிபாடுகளுடன் விருந்தினர் அனைவரும் ஆச்சிரமத்திற்கு அழைத்து வரப்படுவர்.**

"அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்"

செல்வச் சந்நிதி, தொண்டைமானாறு. சந்நிதியான் ஆச்சிரம அன்பர்கள். (சி-9461)



# பருத்தித்துறை பிரதேச சபை
# கேள்வி அறிவித்தல்கள்

மேற்படி விடயம் தொடர்பில் பின்வரும் விபரங்களுக்கு அமைவாக துவிச்சக்கரவண்டி மற்றும் வாகன பாதுகாப்பு நிலையங்களை குறித்த காலப்பகுதியில் நடாத்துவதற்கு பொருத்தமானவர்களிடம் இருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

1.வல்லிபுர ஆழ்வார் வருடாந்த மஹோற்சவம் 2017 இன் போது 20.09.2017 தொடக்கம் 06.10.2017 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் கீழே விபரிக்கப்பட்ட இடங்கள்

| நிலைய இல. | நிலையம் அமைந்துள்ள இடம் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | மீளளிக்கமுடியாத கேள்விப் படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் |
|---|---|---|---|---|
| 01 | ஆலய சுற்றாடலில் பருத்தித்துறை மருதங்கேணி வீதியில் கோவிலுக்கு வடக்குப்புறம் | 143,000.00 | 200.00 | 1000.00 |
| 02 | முறாவில் வீதியில் குருக்கட்டு பிள்ளையார் கோவிலுக்கு வடக்குப்புறம் | 21,500.00 | 200.00 | 1000.00 |
| 03 | ஆலய சுற்றாடலில் பருத்தித்துறை மருதங்கேணி வீதியில் கோவிலுக்கு தெற்குப்புறம் | 68,600.00 | 200.00 | 1000.00 |

2.நாகர்கோவில் நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் 2017 இன் போது 06.10.2017 தொடக்கம் 10.10.2017 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் கீழே விபரிக்கப்பட்ட இடம்

| நிலைய இல. | நிலையம் அமைந்துள்ள இடம் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | மீளளிக்கமுடியாத கேள்விப் படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் |
|---|---|---|---|---|
| 01 | ஆலய சுற்றாடல் நாகர்கோவில் | 14,300.00 | 200.00 | 1000.00 |

1.கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி:- 31.08.2017 தொடக்கம் 13.09.2017 பி.ப. 12.00 மணி
2.கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி:- 13.09.2017 பி.ப. 2.00 மணி
3.கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி:- 13.09.2017 பி.ப. 3.00 மணி

கேள்வி நிபந்தனைகள்:-

1.கேள்விப்படிவங்களை அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறு வல்லிபுர ஆழ்வார் ஆலய துவிச்சக்கரவண்டி, வாகன பாதுகாப்பு நிலைய கேள்விப்படிவங்களை பிரதேசச்சபை, புலோலி உப அலுவலகத்திலும் நாகர்கோவில் நாகதம்பிரான் ஆலய துவிச்சக்கரவண்டி, வாகன பாதுகாப்பு நிலைய கேள்விப்படிவங்களை பிரதேசசபை, குடத்தனை உப அலுவலகத்திலும் பெற்றுக்கொள்ளமுடியும்.

2.கேள்விப்பத்திரங்கள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு தபால் உறையில் இடப்பட்டு உறையினது இடது பக்க மேல் மூலையில் கேள்வி விபரம் தெளிவாக எழுதப்படுவதுடன் தபால் உறைக்கு அரக்கு முத்திரையிட்டு ஒரு பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். மறுபிரதியை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் ஊடாகவோ உரிய காலப்பகுதிக்குள் அனுப்பப்படல் வேண்டும்.

3.கேள்வி திறத்தலின் போது கேள்விகாரரோ அல்லது அவரின் பிரதிநிதியோ சமுகமளிக்க முடியும்.

4.இது விடயமான மேலதிக விபரங்கள், ஏனைய நிபந்தனைகளை காரியாலயத்திலும் சம்பந்தப்பட்ட உப அலுவலகங்களிலும் காரியாலய நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

சி.சிறிபாஸ்கரன்
செயலாளர்.
பருத்தித்துறை பிரதேச சபை. புலோலி. 30.08.2017

(சி-9466)


# இராசி பலன்

31.08.2017
(ஆவணி 15, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.05 மணிக்கு
தசமி முழுவதும்
மூலம் பின்னிரவு 6.01 மணிவரை
சுபநேரம் 7.35-9.05 மணிவரை
இராகுகாலம் 01.35-3.05 மணிவரை
குங்கிலியக் கலயர் குருபூசை,
ஆவணி மூலம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | கிரகநிலை சந்திராஷ்டமம் ரோகினி | | ராகு, புத, சுக், |
| கேது | | | சூரி செவ் |
| சந் | சனி | | குரு |

**மேடம்:** நண்பர்கள் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்குவர், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும்.

**இடபம்:** குடும்பத்தில் சிறுசிறு கருத்து வேறுபாடுகள் தோன்றி மறையும், அல்லல்கள் தீர குருவை வழிபட வேண்டிய நாள், பயணங்களால் மனச் சோர்வு ஏற்படலாம்.

**மிதுனம்:** விருந்தினர் வருகையால் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், கல்யாணக் கனவுகள் நனவாகும் நாள், ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்கி மகிழ்வீர்கள்.

**கடகம்:** சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பகையொன்று நட்பாகலாம், பல நாட்களாக செய்ய நினைத்த காரியமொன்றை இன்று செய்து முடிப்பீர்கள்.

**சிம்மம்:** பூர்வீகச் சொத்துக்களால் கணிசமான ஆதாயம் கிடைக்கும், எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், வாகன பழுதுச் செலவுகள் குறையும், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்.

**கன்னி:** கடன் சுமை குறையும் நாள், மகிழ்ச்சிதரும் செய்திகள் வந்து சேரலாம், இல்லத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், பயணங்களால் பலனுண்டு.

**துலாம்:** நீண்டநாளைய ஆசையொன்று நிறைவேறும் நாள், இளைய சகோதர வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்:** நண்பர்களின் ஒத்துழைப்பால் நலம் காண்பீர்கள், தொழில் வளர்ச்சி கூடும் நாள், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும்.

**தனுசு:** சிக்கனத்தைக் கடைப்பிடிக்க முற்படுவீர்கள், சவால்களை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள், உடல் நலனில் கவனம் தேவை, பயணத்தால் வழக்கமான பணிகளில் சுணக்கம் ஏற்படலாம்.

**மகரம்:** திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், தேவையற்ற சஞ்சலங்கள் ஏற்படலாம்.

**கும்பம்:** எடுத்த காரியத்தில் எளிதில் வெற்றி கிடைக்கும், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், கௌரவமான நாள்.

**மீனம்:** செய்தொழில் மேன்மையுண்டு, மற்றவர்களின் மத்தியில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும் நாள், தூரதேசச் செய்திகள் வந்து சேரலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அஸ்கிரியபீடத்தின் மகாநாயக்க தேரர் வரக்கொட தம்மசித்தி ஸ்ரீ பஞ்ஞானந்த ஞானரத்ன மஹாநாயக்க தேரர் தலைமையில் யாழ்.மாவட்டத்தில் உள்ள சர்வமத தலைவர்களுடனான கலந்துரையாடல் ஒன்று நேற்றையதினம் யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. "நாட்டில் நிலவும் சமாதான சூழல் மற்றும் சமய ரீதியலான சகவாழ்வு" எனும் தொனிப் பொருளில் சர்வமத குழுவின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சர்வ மத தலைவர்கள் கலந்து கொண்டு நாட்டில் நிலவும் பிரச்சினைகள், மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள குழப்பங்கள், மக்களின் அமைதியான வாழ்வுக்கும் நல்லிணக்கத்துக்கும் தேவையான வழிமுறைகள் தொடர்பில் தமது கருத்துக்களையும் கோரிக்கைகளையும் முன்வைத்திருந்தனர். இந்த நிகழ்வில் சர்வமதத் தலைவர்கள், வடமாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரே, யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

(படங்கள்:-பொ.சோபிகா)

# நுளம்பு வலைகள் வழங்கல்



கோப்பாய் தேசோதய சபையின் ஏற்பாட்டில் கோப்பாய் நவமங்கை நிலையத்திலுள்ள பெண்களுக்கு புலம்பெயர் தமிழரான செ.தயாபரனின் நிதியுதவியில் ஒரு தொகை நுளம்பு வலைகள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன.(இ-10-134)

# தேர்த்திருவிழா

இருபாலை கிழக்கு கேணிக்குளம்பதி லிங்க விநாயகர் ஆலயதேர்த்திருவிழா நாளை மறுதினம் 2ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறும். எதிர்வரும் 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத் திருவிழா இடம்பெறவுள்ளது. (இ-3)

# அரசியல் பகுப்பாய்வு நூல் வெளியீட்டு நிகழ்வு

சி.கா.செந்திவேல் எழுதிய வட்டுக்கோட்டையிலிருந்து முல்லைத்தீவு வரை அரசியல் பகுப்பாய்வு விமர்சன நூல் வெளியீட்டு நிகழ்வு எதிர்வரும் 3ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ். றிம்மர் மண்டபத்தில் (மணிக்கூட்டுக் கோபுர அருகில்) கலாநிதி சி.சிவசேகரம் தலைமையில் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் மதிப்பீட்டுரையை அரசியல் பொருளாதார ஆய்வாளர் அகிலன் கதிர்காமர் சமூக விஞ்ஞான செயற்பாட்டாளர் மு.மயூரன் சமூக ஆய்வாளரும் எழுத்தாளருமானசி.கருணாகரன் ஆகியோர் வழங்கவுள்ளனர். (இ-3)

# சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம்

யாழ்ப்பாணம் நல்லூர் செட்டித்தெருவைச் சேர்ந்த யாழ்ப்பாணம் மாநகர சபையில் பொதுசன தொடர்பு உத்தியோகத்தராகவும், தகவல் வழங்கும் அலுவலராகவும் கடமையாற்றும் சண்முகம் லோகசிவம் இன்று யாழ். நீதவான் நீதிமன்ற நீதவான் சி.சதீஸ்வரன் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம் எடுத்துக் கொள்கிறார்.



இவர் நல்லூர் தெற்கு கிராம அபிவிருத்தி சங்கத்தின் தலைவராகவும் யாழ்ப்பாணம் பலநோக்கு கூட்டுறவு சங்க கிளை இல-12இன் கிளைக்குழுத் தலைவராகவும் நல்லூர் முருகன் சனசமூக நிலைய கணக்காய்வாளராகவும் ஈச்சமோட்டை ஸ்ரீ ஞானவைரவர் கோவில் நிர்வாக சபை உறுப்பினராகவும் யாழ்ப்பாணம்மாநகரசபை சைவசமய விவகாரக்குழு உறுப்பினராகவும் சேவையாற்றி வருகிறார்.

இவருக்கு கொட்டடி சன சமூக நிலையமும் கொட்டடி கிராம அபிவிருத்தி சங்கமும் இணைந்து "சமூக திலகம்" பட்டம் வழங்கி கௌரவித்தது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஆன்மீக நிகழ்வுகளில் இன்று

தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய மஹோற்சவ காலத்தை முன்னிட்டு தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய அறநெறிப் பாடசாலையின் அனுசரணையில் நடைபெறும் ஆன்மீக நிகழ்வுகள் இன்று வியாழக்கிழமை மாலை 4 மணிமுதல் இரவு 7 மணிவரை ஆலய முன்றலில் அமைக்கப்பட்டுள்ள விசேட மேடையில் இடம்பெறும். இதில் செல்வச்சந்நிதி ஆலய அறநெறிப் பாடசாலை மாணவர்களின் பஜன், மட்டக்களப்பு விபுலானந்தர் கலைக்கல்லூரியின் விரிவுரையாளர் செல்வி கஸ்தூரி கணேசமூர்த்தியின் கச்சேரி, யாழ். சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார் பிரமச்சாரி ஜாக்ரத சைதன்யாவின் சத்சங் என்பன இடம்பெறும். (இ-3)

# காந்தி ஜெயந்தி தினத்தை முன்னிட்டு மாணவர்களுக்கு கட்டுரைப்போட்டி

அகில இலங்கை காந்தி சேவா சங்கம் மகாத்மா காந்தியடிகளின் ஜெயந்தி (ஒக்டோபர்2) தினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கான கட்டுரைப்போட்டி ஒன்றை நாடளாவிய ரீதியில் நடத்தவுள்ளது.

ஆரம்பப்பிரிவு, கனிஷ்டபிரிவு, சிரேஷ்ட பிரிவு, அதிசிரேஷ்ட பிரிவு என நான்கு பிரிவுகளாக நடத்தப்படவுள்ள இப்போட்டியின் பிரிவுகளுக்குரிய தரங்களும் தலைப்புக்களும் கட்டுரையின் அளவும் பின்வருமாறு,

ஆரம்பப் பிரிவு:- தரம் 4 தொடக்கம் தரம் 5 வரையான வகுப்புகள்,

கட்டுரைத் தலைப்பு:- மகாத்மா காந்தியின் போதனைகள், 120 சொற்கள்.

கனிஷ்ட பிரிவு :-தரம் 6 தொடக்கம் தரம் 8 வரையான வகுப்புகள்

தலைப்பு :- காந்தியின் எளிமையும் அதன் தாக்கங்களும்,250 சொற்கள்.

கிரேஷ்ட பிரிவு:-தரம் 9 தொடக்கம் தரம் 11 வரையான வகுப்புகள்

கட்டுரைத்தலைப்பு:- இலங்கையில் காந்தி,300 சொற்கள்.

உயர்தரப்பிரிவு :-தரம் 12 தொடக்கம் தரம் 13 வரையான வகுப்புகள்

கட்டுரைத் தலைப்பு:- காந்திய சிந்தனையும் இளைஞர்களும் 500 சொற்கள்.

மாணவர் முழுப்பெயர் (தமிழ் மற்றும் ஆங்கிலத்தில்), சொந்த முகவரி, மாவட்டம், கல்விகற்கும் பாடசாலை, கற்கும் தரம், போட்டிப் பிரிவு, கட்டுரைத்தலைப்பு, தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்கள் அடங்கியதாக சுயமாகத் தயாரிக் கப்பட்ட விண்ணப்பபடிவத்தை தனியாகக் கட்டுரையுடன் கட்டுரையுடன் இணைத்து அனுப்பி வைக்க வேண்டும்.

கட்டுரை எழுதிய தாள்களின் எப்பக்கத்திலாயினும் தமது பெயர் மற்றும் விபரங்களை எழுதலாகாது. ஒரு போட்டியாளர் ஒரு ஆக்கத்தை மட்டுமே அனுப்பி வைக்க முடியும். கட்டு ரைகள் தெளிவான கையெழுத்தில் தாளின் ஒரு பக்கத்தில் மட்டும் எழுதப்பட வேண்டும். அனுப்பிய கட்டுரைகளை மீளப்பெற முடியாது. ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெறுவேருக்கு பெறுமதியான பரிசில்களும் சான்றி தழ்களும் வழங்கப்படும். நடுவர்களின் தீர்ப்பே இறுதியானதாகும். பரிசு பெற்றோரின் பெயர் விபரங்கள் பத்திரிகை வாயிலாக அறிவிக்கப்படும்.

இப்போட்டியில் பங்கு கொள்ள விரும்பும் மாணவர்கள் தமது கட்டுரைகளை பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்த லுடன் செப்டெம்பர் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னதாக பொதுச்செயலாளர், அகில இலங்கை காந்தி சேவா சங்கம், இல 151, செ்ன் பெனடிக்ற் வீதி, நல்லூர் கிழக்கு, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு தபாலில் அனுப்பி வைக்க முடியும்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் காந்தி ஜெயந்தி கட்டுரைப் போட்டி என்று குறிப்பிட வேண்டும் என பொதுச் செயலாளர் எம். ஷாந்தன் சத்தியகீர்த்தி அறிவித்துள்ளார். (இ

# பதவியேற்பு வைபவம்



சுன்னாகம் பாரம்பரிய றோட்டறிக் கழகத்தின் 4 ஆவது பதவியேற்பு வைபவம் கடந்த 26ஆம் திகதி யாழ். ரில்கோ விருந்தினர் விடுதியில் நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்கு முன்னாள் றோட்டறி மாவட்ட ஆளுநர் அமிர்தகவுரி ராஜன் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார். (இ-7)



வடமாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் உள்ள மகளிர் அபிவிருத்தி நிலையங்களில் ஒரு வருட தையல் பயிற்சியை நிறைவு செய்த யாழ்.மாவட்டத்தை சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட 24 பயனாளிகளுக்கு தையல் இயந்திரம் வழங்கும் நிகழ்வு யாழ்.ஆனைப்பந்தியில் அமைந்துள்ள வடமாகாண கிராம அபிவிருத்தி திணைக்கள அலுவலகத்தில் நேற்றைய தினம் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் வடமாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் சீ.பெல்சியன்,யாழ் மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் நா.பஞ்சலிங்கம் உட்பட பயனாளிகளும் கலந்து கொண்டனர்.

(படங்கள்:- சிந்துஜா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

103

# தமிழரின் தலைவிதி எப்படியாகும்?



## மாணவி வித்தியா கொலை நடந்தது என்ன?

20.05.2015 அன்று யாழ். குடாநாடு முழுவதும் பூரண ஹர்த்தாலால் முடங்கிப் போயிற்று. வீதியில் இறங்குவது பயம் என்ற அளவில் பெரும்பாலானவர்கள் தத்தம் வீடுகளிலே இருந்து விட்டனர்.

20 ஆம் திகதி ஒரு சுபமுகூர்த்தமான நாள் என்பதால் அன்றைய தினம் திருமணச் சடங்குகள் பல ஏற்பாடாகியிருந்தன. மிகக் குறைந்த எண்ணிக்கையானவர்களே திருமண வீட்டிற்கு வந்திருந்தனர் என்று கூறுமளவில் அன்றைய திருமண வைபவங்கள் நடந்து முடிந்தன.

திருமண வைபவங்களில் மங்கல வாத்தியம் இசைப்போர் மோட்டார் சைக்கிள்களிலேயே தங்கள் வாத்தியங்களை எடுத்துச் சென்றதைக் காண முடிந்தது. உணவுச்சாலைகள் எதுவும் திறக்கப்படவில்லை. எரிபொருள் நிலையங்கள்கூட இயங்கவில்லை.

மாணவி வித்தியாவின் கொலைக்கு எதிராக நடந்த பூரண ஹர்த்தாலால் இயல்பு நிலை முற்றாகப் பாதிப்படைந்திருந்தது. பல வருடங்களுக்கு முதல் யாழ்ப்பாணத்தில் நடந்த ஹர்த்தால் நிகழ்வுகளை ஞாபகப்படுத்துவதாக 20.05.2015 அன்று யாழ்.குடாநாட்டில் நடந்த ஹர்த்தால் இருந்தது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

கடைகள், அரச நிறுவனங்கள், வங்கிகள் என அனைத்தும் பூட்டப்பட்டிருக்க, யாழ்ப்பாண நகர மையத்தில் ஆர்ப்பாட்டப் பேரணிகள் நடந்தவண்ணமிருந்தன.

யாழ்.போதனா வைத்தியசாலை தாதியர்கள், பணியாளர்கள் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தும் பொருட்டு யாழ்.போதனா வைத்தியசாலையின் நுழைவாயிலுக்கு வெஷியாக மகாத்மா காந்தி சிலைக்கு முன்பாகக் கூடி நின்றனர். யாழ். போதனா வைத்தியசாலைப் பணியாளர்கள் தமது எதிர்ப்பை வெளிப்படுத்த வீதிக்கு வந்த போது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களும் அந்த இடத்தில் கூடிக்கொண்டனர்.

இருந்தும் யாழ். போதனா வைத்தியசாலைப் பணியாளர்கள் ஒரு குறிப்பிட்ட நேரத்துடன் தமது கடமைக்குச் சென்றிருந்தனர்.

இந்நேரத்தில் அப்பகுதியில் வி.ரி.தமிழ்மாறனின் உருவப் பொம்மை எரியூட்டப்பட்டது. உருவப் பொம்மையை எரித்தவர்கள் அங்கிருந்து பேரணியாகச் செல்ல அவ்விடத்திற்கு வந்த பொலிஸார் எரிகின்ற உருவப் பொம்மைக்கு தண்ணீர் ஊற்றி நெருப்பைப் ஆற்றுப்படுத்தினர்.

இவை யாழ்.நகர மையத்தில் நடந்து கொண்டிருக்க, யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் சாத்வீகமான முறையில் போராட்டத்தை நடத்திக் கொண்டிருந்தது.


தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் சரா. புவனேஸ்வரன் இப் போராட்டத்திற்கு தலைமை வகித்தார்.

இதற்கு முன்னதாக மாதர் அமைப்புகள், இளைஞர் சேவை மன்றங்களின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் பொது நூலக வளாகத்தில் இருந்து ஆரம்பமாகிய பேரணி, யாழ். பொலிஸ் நிலைய வீதி வழியாக யாழ். செயலகத்தை சென்றடைந்தது.

யாழ். செயலகத்தில் ஒன்று திரண்ட பேரணியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலெஸ்ரின், வடக்கு மாகாண அவைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம், வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான த.சித்தார்த்தன், திருமதி ச. அனந்தி, கே. சயந்தன், விந்தன் கனகரத்தினம், இ.ஆனோல்ட், எஸ். சிவயோகன், பா.கஜதீபன் உள்ளிட்ட மாகாண சபை உறுப்பினர்கள், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைச் சேர்ந்த கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செ.கஜேந்திரன் ஆகியோரும் கத்தோலிக்க மதகுருமாரும் இதில் கலந்து கொண்டனர்.

யாழ்.செயலகத்தில் ஒன்று கூடியவர்கள் யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகனிடம் மகஜர் கையளித்ததுடன் வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்திற்கு பேரணியாகச் சென்று ஆளுநரின் செயலாளர் எல்.இளங்கோவனிடம் மகஜரைக் கையளித்தனர்.

இதேவேளை வடக்கு மாகாண முதலமைச்சருக்கான மகஜர் அவைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானத்திடம் ஒப்படைக்கப்பட்டது.



(வளரும்)

-புருசோத்தமன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி மாவட்ட செயலகத்திற்கு பிரித்தானிய உயர்ஸ்தானிகர் விஜயம்



இலங்கை மற்றும் மாலைதீவுக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் ஜேம்ஸ் டோரிஸ் நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட செயலகத்துக்கு விஜயம் செய்துள்ளார்.

மேற்படி விஜயத்தின் போது மேலதிக அரசாங்க அதிபர் சி.சத்தியசீலனுடன் விசேட கலந்துரையாடல் ஒன்றை நடத்தியிருந்தார்.

இக்கலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி, கிளிநொச்சி மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் தற்போது ஏற்பட்டிருக்கும் வரட்சி பாதிப்புகள் போன்ற விடயங்கள் ஆராயப்பட்டன. (2-312)

# கிளிநொச்சி மாவட்டத்தில் வரட்சியினால் 26 ஆயிரத்து 703 குடும்பங்கள் பாதிப்பு

## அரசாங்க அதிபர் தெரிவிப்பு

கிளிநொச்சி மாவட்டத்தில் வரட்சியினால் 26 ஆயிரத்து 703 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமை நாயகம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில், கிளிநொச்சி மாவட்டத்தில் நிலவுகின்ற கடுமையான வரட்சி காரணமாக பல்வேறு பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

குறிப்பாக, விவசாயம், நன்னீர் மீன்பிடி, சிறு கடற்றொழில் என்பன பாதிக்கப்பட்டதுடன், பல குடும்பங்கள் வாழ்வாதார தொழில்களையும் இழந்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள 95 கிராம அலுவலர் பிரிவுகளிலும் 26 ஆயிரத்து 703 குடும்பங்களைச் சேர்ந்த 91 ஆயிரத்து 243 பேர் வரையில் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள்.

தற்போது 42 கிராம அலுவலர் பிரிவுகளில் உள்ள ஐயாயிரத்து 171 குடும்பங்களைச் சேர்ந்த 18 ஆயிரத்து 809 பேருக்கான குடிநீர் விநியோகம் மேற் கொள்ளப்படடு வருகின்றது.இதற்காக அனர்த்த முகாமைத்துவ அமைச்சினூடாக எட்டு பவுசர்களும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினூடாக 6 பவுசர்களும் வழங்கப்பட்டு குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது வரட்சியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு குடிநீர் விநியோகம் மற்றும் உலருணவு விநியோகங்களுக்காக 79.222 மில்லியன் ரூபா நிதி கிடைக்கப் பெற்றிருக்கின்றது.

குறித்த நிதியினூடாக மற்றும் உலருணவு விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவற்றை விட இன்னும் 29.042 மில்லியன் ரூபா நிதி தேவைப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2)

# தவறி விழுந்த குடும்பஸ்தர் மரணம்

உழவு இயந்திரத்தின் மட்காட்டில் இருந்து தவறுதலாக வீழ்ந்ததில் தலையின் பின்பகுதி அடிபட்டு குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார்.

முல்லைத்தீவு முள்ளியவளை தண்ணீரூற்று மேற்கைச் சேர்ந்த துரை சிங்கம் நிசாந்தன் (வயது-34) என்ற ஒரு பிள்ளையின் தந்தையே நேற்று முன்தினம் காலை உயிரிழந்தவராவார்.

இச் சம்பவம் தண்ணீரூற்று புதறி குடா பகுதியில் நடைபெற்றது.

இவரது உடலம் மாஞ்சோலை மாவட்ட வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு வீதிப் போக்குவரத்து பிரிவு பொலிஸாரின் விசாரணைகளின் பின்னர் உடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது. இவர் முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தின் சமுர்த்தி திட்டபிரிவில் பணியாற்றும் பணியாளராவார். உழவு இயந்திரம் ஓட் டிச்சென்ற நபர் பொலிஸாரின் விசாரணைக்கு அழைத்து செல்லப்பட்டுள்ளார். (2-310-281)

# மாயவனூரில் மூன்று டெங்கு நோயாளர்கள் அடையாளம்



வட்டக்கச்சி மாயவனூர் பகுதியில் 200 மீற்றர்கள் இடைவெளிக்குள் மூன்று டெங்கு நோயாளிகள் இனங் காணப்பட்டுள்ளனர்.

இவர்களில் இருவர் கொழும்புப் பிரதேசத்திலிருந்து காய்ச்சல் காரணமாக கிளிநொச்சிக்கு வந்து சிகிச்சை பெற்ற அதேவேளை, அவர்களது வீட்டின் அருகே வசிக்கும் ஒருவருக்கு டெங்கு நோய் தாக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எனவே டெங்கு நோய் காவும் நுளம்புகள் மேலும் பரவி அப்பிரதேசத்தில் உள்ள மக்களுக்கு உயிராபத்தினை ஏற்படுத்துவதைத் தடுக்கும் நோக்கில் உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.


இதற்கமைய அப்பகுதியில் காணப்படும் டெங்கு நோய்காவி நுளம்புகளை அழிப்பதற்காக விசேட புகையூட்டல் மேற்கொள்ளப்பட்டதுடன், வீதிநாடகம், மக்கள் அமைப்புகள் ஊடாக விழிப்புணர்வு, வீடுவீடாக சென்று நுளம்பு பெருகும் இடங்கள் பொருட்கள் என்பவற்றை இனங்கண்டு அகற்றுதல் ஆகிய செயற்பாடுகள் மூலம் டெங்கு பரப்பும் நுளம்புகளின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கான செயற்பாடுகள் துரிதமாக மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

இந்த விழிப்புணர்வு மற்றும் அபாயத் தவிர்ப்பு நடவடிக்கைகளில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த மருத்துவபீட மாணவர்களும் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அதேவேளை கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் இவ் வருடத்தில் இதுவரை 831 பொதுமக்கள் டெங்கு தொற்றுக்கு இலக்காகி இருக்கலாம் என்ற சந்தேகத்தில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

இவர்களுள் 627 பேர் கிளிநொச்சி மாவட்டத்தை வதிவிடமாகக் கொண்டவர்கள். 627 பேரில் 203 பேருக்கு டெங்குத் தொற்று இருந்தமை குருதி மாதிரிப் பரிசோதனை மூலம் தெரிய வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-312)

# நிறுத்தப்பட்டிருந்த பாரவூர்தியுடன் ஹன்டர் வாகனம் மோதுண்டு விபத்து

## ஒருவர் பலி; 4 பேர் படுகாயம்



(குருமன்காடு)

வவுனியா, ஏ-9 வீதி களுகன்னாமடுவில் நடைபெற்ற வாகன விபத்தில் ஒருவர் பலியாகியுள்ளதுடன், நால்வர் படுகாயமடைந்துள்ளனர்.

இச் சம்பவம் நேற்று காலை இடம் பெற்றது. இவ் விபத்து பற்றி தெரியவருவதாவது,

கொச்சிக்கடையில் இருந்து கிளிநொச்சி நோக்கி ஓடுகளை ஏற்றிப் பயணித்த பாரவூர்தி களுகன்னா மடுவில் திடீரென ஏற்பட்ட வாகன கோளாறு காரண மாக நிறுத்தப்பட்டிருந்தது. இந் நிலையில் அநுராதபுரத்தில் இருந்து வவுனியா நோக்கிப் பயணித்த ஹன்டர் ரக் வாகனம் நிறுத்தி வைக்கப்பட்ட பாரவூர்தியுடன் மோதி விபத்துக்குள்ளானது.

இவ்விபத்தில் ஒருவர் பலியானதுடன் நான்கு பேர் படுகாயமடைந்து வவுனியா பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ் விபத்தை ஏற்படுத்திய ஹன்டர் ரக வாகன சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணையையும் வவுனியா இரட்டை புளியங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2-250)


# பகிரங்க மணல் ஏல விற்பனை

கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்ற வளாகத்தில் பகிரங்கமணல்ஏலவிற்பனை நாளை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளதாக நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார்.

ஏலவிற்பனைக்கான மணலினை ஏலவிற்பனை ஆரம்பமாவதற்கு அரை மணித்தியாலத்திற்கு முன்பாக பதிவாளரின் அனுமதியுடன் பார்வையிடலாம் என தெரி விக்கப்பட்டுள்ளது. (2)

வன்னி வலம்

# ஜப்பானிய அரசின் 400 மில்லியன் நிதியில் மண்டைக் கல்லாறு பாலம் நிர்மாணம்



ஜப்பானிய அரசின் ஜெய்க்கா திட்டத்தின் கீழ் 400 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் கிளிநொச்சி பூநகரி மண்டைக் கல்லாறு பாலம் நிர்மாணிக்கப்பட்டு வருகிறது என கிளிநொச்சி வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நிறைவேற்றுப் பொறியியலாளர் தெரிவித்துள்ளார்.

2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்ட பணிகள் 21 மாதங்களில் நிறைவுபெறவுள்ளது. மீள்குடியேற்றத்தின் பின்னர் கிளிநொச்சி மாவட்டத்தின் பிரதான வீதிகள் புனரமைப்பு செய்யப்பட்ட போது பூநகரி முழங்காவில் ஊடாக மன்னார் பிரதான வீதியில் காணப்படுகின்ற மண்டைக் கல்லாறு பாலம் அமைந்துள்ள பகுதியில் எவ்வித பணிகளும் மேற்கொள்ளப்படாது தவிர்க்கப்பட்டு புதிதாக நவீன முறையில் பாலம் அமைக்கும் பணிக்கான திட்டமிடல்கள் மேற்கொள்ளப்பட்டு ஜப்பானிய அரசின் ஜெய்க்கா திட்டத்தின் 400 மில்லியன் ஒதுக்கப்பட்டு 2016 நவம்பரில் பாலம் அமைக்கும் பணிகள்முன்னெடுக்கப்பட்டன.

95 மீற்றர் நீளமும், 7.4 அகலமும் கொண்ட மண்டைக் கல்லாறு பாலத்தில் 1.5 நடைபாதையும்கொண்டதாக அமைக்கப்படவுள்ளது. இந்த பாலத்தில் பூநகரி சங்குபிட்டி பாலம் போன்று நடுப்பகுதி உயர்வாக கொண்ட பாலமாக அமைக்கப்படவுள்ளது எனவும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறியியலாளர் தெரிவித்தார். (2-312)

# சர்வதேச மன்னிப்புச் சபையினர் போராட்ட கள உறவுகளுடன் சந்திப்பு




(பனிக்கன்குளம்)

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் நேற்று 176 ஆவது நாளாகவும் முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக கூடாரம் அமைத்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்களின் போராட்ட இடத்திற்கு நேற்று முன்தினம் சர்வதேச மன்னிப்புச்சபை உறுப்பினர்கள் வருகை தந்து மக்களுடன் கலந்துரையாடினர்.

அத்துடன் போராட்டம் தொடர்பாகவும் அரசாங்கம் இவர்களுக்கு என்ன பதிலளித்துள்ளது என்பது தொடர்பிலும் விரிவாக கேட்டறிந்து கொண்டனர்.

தமது உறவுகளுக்கு என்ன நடந்தது, அவர்கள் இருக்கிறார்களா? இல்லையா? என்று ஜனாதிபதி உடன டியாக பதில் கூற வேண்டு மெனவும் அதுவரை தமது போராட்டத்தை கைவிடப் போவதில்லை என தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் இதன் போது வலியுறுத்தியுள்ளனர். (2-281)

# விடுமுறை வேதாகம பாடசாலை

தென்னிந்திய திருச்சபை தூத்துக்குடி திருமண்டலத்தின் சிறுவர் ஊழியத்தின் பாரியநண்பர் குழுவினரின் ஏற்பாட்டில் விடுமுறை வேதாகம பாடசாலை இடம்பெற்றது. கிளிநொச்சி முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களை சேர்ந்த சுமார் 150 இற்கு மேற்பட்ட மாணவர்களின் பங்குபற்றுதலுடன் குறித்த வேதாகம பாடசாலை கிளிநொச்சி தென்னிந்திய திருச் சபையில் இடம்பெற்றது. கடந்த திங்கட்கிழமை ஆரம்பிக்கப்பட்ட குறித்த பாடசாலை நேற்று புதன்கிழமை முடிவுக்கு கொண்டு வரப்பட்டது.

தென்னிந்திய திருச்சபையின் யாழ். திரு மண்டலத்தின் பேராயர் அதி வண கலாநிதி டொனியல் எஸ். தியாகராஜாவின் ஏற்பாட்டில், தென்னிந்திய திருச்சபை நிறைவாழ்வு மையத்தின் ஒழுங்குபடுத்தலுடன் தூத்துக்குடி திரு மண்டலத்தின் பாரிய நண் பர் சிறுவர் ஊழிய குழுவினரினால் குறித்த விடுமுறை வேதாகம பாடசாலை இடம்பெற்றது, நிறைவில் பங்குபற்றிய சிறுவர்களிற்கான சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டதுடன் பரிசில்களும் வழங்கி வைக்கப்படடமை குறிப்பிடத்தக்கதாகும். (2-312)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனியும் காலத்தை கடத்தாதே கண்ணீருக்கு பதில் கூறு அரசே!




(படங்கள்:- உ.சாளின், பொ.சோபிகா, குருமன்காடு , பரந்தன் , பனிக்கன்குளம் செய்தியாளர்கள் )

### வவுனியா

சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினம் நேற்று வடக்கில் முன்னெடுக் கப்பட்டது.

அந்த வகையில் கிறிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால் கண்ணீர் மல்க கவனயீர்ப்பு போராட்டங்கள் அந்தந்த மாவட்டங்களில் நேற்றுக் காலை நடைபெற்றது.

வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், மக்கள் பிரதிநிதிகள், பொது அமைப்புக்கள் இணைந்து ஆர்ப்பாட்டம் ஒன்றினை முன்னெடுத்ததுடன், பேரணி ஒன்றினையும் மேற்கொண்டனர்.

வடக்கு, கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான குரல் அமைப்பின் ஏற்பாட்டில் வவுனியா பேருந்து நிலையம் முன்பாக முற்பகல் 10 மணிக்கு ஆர்ப்பாட்டம் இடம் பெற்றதுடன், அதன் பின் ஏ-9 வீதி வழியாகச் சென்ற பேரணி 188 ஆவது நாளாக காண்ணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் போராட்டம் மேற்கொள்ளப்படும் இடத்திற்குச் சென்று, அங்கிருந்து வவுனியா நகரசபை மண்டபத்தை சென்றடைந்தது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் "எங்கே எங்கே எமது பிள்ளைகள் எங்கே, நல்லாட்சி அரசே காணாமல் ஆக்கப்பட்டோருக்கு பதில் கூறு, இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைத்தா, அரசே இனியும் காலத்தை கடத்தாதே" உள்ளிட்ட கோசங் களையும் எழுப்பியிருந்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான் ம.தியாகராசா, இ.இந்திரராசா, முன்னாள் மாகாண சபை உறுப்பினர் செ.மயூரன், அரசியல் ஆய்வாளர்களான நிலாந்தன், சி.ஆ. ஜோதிலிங்கம், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

### கிளிநொச்சி

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் கிளிநொச்சி மாவட்டத்திலும் பேரணியுடன் கூடிய கவனயீர்ப்புப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

காணாமல் ஆக்கப்பட்டோரை மீட்டுத்தருமாறு வலியுறுத்தி தொடர் போராட்டம் நேற்றுடன் 192 ஆவது நாளாக இடம்பெற்றுவரும் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்திற்கு அருகில் ஆரம்பமான கவனயீர்ப்புப் போராட்டம் ஊர்வலமாக கிளிநொச்சி மாவட்ட செயலகம் வரை சென்றது.

மாவட்ட செயலகத்தைச் சென்றடைந்த காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் மாவட்ட செயலக முன்றலில் ஒன்றுகூடி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், தமது உறவுகள் தொடர்பில் தீர்க்கமான பதில் வழங்கப்பட வேண்டும். ஜனாதிபதியின் வாக்குறுதியும் பொய்யானது என்று பல்வேறு பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்

இப் போராட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், சமூக ஆர்வலர்கள், பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், முன்னாள் வடக்கு மாகாண கல்வியமைச்சர் த.குருகுலராஜா எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

### முல்லைத்தீவு

முல்லைத்தீவு மாவட்ட




வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் முன்னெடுத்த கவனயீர்ப்புப் போராட்டம் நேற்றுக் காலை 10 மணியளவில் முல்லைத்தீவு நகரப்பகுதியில் இருந்து ஆரம்பமாகி முல்லைத்தீவு மாவட்டத்தைச் சென்றடைந்தது

இந்தக் கவனயீர்ப்பில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பிரேமச்சந்திரன், வடக்கு மாகாண விவசாய அமைச்சர் க.சிவநேசன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான எம்.கே. சிவாஜிலிங்கம், து.ரவிகரன், ஆ.புவனேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

### மன்னார்

மன்னாரில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடும் குடும்பங்களின் சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்றுக் காலை 9 மணியளவில் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப் பட்டது.

கவனயீர்ப்பில் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த அனைத்து அமைப்பினர்கள், நலன்விரும்பிகள், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், பொதுமக்கள், குருக்கள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இந்தப் போராட்டங்களின் போது விசேட அதிரடிப்படை, இராணுவம் மற்றும் புலனாய்வு பிரிவினர் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களை புகைப்படம் எடுத்தும் அச்சுறுத்தியிருந்தனர்.

(2-250-4-312-281)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைத் தரிசனம்



கலைமாமணி
திருமதி சண்முகப்பிரியா கனகசுந்தரசுவாமி
அவர்களுடனான சந்திப்பு

**1956 இல் கலைகளின் விளைபூமியான இணுவிலில் க. நல்லையா அவர்களின் மகளாக அவதரித்து கலைக்காய் தன்னை அர்ப்பணித்து இன்றுவரை கலைப்பணி ஆற்றி வரும் திருமதி சண்முகப்பிரியா கனகசுந்தரசுவாமி அவர்கள் தன் கலைப்பணி பற்றி மனம் திறந்து கூறியவை வலம்புரியில் பிரசுரமாகிறது.**

**❖ தாங்கள் கலைத் துறையில் எவ்வாறு கால் பதித்தீர்கள்?**

நான் 1956 ல் கலைகளின் பாரம்பரிய இடமான பல கலைஞர்களை உருவாக்கிய இணுவில் கிராமத்தில் பிறந்தேன். எனது தாய்-தந்தை இருவரும் ஆசிரியர்கள். எனது தந்தையார் திரு. க. நல்லையா அவர்கள். ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் (பலாலி) இசையைக் கற்று இசையில் நல்ல தேர்ச்சி யுள்ளவர். 56 வது மேளகர்த்தா இராகத்தை எனக்குப் பெயராகச் சூட்டி சங்கீதத்தைப் படி என்று எனக்கு ஆர்வத்தை ஊட்டினார்கள். பாடல் களும் நன்றாகப் பாடுவார். எனது 10 ஆவது வயதில் இணுவில் வயலின் வித்துவான் இராதாகிருஷ்ணனின் தந்தையாரிடம் இசை யைக் கற்றேன். பின்பு இராமநாதன் கல்லூரியில் எனது பாடசாலைக் கல்வியையும் பிற்பகல் வேளையில் நுண்கலைக் கல்லூரியில் சங்கீதத்தைக் கற்று வந்தேன். 1974 ஆம் ஆண்டு யாழ். பல்கலையுடன் இணைக்கப்பட்டு 4 ஆவது வருடம் சங்கீத டிப்ளோமா பட்டம் பெற்றேன். உப பாடமாக வீணையும் கற்றேன்.

**❖ சங்கீதத்துறையில் மாணவர்கள் ஆர்வம் எப்படியிருக்கின்றது?**

நான் ஆரம்பத்தில் 2 வருடம் இணுவில் இந்துக் கல்லூரியில் தற்காலிக ஆசிரியராகவும் 82 ஆம் ஆண்டு முதல் நியமனம் கிடைத்து 8 வருடம் வவுனியா மாவட்டத்திலும் 24 வருடங்கள் முல்லைத்தீவு மாவட்டத்திலும் கடமையாற்றினேன்.

**❖ தாங்கள் இயற்றிய பாடல்கள் பற்றி?**

நான் காபி, சண்முகப்பிரியா, இரஞ்ஜனி, கம்சானந்தி போன்ற இராகங்களில் பாடல்கள் இயற்றி இசையமைத்துள்ளேன். கோயில்களில் பஞ்ச புராணம் பாடி நவசந்திப் பாடல்கள், பஜனைப்பாடல்கள்பாடியுள்ளேன்.

இயல், இசை வாரிதி வீரமணி ஐயா அவர்கள் இயற்றிய பாடல்களுக்கும் இசையமைத்துப் பாடியுள்ளேன். புதுக்குடியிருப்பு கள்ளியடி வயலைப் பற் றிய பாடல் பாடி இசையமைத்து 2010 குழு முதலாம் இடத்தைப் பெற்றது. செ. திவ்வியன் முதலாம் இடத்தையும் பெற்றார். (மாவட்டத்தில்)

பாடசாலைக் காலத்தில் தங்களின் பணி பற்றி பண்ணிசைப் போட்டி நடுவர் தமிழ்த்தினப் போட்டி நடுவர், O/L, A/L செயன் முறைப் பரீட்சை நடுவர், இடப்பெயர்வின் போது நெளுக் குளம் மகா வித்தியாலயத்தில் 4 மாணவிகள் சங்கீதம் எடுத்து நுண்கலைக்கு தெரிவாகினர். புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் நானும் தவரத்தினம் ஆசிரியரும் சேர்ந்து பல மாணவர்களுடன் போராடி நுண்கலைக்கு அனுப்பி வைத்தோம்.

2013இல் நான் கற்பித்த மாணவிகள் 10 பேரும் திறமைச் சித்தியுடன் சித்தியடைந்து 3 பேர் நுண்கலைக்கு போனார்கள். 2 வருடங்கள் அணியினருக்கும் பொறுப்பாக இருந்தேன். தொலைக் கல்வி ஆசிரியராகவும் 2 வருடங்கள் கடமையாற்றினேன்.

1982 ஆண்டு வீரமணி ஐயாவின் பாடலுக்கு நான் இசைய மைத்து குழுப் பாடல் (நாட்டார்) அகில இலங்கையில் 2 ஆம் இடம் கிடைத்தது. எனது மாணவிகள் சங்கீத ஆசிரியைகளாகவும் இருக்கிறார்கள். வவுனியா மாவட்டத்தில் ஆர்வம் நன்றாக இருந்தது.

நான் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு வந்ததும் முல்லைத்தீவு மாவட்டத்திலும் 3/4 வாசி மாண வர்களும் ஆர்வமுள்ளவர்களாக இருந்தார்கள். பண்ணிசை, நடனம், பாட்டு நாட்டுக் கூத்து நிகழ் ச்சிகளிலும் மாணவர்கள் நல்ல ஆர்வமாக இருந்தார்கள். நாட்டுக் கூத்து நிகழ்ச்சிகளில் திரு. சரவணபவன்ஆசிரியர், செல்வநாயகம் ஆசிரியர், ரவீந்திரராஜா இளங்கோ ஆசிரியர்கள் மிகுந்த ஆர்வத்துடன் பல மாணவர் களை உருவாக்கினார்கள். நானும் பாடல்கள பாடி அவர்களுக்கு உதவி செய்தேன்.

**❖ தங்களின் சங்கீத அரங்கேற்றங்கள் பற்றி?**

நான் 15 ஆவது வயதில் இராமநாதன் கல்லூரி இசையாசிரியை செல்வி யோகாம்பிகை செல்லையா அவர்களுடன் சேர்ந்து நாட்டிய நிகழ்ச்சிகளிலும் செல்வி பேரின்பநாயகி, திருமதி. தவரத்தினம் ஆகியோருடன் சேர்ந்து நாட்டுக்கான நிகழ்ச்சிகளிலும் பாடிப் பாராட்டுப் பெற்றிருக்கின்றோம்.

**❖ சங்கீதத்துறை சார்ந்த வகுப்புக்கள் நடைபெறுகின்றனவா?**

அறநெறிப் பாடசாலைகளில் பண்ணிசை அறநெறிப் பாடங்கள் நடைபெறுகின்றன. புதுவையாள் நுண்கலைக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு திருமதி அற்புதராஜா, திருமதி யோதிலிங்கம், கோமகள் கமலதாசன் ஆகியோருடன் நானும் சிறிதுநாள் கற்பித்தேன்.

**❖ தாங்கள் பெற்ற வெற்றிகள், விருதுகள் பற்றி?**

தமிழ்த்தினப் போட்டிகளில் இசை,நடனநிகழ்ச்சிகள்மாகாண மட்டத்தில் வெற்றிபெற்றமை, நாட் டுக்கூத்து நாடகம் 2005, 2006 மாகாண மட்டத்தில் முதலிடம் கிடைத்தது.

2007 இல் செல்வி ஜனரஞ்ஜனி தவரத்தினம் தனி நடனத்தில் மாகாணத்தில் முதலாமிடம் பெற்றது, இடப்பெயர்வின் முன் நாட்டுக்கான நிகழ்ச்சிகளில் செல்வி பேரின்பநாயகி ஆசிரியருடன் நானும் திருமதி தவரத்தினமும் சேர்ந்து பாடி பாராட்டுப் பெற்றமை.

2010 இல் நான் இயற்றிய புதுக்குடியிருப்பு கள்ளியடி வய லைப்பற்றிய பாடல் மாவட்டத்தில் முதலிடம், செ.திவ்வியன் தனிப்பாடலில் முதலிடமும் பெற்றமை.

2016 இல் நடைபெற்ற எம்.ஜி. ஆரின் 100 ஆவது ஆண்டு விழாவில் (சர்வோதயம்) கலைமாமணிப் பட்டமும் கிடைத்தது.

**❖ இறுதியாக மனந்திறந்து கூறுவது?**

எனது கணவர் வீ.கனகசுந்தரசுவாமி (முன்னாள் மாகாண சபை உறுப்பினர்) நான் கலையை வளர்ப்பதற்கு பெரிதும் உதவியாக இருந்தவர்.

அவரது சுகயீனம் காரணமாக 2013 இல் நான் ஓய்வு பெற்று விட்டேன். எனது பிள்ளைகளும் கலையில் ஆர்வமுடையவர்கள். சங்கீத பாடத்தில் A சித்தி எடுத்த வர்கள். நான் பிள்ளைகளுடன் கஷ்டப்பட்டுக் கலையை வளர்த்தேன். எனது பிள்ளைகளுக்கு கலைமகள் நல்ல கல்வியைத் தந்துள்ளார். கவலைகளை மறப்பதற்கு கலை ஒரு உந்து சக்தியாக உள்ளது. கலையினால் ஒருமனிதனின் ஆளுமை விருத்தியடைகி றது. இசையால் வசமாகா இதயமெது. இறைவனைப் பாடுவதே எனது பணி. எனது உயிருள்ளவரை கலையை வளர்ப்பேன் என உறுதி செய்கிறேன். எனது பிரதேசப் பிள்ளைகளும் கலையில் சிறந்து விளங்க என் நல்லாசிகள்.

**எனக்கு கற்பித்த ஆசிரியர்கள்**

*செல்வி யோகாம்பிகை செல்லையா- இசை*

*திருமதி பரந்தாமன்- இசை*

*திரு.கனகசுந்தரம்- பண்ணிசை*

*திருமதி பாக்கியராஜா- இசை*

*திருமதி ஜெகதாம்பிகை- இசை*

*செல்வி திவ்யரஞ்ஜனி- வீணை*

இன்றும் எனது ஆசிரியர்களை சிரம்தாழ்த்தி வணங்குகின்றேன்.



## ‘எனது உயிர் உள்ளவரை கலைக்காகவே வாழ்வேன்’

நேர்காணல்:
**ஜெயம் ஜெகன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஷஷிக்கு எதிரான வழக்கு ஒக்டோபருக்கு ஒத்திவைப்பு



(கொழும்பு)

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப் பினருமான விமல் வீரவன்சவின் மனைவியான ஷஷி வீரவன்சவுக்கு எதிரான வழக்கின் சாட்சியப் பதிவு, ஒக்டோபர் 9ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

இந்த வழக்கு, பிரதான நீதவான்லால் ரணசிங்க பண்டார முன்னிலையில், நேற்று முன்தினம் எடுத்துக் கொள்ளப்பட்ட போது, 7ஆவது சாட்சியான ஆட்பதிவுத் திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் இந்திக குமாரலியனகேயின் 7 வயதான மகள், சுகயீனம் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்றும், அந்தத் தகவல் தமக்கும் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கும் அறிவிக்கூப்பட்டுள்ளது என்றும், பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ், மன்றில் அறிவித்தார்.

இதனால், வழக்கு விசாரணையை ஒத்திவைக்குமாறும் அறிவித்த அவர், 10 ஆவது சாட்சியாளரான தற்போது சுங்கத் திணைக்களத்தில் கடமையாற்றும் அதிகாரி, கடமை நிமித்தம் மன்றுக்கு சமுகமளிக்க முடியாது என்று, நீதிமன்றத்துக்கும் தனக்கும் கடிதம் மூலம் அறிவித்துள்ளார் என்பதைச் சுட்டிக் காட்டியதுடன், காரணம் குறிப்பிடாததால் அதை ஏற்றுக் கொள்ள முடியாது என்றார்.

ஷஷி வீரவன்ச, போலிப் பெயர் மற்றும் போலியான பிறந்த தினத்தைக் கொண்டு இரண்டு அடையாள அட்டைகளை எடுத்துள்ளமை தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்ததுடன், அவற்றைக் கொண்டு இராஜதந்திர மற்றும் சாதாரண கடவுச்சீட்டுக்களை பெற்ற குற்றச்சாட்டு தொடர்பில், குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் வழக்குத் தொடரப்பட்டது.

ஷஷி வீரவன்ச, செப்டெம்பர் 6ஆம் திகதிமுதல் 16ஆம் திகதி 'வரை வெளிநாடு செல்லவுள்ளார் என்றும் அவருடைய கடவுச்சீட்டை விடுவிக்குமாறும், ஜனாதிபதி சட்டத்தரணி ஜயந்த வீரசிங்க மன்றில் கோரினார்.

தற்போது உள்ளது இராஜதந்திரக் கடவுச்சீட்டு என்பதால், அதை வழங்குவதற்கு ஆட்சேபனை தெரிவித்த பீரிஸ், அதனைக் கொண்டு வேறு கடவுச்சீட்டு பெறுவதற்கு வாய்ப்புள்ளது என்றும் சுட்டிக்காட்டினார்.

வெளிநாடு செல்ல விசா எடுக்கும் போது, ஏனைய கடவுச்சீட்டின் விபரம் கோரப்படும் என்பதால், நீதிமன்றத்தில் கடவுச்சீட்டு உள்ளது என்று, சான்றுப்படுத்திய ஆவணமொன்றை வழங்குமாறு வீரசிங்க கோரியமைக்கு, நீதவான் அனுமதி வழங்கினார்.

அத்துடன், 10 ஆவது சாட்சிக்கு நோட்டீஸ் பிறப்பித்து உத்தரவிட்டார். (இ-7)


1 ஆவது பிறந்த நாள் வாழ்த்து

செல்வன்

கி.மதுகரன்

திரு.திருமதி.கிரிகரன் லோகானந்தி தம்பதிகளின்
செல்வப் புதல்வன் மதுகரன்
தனது 1வது பிறந்த நாளை
2017.08.31 இன்று தனது இல்லத்தில்
வெகு சிறப்பாகக் கொண்டாடுகிறார்.

(236)

Best Wishes

இவரை எல்லாச் செல்வங்களுடன்
பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துவோர்:
அப்பா, அம்மா, அம்மப்பா, அம்மம்மா,
பெரியப்பா, பெரியம்மா, மாமா, அத்தை,
அண்ணாமார், அக்காமார்,மச்சான்மார்.

42/59, ஒட்டுமடம்,
யாழ்ப்பாணம்.



யாரிடம் பேசுவது?

யார் என்னைப் புரிந்து கொள்வார்?
நான் வாழ்ந்து என்ன பிரயோசனம்?
நான் என்ன தவறு செய்தேன்?
என்னால் எதுவுமே முடியவில்லை ....
என்பன போன்ற எண்ணங்களா?

எம்முடன் பேசுங்கள்.

கை கொடுக்கும் நண்பர்கள்
104, 4 ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்
*மதசார்பற்றது, *ரகசியமானது * இலவச சேவை
021 222 8117, 077 900 8776
வவனியாவில்: (024) 324 4444
(சனி, ஞாயிறு காலை 9.00 - 1.00)



சென்ஜோன் அம்புலன்ஸ் சேவைக்கு ஆட்சேர்ப்பு

யாழ். மாவட்ட சென்ஜோன் அம்புலன்ஸ் இல் கீழ்க்குறிப்பிட்ட சேவைகளுக்கு ஆட்சேர்ப்பு

1.அம்புலன்ஸ் சாரதி (A தர சாரதி அனுமதிப்பத்திரத்துடன் 05 வருடங்களுக்கு குறையாத அனுபவம் அவசியம்)
2.எழுதுவினைஞர் (கணனி அனுபவம் அவசியம்)
3.நிர்வாக உத்தியோகத்தர் (ஆண்கள்)
4.ஆண், பெண் நோயாளர் பராமரிப்புத் தொண்டர்கள் (ஆண் தொண்டர்களிற்கு நாள் ஒன்றிற்கு 1300/= ஊக்குவிப்பு கொடுப்பனவாக வழங்கப்படுகின்றது)

தகுதியானோர் உரிய சான்றிதழ்களுடன் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை 03.09.2017 அன்று பி.ப. 03.00 மணிக்கு இல.161, 1 ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள சென்ஜோன் அம்புலன்ஸ் யாழ். மாவட்ட தலைமை அலுவலகத்திற்கு சமுகம் தரவும்.

மேலதிக விபரங்களுக்கு அவசர அம்புலன்ஸ் சேவை தொ.பேசி இலக்கம்: 021 321 4444

திரு.செ. செல்வறஞ்சன்
மாவட்ட ஆணையாளர்,
சென்ஜோன் அம்புலன்ஸ், யாழ். மாவட்டம். (275)



சிவமயம்



காரைநகர்-களபூமி-தன்னையம்பதி

ஸ்ரீ சித்தி விநாயகர் திருக்கோயில்

திருக்குடமுழுக்கு வணக்கப்பாமாலை

ஆவணி மூலம்

கணபதி திட்டினின்று
கருணையால் வந்த தெய்வம்
இணையிலா காரைதீவு
இருந்தருள் பழைய மூர்த்தி
குணவீதியோரம் சேரும்
களபூமி பதியில் நின்றே
பணிவோர்க்கு அருளுகின்ற
பரமனை போற்றி வாழ்வாம்

முருகேச ஐயர் அன்று
முந்து தமிழில் யமகமாக
அருளுறு அந்தாதி ஒன்று
அன்பினால் பாடி நிற்க
இருளகல் இராமேசுரத்து
ஈடிலா மறையோர் வாழ்த்த
முருகுயர் கோயில் கொள்
மூத்த பிள்ளையடி போற்றி

கும்ப கோண கௌணியர்
காரை நகர் கார்த்திகேயர்
தும்பி முகற்கே ஊஞ்சல்
தூய தமிழில் தந்து போற்ற
எம்பிரான் எனும் பக்தியில்
எந்தை குமாரசாமி குரு ஏத்த
நம்புமுயர் தொன்மை பேர்
நற்றவ கோயில் இதுவன்றோ

கற்றளி திருப்பணி செய்து
காரை நகரடியர் போற்ற
பற்றுடை மானாமுதலி முதலாம்
பாங்குயர் வழிவழி அடியர்
உற்றதாம் பணிகள் ஆற்றி
உரிய நல்லருளே பெறும்
நற்றவ சித்தி நாயகர் குடமுழுக்கு
நாடியாட போற்றுவோமே

(271)

க.வி.மயூரகிரி.

பிரம்மஸ்ரீ.சே.கா.குமாரஸ்வாமி குருக்கள்
குடும்பத்தினர்.



கல்யாணமாலை
சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 57செவ் 12 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: இத்தாலி குடியுரிமை<br>தொ.இ: B/6887 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 45சூரிசெவ் 6 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/4158 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 37உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:பொறியியளாளர்<br>தொ.இ: B/6888 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 58செவ் 7 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:O/L<br>தொ.இ: G/4160 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 49செவ் 7 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:NCAT/ அரசதொழில்<br>தொ.இ: B/6893 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 62சூரிசெவ் 8 இல்<br>தகைமை/தொழில்:A/Lஅரசதொழில்<br>தொ.இ: G/4165 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில் :O/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/6894 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 6<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:O/Lஎதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/4168 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு
சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## தைரியமான முடிவுகளை எடுத்து உறுதியுடன் செயற்படுத்துகின்றோம்

### பிரதமர் மோடி பெருமிதம்



(ராஜஸ்தான்)

ராஜஸ்தானில் பல நெடுஞ் சாலைத் திட்டங்களைத் தொடங்கி வைத்த பிரதமர் மோடி பெரும் பேரணி ஒன் றில் உரையாற்றிய போது. தைரியமான முடிவுகளை எடுத்து அதனை உறுதியு டன் தமது அரசு செயற்படுத்தி வருவதாகத் தெரிவித்தார்.

தேசிய ஜனநாயகக் கூட் டணி ஆட்சியைப் பிடித்த போது ஒட்டுமொத்த அமைப் பும் 'முடங்கிக் கிடந்தது' என்றார் பிரதமர் மோடி.

கேல்கவானில் பெரிய கூட்டம் ஒன்றில் பேசிய பிரத மர் மோடி தெரிவித்ததாவது.

அத்தகைய சூழ்நிலை யில் பலவீனமான ஒருவர் நிச்சயம் அச்சுறுத்தப்பட்டிருப் பார். ஆனால் நாங்கள் வேறு மண்ணிலிருந்து வந்துள் ளோம். நாங்கள் சவால்களை எதிர்கொண்டு தீர்வுகளைக் கண்டுபிடித்து வளர்ச்சிப் பாதை யில் முன்னேறிச் செல்கிறோம்.

நாங்கள் எடுத்துக் கொண்ட திட்டத்தை பூர்த்தி செய்ய முயற்சிகள் மேற்கொள்கி றோம். முடிவுகளை தைரியத் துடன் எடுத்து அதனை உறு தியுடன் செயற்படுத்துகிறோம். உட்கட்டமைப்பு திட்டங்கள் ராஜஸ்தானின் போக்கை மாற்றக்கூடியதாகும்.

தேர்தல் சமயத்தில் பெரிய வாக்குறுதிகளை அளிப்பது நம் மரபு. இது தொடர்ச்சியாக பல ஆண்டுகள் நீடித்தது. தீமைகளை அகற்றுவதென் பது சவாலானதாகும். நீங்கள் நினைத்துப் பார்க்க முடியாத பலம் தேவை தீமைகளை ஒழிப்பதற்கு.


மத்திய அரசு வளர்ச்சிப் பணிகளை வேகமாகச் செயற் படுத்தி வருகிறது. இது போர் வீரர்களின் தேசம். எங்கள் அரசு வளர்ச்சியைத்தான் மேற்கொண்டு வருகிறதே தவிர அரசியலை அல்ல.

கோட்டாவில் முந்தைய அரசு பால வேலைகளைப் பூர்த்தி செய்ததா? இல்லை. 11 ஆண்டுகள் ஆகியுள்ளது. கடைசியில் எங்கள் அரசு தான் அதனை நிறைவேற்றி யுள்ளது.

வீதிகள் நன்றாக இருந் தால் பூ விற்பவர் முதல் தேநீர் விற்பவர் வரை நல்ல வருவாய் ஈட்ட முடியும்.

நாட்டில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உறுதுணையாக எங்கள் அரசு செயற்படும். வெள்ளம் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு உயர்மட்ட குழு பார்வையிட அனுப்பப்பட்டுள்ளது. நாம் ஒன்றிணைந்து இந்தச் சவாலைச் சமாளிப்போம்.

இவ்வாறு கூறிய மோடி, ரூ.15,000 கோடி மதிப்பி லான நெடுஞ்சாலை திட்டங் களுக்கு அடிக்கல்நாட்டி தொட ங்கி வைத்தார். (8)



மும்பையில் பலத்த மழை பெய்து வருவதால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. பேருந்து, ரயில் சேவை முற்றிலும் முடங்கியுள்ளது. தண்டவாளம் வெள்ளத்தில் மூழ்கியதால் ரயில் சேவை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

## பன்னீரின் பதவியேற்பு செல்லாது என அறிவிக்கக் கோரி வழக்கு



(சென்னை)

துணை முதல்வராக ஓ.பன்னீர்செல்வம் பதவி ஏற்றது செல்லாது என அறி விக்கக்கோரி சட்டத்தரணி இளங்கோவன் உயர் நீதி மன்றில் வழக்கு தொடர்ந் துள்ளார்.

அ.தி.மு.கவின் இரண்டு முக்கிய அணிகளான ஓ.பி.எஸ்., இ.பி.எஸ் அணிகள், நீண்ட இழுபறிக்குப் பிறகு தற்போது ஒன்றிணைந்தன. அப்போது கட்சியின் ஒருங்கிணைப்பாள ராக ஓ.பன்னீர்செல்வம் அறி விக்கப்பட்டார்.

அத்துடன் அமைச்சரவையிலும் மாற்றம் செய்து. ஓ.பன்னீர்செல்வத்துக்கு துணை முதல்வர் பதவி வழங்கப்பட்டது.

அதன்படி கடந்த 21 ஆம் திகதி ஓ.பன்னீர்செல்வம் துணை முதல்வராக பதவி யேற்றார். அவருக்கு ஆளு நர் வித்யாசாகர்ராவ் பத விப்பிரமாணம் செய்து வைத் தார்.

இந்நிலையில், துணை முதல்வராக ஓ.பன்னீர்செல் வம் பதவி ஏற்றது செல்லாது என அறிவிக்கக் கோரி சட் டத்தரணி இளங்கோவன் சென்னை உயர்நீதி மன்றத் தில் வழக்கு தொடர்ந்துள்ளார்.

அவர் தனது மனுவில், துணை முதல்வராக ஓ.பன் னீர்செல்வத்துக்கு பதவிப்பிர மாணம் செய்து வைத்தது அரசியலமைப்பு சட்டத்துக்கு எதிரானது என்றும், ஆளு நரின் இந்த நடவடிக்கையை ரத்து செய்ய வேண்டும் என்றும் கூறியுள்ளார். இந்த மனு விரைவில் விசார ணைக்கு வரும் என எதிர் பார்க்கப்படுகிறது. (8)

## கோரக்பூர் வைத்தியசாலையில் தொ

## 48 மணி நேரத்தில் 42 குழந்தை

(லக்னோ)

உத்தரபிரதேசம் கோரக் பூர் வைத்தியசாலையில் கடந்த 48 மணி நேரத்தில் 42 குழந்தைகள் மரண மடைந்துள்ள நிலையில், மூளைக்காய்ச்சல் உள்ளிட்ட தொற்று நோய்களால் குழந் தைகள் உயிரிழந்துள்ளதாக நிர்வாகம் விளக்கமளித் துள்ளது.

உத்தரப்பிரதேசம் கோரக் பூரில் உள்ள பாபா ராகவ் தாஸ் மருத்துவக்கல்லூரி வைத்தியசாலையில் கடந்த இரு வாரங்களுக்கு முன் னர் ஒட்சிசன் பற்றாக்குறை யால் 70-க்கும் மேற்பட்ட குழந்தைகள் உயிரிழந்தன. நாட்டையே உலுக்கிய இந்த சம்பவம் தொடர்பாக விசா ரணை நடந்து வருகிறது.

இந்நிலையில், மேலும், ஒரு துயரமாக அதே வைத்தி யசாலையில் கடந்த 48 மணி நேரத்தில் 42 குழந்தைகள் உயிரிழந்துள்ளன.

மூளையழற்சி, ஒவ்வாமை, நிமோனியா காய்ச்சல், சீழ்பிடிப்பு போன்ற காரணங் களால் தான் குழந்தைகள் உயிரிழந்துள்ளதாக வைத்திய சாலை முதல்வர் பி.கே.சிங் தெரிவித்துள்ளார்.

சமீபத்தில் அப்பகுதியில் பெய்த கனமழை காரண மாக வைத்தியசாலை வளா கங்கள் தண்ணீரால் மூழ்கிய



தாலும், அதிகம் பேர் வைத்திய சாலை யில் அனுமதிக்கப்பட்டிருந்ததாலும் சரியான சிகிச்சை அளிக்க முடியவில்லை என்று வைத்தியர்கள் தெரிவித்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

## சிக்கலில் சிக்கினார் ஸ்டாலின்



(கோவை)

பிரதமர் மோடி குறித்து தி.மு.க. செயல்தலைவர் மு.க.ஸ்டாலின் அவதூறாக பேசியதாக கூறி கோவை யில் பா.ஜ.கவினர் பொலி ஸில் புகார் அளித்தனர்.

தமிழகத்தில் நிலவும் அரசியல் சூழ்நிலையை வைத்து பிரதமர் மோடி கட்டப்பஞ்சாயத்து செய்வ தாக தி.மு.க செயல் தலை வர் மு.க.ஸ்டாலின். சில தினங்களுக்கு முன்னர் செய்தியாளர்களிடம் பேட்டி யளித்தார்.

இந்நிலையில். பிரதமர் மோடி குறித்து அவதூறான கருத்தை மு.க.ஸ்டாலின் தெரிவித்ததாக கூறி, அவர் மீது கோவை சூளூர் பொலிஸ் நிலையத்தில் பா.ஜ.கவினர் நேற்று புகாரளித்துள்ள னர். (8)

## ஜெயலலிதாவின் இற

### பெங்களூர் பெண்ணின் கடித

(பெங்களூர்)

நான் தான் ஜெயலலிதா வின் உண்மையான மகள் என்று ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு பெங்களூர் பெண் கடிதம் எழுதியுள்ளது பெரும் பரபரப்பை ஏற்படுத் தியுள்ளது.

மறைந்த தமிழக முதல மைச்சர் ஜெயலலிதா தான் இருக்கும் வரை திருமணம் செய்து கொள்ளவில்லை. இந்த நிலையில், கர்நாடக மாநிலம் பெங்களூருவை சேர்ந்த மஞ்சுளா என்கிற அம்ருதா (வயது 38) என்ற பெண் ஜெயலலிதா தன் சொந் தத் தாய் என கூறி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி ஆகியோருக்கு கடி தம் எழுதியுள்ளார். அந்த கடி தத்தில் அவர் கூறியிருப்பதா வது,

கடந்த 1960ஆம் ஆண்டு பிரபல நடிகையாக இருந்த என் பாட்டி சந்தியா- ஜெய ராம் தம்பதியின் 3 பிள்ளைக ளில் என் தாய், ஜெயலலிதா என்கிற கோமளவள்ளியும் ஒருவர். அவர் மகள் தான் நான். என் பெயர் மஞ்சுளா என்கிற அம்ருதா என்றும், அம்மு என்றும் என்னை செல்லமாக அழைப்பர். பெற்றோரை இழந்த பின் என் தாய் மன அழுத்தத் துக்கு ஆளானார். அப்போது தெலுங்கு நடிகர் சோபன்பாபு என் தாய் மீது அதிக அக்கறை காட்டினார். அவர் பராம ரிப்பில் என் தாயார் மீண்டும் இயல்பு நிலைக்கு திரும்பினார். அவர்கள் இடையிலான நட்பு காதலாக மாறியது. இருவரும் சேர்ந்து வாழ்ந்தனர். திரு மணம் செய்ய முடிவு செய்தனர் என் றாலும், சோபன்பாபுவின் முதல் மனைவியின் எதிர்ப்பால். திருமணம் நின்று போனது.



கர்ப்பமாக இருந்த என் தாய். 1980 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 14ஆம் திகதி என்னை பெற்றெடுத்தார். சம் பிரதாய மிக்க குடும்பம் என்பதால் ஜெயலலிதா, சோபன்பாபு உறவை ஏற்க எங்கள் குடும்பத்தினர் மறுத்த னர். இதனால் தன் குழந்தையை தன் சகோதரி சைலஜாவிடம் என் தாய் ஒப் படைத்தார். பெங்களூரில் பணியாற்றி வந்த சைலஜா-சாரதி தம்பதியினர் என்னை சொந்த மகளாகவே வளர் த்து வந்தனர். ஆனால், ஜெயலலிதா வின் மகள் என்ற ரகசியத்தை எங்கும் கூறவில்லை. அவர்களிடம் ஜெயல லிதா சத்தியம் வாங்கியுள்ளதாக தெரி கிறது.

1996இல் என்னிடம் ஒரு சீட்டு எழுதி கொடுத்த சைலஜா சென்னை சென்று ஜெயலலிதாவை சந்தித்து வரும்படி கூறினார். நானும், போயஸ் கார்ட னுக்கு சென்று அவரை சந்தித்தேன். என்னை பார்த்தவுடன் வாரி அணை த்து பாசத்தை காட்டி உபசரித்தார். இது எனக்கு ஆச்சரியம் அளித்தது. அதன் பின் பலமுறை அவரை சந்தித்தேன். ஆனால் ஒருமுறை கூட என் சொந்த தாய் என்று கூறியதில்லை. எந்த கார

## 30 ஆண்டுகளின் பின் காஸாவில் சினிமா படம்

(காஸா)

பாலஸ்தீனம் காஸாவில் 30 ஆண்டுகளுக்கு பிறகு முதன் முறையாக சினிமா படம் திரையிடப்பட்டது.

பாலஸ்தீனத்தில் உள்ள காஸா நகரம் கடந்த 30 ஆண் டுகளாக ஹமாஸ் தீவிரவாதிக ளின் கட்டுப்பாட்டில் உள்ளது. அங்கு அன்று முதல் கடுமை யான கட்டுப்பாடுகள் விதிக்கப் பட்டன.

குறிப்பாக அங்கு சினிமா காட்சிகள் திரையிடப்படா மல் நிறுத்தப்பட்டன. காஸா பகுதியில் 20 இலட்சம் பொது மக்கள் வாழ் கிறார்கள். அவர்கள் பொழுது போக்கு அம்சங்கள் எதுவும் இன்றி பொழுதை கழித்து வந்தனர். இந்த நிலையில் அங்கு 30 ஆண்டுக ளுக்கு பிறகு முதன் முறையாக சினிமா படம் திரை யிடப்பட்டது. அங்குள்ள பழைமை வாய்ந்த சமீர் தியேட்டரில் திரையிடப்பட்டது.

அது பொழுதுபோக்கு படம் அல்ல. இஸ்ரேல் சிறைக ளில் பாஸ்தீனியர்கள் அனுப விக்கும் கொடுமைகளை வலியுறுத் தும் ஆவணப் படமாகும். இருந்தாலும் அப்படத்தை காண நூற்றுக் கணக்கான பொதுமக்கள் சென்று பார்த்தனர்.

இந்த ஆவணப்படத்தை கட ந்த ஞாயிற்றுக்கிழமை ஒருநாள் இரவு மட்டுமே ஒளிபரப்ப அனுமதிக்கப் பட்டது. ஆனால் சினிமா படம் தொடர்ந்து திரையிடப்பட வேண் டும் என பொதுமக்கள் வலியுறுத் தியுள்ளனர். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## ...டரும் துயரம்
## ...தகள் மரணம்



ஒரு மாதத்தில் மட்டும் நூற்றுக் கணக்கான குழந்தைகள் ஒரே வைத்தியசாலையில் மரணமடைந்துள்ளது அனைவரையும் அதிர்ச்சிக் குள்ளாகியுள்ளது. (8)

## ...றப்பில் மர்மம்
### ...தத்தால் பரபரப்பு

...ணத்தினாலும் அரசியலுக்கும், சினிமாவுக்கும்வரவேண்டாம்என என்னை எச்சரித்திருந்தார்.

ஜெயலலிதா இறந்த பின் தீபா, தீபக் ஆகியோர் தான் என் அம்மாவின் சொத்துக்கு வாரிசுதாரர்கள் என செய்தி வெளியானது. இதைப் பார்த்த அமெரிக்காவில் உள்ள என் உறவினர் ஜெயலட்சுமி, ஜெயலலிதாவின் ஒரே மகள் நான் தான் என்பதை என்னிடம் கூறினார். பச்வனகுடியில் வசிக்கும் மற்றொரு உறவினர் லலிதாவும், இவ்விடயத்தை உறுதிப்படுத்தினார். நான்



பிறந்தபோது ரஞ்சினி ரவீந்திரநாத், லலிதா ஆகியோரும் என் தாயாரை பராமரித்துள்ளனர்.

அவர்களுக்கு என் பிறப்பு ரகசியம் தெரிந்துள்ளது. ஜெயலலிதாவின் இறப்பு இயற்கையான மரணம் அல்ல. உடல்நிலை பாதிப்பாலும் அவர் இறக்கவில்லை. 2016ஆம் ஆண்டு செப்டெம்பர் 22 ஆம் திகதி ஜெயலலிதா தாக்கப்பட்டுள்ளார். எனவே, சசிகலா நடராஜன், தினகரன், தீபக் ஜெயகுமார், ஜெயலலிதாவின் முதன்மை செயலாளராக இருந்த ஷீலா பாலகிருஷ்ணன் ஆகியோரிடம் விசாரணை நடத்த வேண்டும்.

என் தாய் ஜெயலலிதா இறப்புக்கு சசிகலா உட்பட பலரும் காரணம். இது தொடர்பாக உச்சநீதிமன்ற மேற்பார்வையில் சி.பி.ஐ., சிறப்பு குழு விசாரணை நடத்த வேண்டும். இறப்பின் காரணத்தை தெரிந்து கொள்ள அவர் உடலை தோண்டி எடுத்து பிரேத பரிசோதனை நடத்த வேண்டும். என் தாய். அவர் தான் என்பதை நிரூபிக்க டி.என்.ஏ. என்னும் மரபணு சோதனை நடத்தஉத்தரவிட வேண்டும்என்று அந்த கடிதத்தில் மஞ்சுளா கூறியுள்ளார். (8)

## அதிகமான ஏவுகணை சோதனைகளை நடத்துங்கள் இராணுவத்தினருக்கு வடகொரிய ஜனாதிபதி உத்தரவு



(சியோல்)

பசுபிக் பெருங்கடல் பிராந்தியத்தில் இன்னும் அதிகமான ஏவுகணை சோதனைகளை நடத்துமாறு வடகொரிய இராணுவத்தை ஜனாதிபதி கிம் ஜாங் உன் கேட்டுக் கொண்டதாக அந்நாட்டு அரசு ஊடகங்கள் செய்திகள் வெளியிட்டுள்ளன.

வடகொரியா அணு ஆயுதம் மற்றும் ஏவுகணைகளை வீசி பரிசோதித்து வருகிறது. இதற்கு அமெரிக்கா, தென்கொரியா, ஜப்பான் உள்ளிட்ட நாடுகள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன.

பொருளாதார தடையும் விதித்தன. அதைக்கண்டுகொள்ளாத வடகொரியா தொடர்ந்து கண்டம் விட்டு கண்டம்பாயும் ஏவுகணை சோதனைகளை மேற்கொண்டு வருகிறது.

இதனால் அமெரிக்காவிற்கும் வடகொரியாவிற்கும் போர் ஏற்படும் நிலை ஏற்பட்டது.

இதனையடுத்து, இரு நாட்களுக்கு முன்னர் ஹ்வா சோங்-12 என்ற பெயரிடப் பட்டுள்ள மத்தியதூர ஏவுகணையை வடகொரியா செலுத்தியதாகவும் அதனை ஜனாதிபதி கிம் ஜாங் - உன் கண்காணித்ததாகவும் அந்நாட்டின் அரசின் செய்தி நிறுவனம் தெரிவித்தது.

மேலும், அந்த ஏவுகணை ஹோக்கைடோவின் ஒஷிமா தீபகற்பம், எரிமோ முனை ஆகிய இடங்களை கடந்து தடம் மாறாமல் வடக்கு பசுபிக்கின் இலக்கை துல்லியமாக தாக்கியது எனவும் தெரிவித்துள்ளது.

ஜப்பான்பகுதியின்மேலாக இந்த ஏவுகணை பறந்துள்ளதால் அந்நாட்டின் பிரதமர் அபே உள்ளிட்டோர் வடகொரியாவின்செயலுக்கு கண்டனம் தெரிவித்ததோடு, ஐ.நா சபை இதில் தலையிட்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென கேட்டுக்கொண்டது.

இந்நிலையில், ஜப்பான், தென்கொரியா, ஐ.நா. அமெரிக்கா என யாருடைய குரலையும் கண்டு கொள்ளாமல், பசுபிக் பிராந்தியத்தில் மேலும், ஏவுகணை சோதனைகளை நடத்த வேண்டும்என வடகொரிய இராணுவ விஞ்ஞானிகளிடம் ஜனாதிபதி கிம் ஜாங் உன் கேட்டுக் கொண்டதாக கூறப்படுகிறது.

அமெரிக்காவுக்கு சொந்தமான குவாம் தீவை தாக்குதல் நடத்த முன்னேற்பாடாக பசுபிக் பெருங்கடலில் அதிகமான ஏவுகணைகள் பாய வேண்டும் என ஜனாதிபதி கேட்டுக்கொண்டதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்திகள் வெளியிட்டுள்ளன. (8)

## அமெரிக்காவுடனான உறவை துண்டிக்க பாகிஸ்தான் முடிவு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் தீவிரவாதிகளின் புகலிடமாக இருப்பதாக ட்ரம்ப் தெரிவித்திருந்த கருத்தால் அந்நாட்டுடனான பேச்வார்த்தையை தற்காலிகமாக நிறுத்த பாகிஸ்தான் முடிவெடுத்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெற்காசியாவுக்கான புதிய கொள்கையை சமீபத்தில் வெளியிட்டார்.

அதில், ஆப்கானிஸ்தானில் தாக்குதல்களை நடத்திவரும் தலிபான், ஹக்கானி உள்ளிட்ட பெருவாரியான தீவிரவாத இயக்கங்களுக்கு பாகிஸ்தான் துணை போவதாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

தீவிரவாதிகளின் புகலிடமாக பாகிஸ்தான் திகழ்வதாகவும் ட்ரம்ப் காரசாரமான கருத்துக்களை தெரிவித்திருந்தார்.

மேலும், தேவைப்பட்டால் பாகிஸ்தானில் புகுந்து வான்வழி தாக்குதல்களை நடத்துவோம் என அமெரிக்க உள்துறை அமைச்சர் ட்ரில்லர் சன் பேட்டியளித்திருந்தார். போதாக்குறைக்கு அமெரிக்காவின் மேற்கண்ட கருத்துக்கள் அனைத்திற்கும் இந்தியாவும், ஆப்கானிஸ்தானும் மிகுந்த வரவேற்பு அளித்தன.

அடுத்தடுத்த வார்த்தை தாக்குதல்களால் ஆத்திரமடைந்த பாகிஸ்தான், அமெரிக்காவின் புதிய தெற்காசிய கொள்கையை ஏற்கப்போவதில்லை என அறிவித்தது.

அமெரிக்காவிடமிருந்து நிதியையோ, ஆயுதங்களையோ நாங்கள் எதிர்பார்க்கவில்லை. மரியாதையுடன் நடத்துங்கள் என பாகிஸ்தான் இராணுவ தளபதி ஜாவீத் பஜ்வா பரபரப்பு பேட்டியளித்தார்.

மேலும், ஆப்கானிஸ்தானில் அமைதி ஏற்படுவதற்காக பாகிஸ்தான் அரும்பாடுபட்டு வருகிறது. தீவிரவாதத்தை எங்களைப் போல வேறு யாரும் எதிர்த்து போராடியிருக்க முடியாது என பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சகம் அறிக்கை வெளியிட்டது.

இந்நிலையில், நேற்று முன்தினம் அந்நாட்டு பாராளுமன்ற செனட் சபையில் இது குறித்தான கேள்விகளை உறுப்பினர்கள் அடுக்கினர். அதற்கு பதிலளித்த வெளியுறவு அமைச்சர் ஹவாஜா முகம்மது ஆசிப், அமெரிக்காவுடனான பேச்சுவார்த்தையை தற்காலிகமாக நிறுத்த அரசு முடிவெடுத்துள்ளதாகவும், இரு நாடுகளுக்கு இடையே



தலைவர்கள் பயணமும் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் தெற்காசிய கொள்கை குறித்து விவாதிப்பதற்காக வெளியுறவு உயரதிகாரிகள் அடங்கிய கூட்டம் அடுத்த வாரம் நடைபெறவுள்ளதாகவும் அந்நாட்டு வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது. (8)

## 'ஹார்வே' புயலின் தாக்கத்தால் தொழிற்சாலை வெடிக்கும் அபாயம்

### மக்கள் வெளியேற்றம்




(நியூயோர்க்)

அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தை மூழ்கடித்துள்ள ஹார்வே புயல் காரணமான அங்குள்ள வேதிப்பொருள் தொழிற்சாலை வெடிக்கும் அபாயத்தில் இருப்பதால் ஆயிரக் கணக்கான பொதுமக்கள் வெளியேற்றப்பட்டு வருகின்றனர்.

அமெரிக்காவில் டெக்சாஸ்மாகாணத்தை 'ஹார்வே' புயல் ருத்ர தாண்டவமாடிவிட்டது.

அந்த நாட்டின் நான்காவது பெரிய நகரம் என்ற சிறப்பை பெற்றுள்ள ஹூஸ்டன் நகரம், வெள்ளத்தில் மூழ்கியுள்ளது.

இந்த நகரத்தில் மட்டுமே புயல், வெள்ளத்தில் சிக்கி 9 பேர் உயிரிழந்திருந்தனர்.

இந்நிலையில், ஹூஸ்டனின் அருகே உள்ள க்ராஸ்பை என்ற இடத்தில் வேதிப் பொருட்கள்தயாரிக்கும்தொழிற்சாலை ஒன்று உள் ளது. இந்த தொழிற்சாலை யில் மின்சாதன அறைக ளில் வெள்ளநீர் புகுந்து விட்டதால் வேதிப்பொருட் களை குளிர்நிலையில் வைத் திருக்கும் இயந்திரங்கள் வேலை செய்யவில்லை.

இதனால், எப்போது வேண்டுமானாலும் தொழிற்சாலையில் வெடிவிபத்து ஏற்படும் அபாயம் என்ற நிலை உள்ளது.

இதனையடுத்து, அந்நகரத்தில் உள்ள பொது மக்கள் பாதுகாப்பான இடத்திற்கு கொண்டு அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர்.

வெள்ளநீரை வெளியேற்றி விட்டு மாற்று ஏற்பாடுகள் மூலம் மின்சாதனங்கள் இயக்க நடவடிக்கை எடுக்கப் பட்டு வருவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெகத் ஜெயசூரிய தூதுவர் இல்லை!

## இலங்கைத் தூதரகம் மறுப்பு

இலங்கைத் தூதுவராக இருந்த ஜெனரல் ஜெகத் ஜெயசூரியவுக்கு எதிராக மனித உரிமை அமைப்புகள் தொடர்ந்துள்ள போர்க் குற்ற வழக்குத் தொடர்பாக கருத்து வெளியிட பிரேசிலில் உள்ள இலங்கைத் தூதரகம் மறுப்புத் தெரிவித்துள்ளது.

பிரேசில், கொலம்பியா உள்ளிட்ட நாடுகளில் ஜெனரல் ஜெகத்ஜெயசூரியவுக்கு எதிராக, போர்க்குற்ற வழக்குகள் கடந்த 28ஆம் திகதி தாக்கல் செய்யப்பட்டன. இந்த வழக்குகள் தாக்கல் செய்யப்பட முன்னரே, ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய பிரேசிலை விட்டு வெளியேறி விட்டார் என்று பிரேசிலில் உள்ள இலங்கைத் தூதரகம் உறுதிப்படுத்தியுள்ளது.

பிரேசிலியாவில் உள்ள இலங்கைத் தூதரகத்தின் பதில் தூதுவர் பிரேமதிலக ஜெயக்கொடி, இதுகுறித்து ஏபி செய்தி நிறுவனத்திடம் தகவல் வெளியிடுகையில்,

"தனது இரண்டு ஆண்டு சேவைக்காலம் முடிந்து, ஜெனரல் ஜெகத் ஜயசூரிய, பிரேசிலில் இருந்து இலங்கை திரும்பி விட்டார். அவர் இப்போது இங்கு தூதுவராக இல்லை.



அவருக்கு எதிராக, மனித உரிமை அமைப்புகளால் தொடரப்பட்டுள்ள வழக்குத் தொடர்பாக கருத்து எதையும் வெளியிட முடியாது" என்று கூறியுள்ளார். (இ-7)

# ராணுவ வாகனம் எரிந்து நாசம்!

## நெடுஞ்சாலையில் திடீரென தீப்பற்றியது

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில், இலங்கை இராணுவ உயரதிகாரிகள் பயணம் செய்த வாகனம் ஒன்று திடீரெனத் தீப்பிடித்து எரிந்து நாசமானது.

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில், கொட்டாவ வெளியேற்றப் பகுதியில் இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் காலை இடம்பெற்றது.



மட்டக்களப்பு கல்லடி இராணுவ முகாமில் இருந்து, பனாகொட இராணுவத் தளத்துக்குச் சென்று கொண்டிருந்த போது இந்த தீ விபத்து ஏற்பட்டது.

இதில் மூன்று இராணுவ அதிகாரிகள் இருந்தனர் என்றும், தீப்பிடித்ததும், அவர்கள் வாகனத்தில் இருந்து குதித்து வெளியேறியதால், காயங்களின்றி உயிர் தப்பியதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும், தீ விபத்து ஏற்பட்டமைக்கான காரணம் தெரியவில்லை. இதுகுறித்த இராணுவ மற்றும் பொலிஸ் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (இ-7)

# மத்தள விமான நிலைய அபிவிருத்தி குறித்து இந்தியாவுடன் பேச அமைச்சரவை உபகுழு

மத்தள விமான நிலையத்தை இந்திய நிறுவனத்துக்கு குத்தகைக்கு வழங்குவதற்கு கொள்கை முடிவு எடுக்கப்பட்டுள்ளதை அடுத்து, அதனை எவ்வாறு சிறந்த முறையில் அபிவிருத்தி செய்யலாம் என்பது தொடர்பாக இலங்கை அரசாங்கம் இந்தியாவுடன் தொடர்பு கொண்டுள்ளதாக கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதற்காக உப குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளதாக அமைச்சரவை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பாக பல்வேறு யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ள போதிலும், இன்னமும் இறுதி இணக்கப்பாடு ஏற்படவில்லை.

விமான நிலையத்துடன் இணைந்ததாக, விமான பயிற்சி பாடசாலை, விமானப் பராமரிப்பு மையம் என்பனவற்றை அமைப்பது குறித்த வேறு சேவைகளும் இதில் அடங்குகின்றன.

மத்தள விமான நிலையத்தை வர்த்தக விமான சேவைகள் தவிர்ந்த ஏனைய தேவைகளுக்காக பயன்படுத்துவதற்குக் கட்டுப்பாடு விதிப்பதற்கான சாத்தியப்பாடுகள் குறித்தும், இலங்கை அரசாங்கம் ஆலோசித்து வருவதாகவும், கொழும்பு ஆங்கில நாளிதழ் மேலும் தெரிவித்துள்ளது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்று ஒரு தகவல்

### சரியாகப் பிரதிபலிப்பது உண்டா?

"எனக்கு வேலை போச்சுங்க!"

"அடடே! ஏன் என்ன ஆச்சு?"

"ஒரு நல்ல நியூஸ். நம்ம காதலுக்கு எங்க அப்பா சம்மதிச்சுட்டாருங்க!"

"நிஜம்மாவா? உண்மையில் நாம ரொம்பக் குடுத்து வச்சவங்க இல்லே?"

"மற்றவர்களின் சூழ்நிலைகளையும் மனநிலையையும் புரிந்து கொண்டு, அவர்களது உணர்வுகளை ஒட்டி நாம் பிரதிபலிக்க வேண்டும்" என்பதற்கான உதாரணங்கள் இவை. சிலபேர் என்ன சொன்னாலும் 'செத்தவன் கையில் வெத்தலைப் பாக்குப் கொடுத்த கதையாய்' என்ன விதமான உணர்ச்சியும் இல்லாமல் கேட்டுக் கொள்வார்கள். இச் செயல் சம்புந்தப்பட்டவர்களை ரொம்பவும் ஏமாற்றத்திற்கு உள்ளாக்குகிறது. அல்லது எரிச்சலுக்கு ஆளாக்குகிறது.

பிள்ளை ஆசையோடு ஓடி வருகிறது. "அம்மா தூக்குங்கம்மா" என்கிறது. "சீப் போ சனியனே! நேரங்காலம் தெரியாமே!" என்கிறாள் தாய்.

இது நேர் எதிரிடையான உணர்ச்சியை வெளிப்படுத்துவதால் . குழந்தையின்முகம் உடனே சுண்டைக்காயாய்ச் சுண்டிப் போகிறது.

என்னடி! பர்ஸை தொலைச்சிட்டேங்கிறேன். நீ பாட்டுக்குப் பாலைக் காய்ச்சிட்டு இருக்கியே" என்கிறான் கணவன்.

"அதுக்கு இப்ப என்னை என்னங்க பண்ணச் சொல்றீங்க?" என்கிறாள் மனைவி.

அதனால் கணவனுக்கு ஒரே கடுப்பு. இந்தக் கோபம் கணக்கில் ஏற்றப்பட்டு வேறு ஒரு சந்தர்ப்பத்தில் வெடிக்கிறது. அது பெரியதாகவும் ஆகிறது.

"ஏங்க ! நம்ம பையன் தமிழ்ல எட்டு மாக் தாங்க எடுத்திருக்கான்." இதற்குக் கணவன் – "நீ இன்னும் கொஞ்சம் செல்லம் கொடு" என்று சொன்னால், அது நேர் எதிரிடையான அணுகுமுறை. பிரச்சினையும் ஆரம்பம் என்று பொருள்.

நம்மை இதயத்திற்கு நெருக்கமாக எண்ணுகிறவர்கள் நம்மிடம் இன்ப துன்பங்களைப் பகிர்ந்து கொள்ள எண்ணும் போது, அவர்களது உணர்வுகளுக்கு மதிப்புத் தர வேண்டும். அந்த உணர்வுகளை ஒட்டி நாமும் பிரதிபலிக்க வேண்டும். "சரி சரி, அதுக்கு இப்ப என்ன?" என்று ஆரம்பத்துவிடக் கூடாது.

உணர்வுகள் ஒன்றிப் போகவிடில் அவர்கள் ஒடிந்து போகிறார்கள்.

நாம் கண்ணாடியெனப் பிரதிபலிக்க வேண்டும் எனப் பலரும் எதிர்பார்க்கிறார்கள். .

அந்நாளுக்கிட்டே சொல்லுறதுக்குப் பதிலா பேசாம சுவத்திலே போய் முட்டிக்கலாம் என்கிற பெயரை மட்டும் நாம் எப்போதும் எடுத்து விடக் கூடாது.

**லேனா தமிழ்வாணன்**

# போர்க்குற்ற வழக்கு விவகாரத்தால் ஜெகத் ஜெயசூரிய தப்பியோடவில்லை

## வெளிவிவகார அமைச்சு சமாளிப்பு

(கொழும்பு)

**ஜெனரல் ஜெகத் ஜெயசூரியவுக்கு எதிராக பிரேசிலில் போர்க்குற்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது தொடர்பாக இன்னமும் அதிகாரபூர்வ அறிவிப்பு ஏதும் கிடைக்கவில்லை என்று வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.**



இது தொடர்பாக தகவல் வெளியிட்டுள்ள இலங்கை வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் மஹேஷினி கொலன்னே.

"பிரேசில், கொலம்பியா, பெரு, சிலி, ஆஜென்டீனா, சுரினாம் ஆகிய நாடுகளுக்கான தூதுவராக கடந்த இரண்டு ஆண்டுகளாகப் பணியாற்றிய ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய, கடந்த 28 ஆம் திகதி பிரேசிலை விட்டுப் புறப்பட்டு விட்டார்.

இந்த மாதத்துடன் அவரது பதவிக்காலம் முடிவடையும் நிலையிலேயே நாடு திரும்புகிறார்.

போர்க்குற்ற வழக்கினால் அவர், பிரேசிலை விட்டு வெளியேறியுள்ளதாக வெளியான செய்திகள் தவறு.

அவரது பயணம் முன்கூட்டியே திட்டமிடப்பட்டது. வழக்கினால் அவர் அங்கிருந்து வெளியேறவில்லை" என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

## மின் உபகரணங்கள் கொள்ளை-ஐவர் கைது

கல்பிட்டி - முகத்துவாரம் பகுதியிலுள்ள சுற்றுலா ஹோட்டலில் ஒருதொகை மின் உபகரணங்களை கொள்ளையிட்ட ஐவர் நேற்றுக் காலை கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் கொள்ளையிட்ட பொருட்களின் பெறுமதி நான்கு இலட்சம் ரூபா என பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, கைதானவர்கள் கல்பிட்டி பகுதியைச் சேர்ந்த 22 மற்றும் 29 வயது மதிக்கத்தக்கவர்கள் என பொலிஸார் சுட்டிக்காட்டியுள்ளனர். (இ-7)

## ஹோமாகம பகுதியில் திடீர் தீ

அதுருகிரிய பொலிஸ் பிரிவின் பனாகொட - ஹோமாகம பகுதியிலுள்ள தொழிற்சாலை ஒன்றில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் இந்த தீ விபத்து ஏற்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

தீயினால் எவருக்கும் உயிராபத்துக்கள் ஏற்படவில்லை எனவும், இதுவரை ஏற்பட்ட சேதங்கள் குறித்த விபரம் கணக்கிடப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதுருகிரிய பொலிஸார், பனாகொட இராணுவத்தினர் மற்றும் கொழும்பு தீயணைப்புப் பிரிவினர் இணைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளனர் (இ-7)

## வைத்தியர்களின் வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது

வடமத்திய மாகாண வைத்தியர்கள் ஆரம்பித்திருந்த வேலை நிறுத்தம் கைவிடப்பட்டுள்ளது.

தமது பிரதான கோரிக்கைகள் இரண்டிற்கும் தீர்வை பெற்றுத் தருவதாக அதிகாரிகள் உடன்பட்டமையால் குறித்த வேலை நிறுத்தம் கைவிடப்பட்டதாக அரச வைத்தியர்கள் சங்கத்தின் வட மத்திய மாகாணத்தின் இணைப்பாளர் வைத்தியர் தேஜன சோமதிலக தெரிவித்துள்ளார்.

இரண்டு நாட்களாக முன்னெடுக்கப்பட்ட வேலை நிறுத்தம் காரணமாக சிகிச்சைக்காக வரும் நோயாளர்கள் பல்வேறு இன்னல்களுக்கும் முகம் கொடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)


சிவமயம்



# திருவருள்மிகு தன்னை சித்திவிநாயகர் தேவஸ்தானம்

## ஆவர்த்தனப் பிரதிஷ்டா அஹ்டபந்தன நவகுண்ட பக்ஷ மஹாகும்பாபிஷேக திருக்குடமுழுக்கு பெருஞ்சாந்திப் பெருவிழா

களபூமி - தன்னையம்பதி - காரைநகர்



தலம்: சித்தி விநாயகர் இடம்: தன்னை

தனதன தத்த னந்த– தனதான

அருளுநினைப்பு கொண்டு கணபதி திட்டி ருந்து
படகது வுற்ற மர்ந்து– வருதேவே
அவரது ளத்தெ ழுந்து அணைகரை யைப்பு கன்று
அடியைதொ ழச்சு மந்து -வரவேதான்
குருவரு ளற்கி சைந்த இடமித னைத்தெ ரிந்து
குசலமொ டுற்ற மர்ந்த– நிலையாலே
குணதிசை யிற்பு னைந்த குடிசைய திற்றி கழ்ந்து
குதுகல முற்றி ருந்த -கணநாதா
**பெருவரு ளைத்த ருந்தன் பதமறு கைக்கொ ளர்ந்து**
புலரியி னிற்ப ணிந்து– அறியாதேன்
**பெருநெறி பெற்று யர்ந்த திருவடி யைப்பெ றெந்தன்**
**ப்ரியமது கிட்ட வந்த– அருள்தாராய்**
கருதடி நித்த முன்னி எடுகரு மத்தை நண்ணு
கடவுளெ ணெப்பொ லிந்து -உறைகாரை
**கருணையு ளத்தொ டெங்கள் பதியென மெச்சு தன்னை**
**கவினொடி ருக்க வந்த பெருமானே.**

தெய்வத் தமிழ் கவிஞன் இராசையா குகதாசன்

கும்பாபிஷேகம் என்று சொல்லப்படுகின்றதாகிய திருக்குடமுழுக்குப் பெருஞ்சாந்தி விழா காணுவதே பேரின்பம். அக்குடமுழுக்குத் தீர்த்தம் அருந்தினாலே அருமருந்து. பன்னிரெண்டு ஆண்டுக்கு ஒருமுறை இறை மூர்த்தத்திற்கும் தெய்வ சாந்நித்தியத்தை நிலை நிறுத்தும் ஒரு பெருவிழா.

புனருத்தாரணம் செய்யப்பட்ட ஆலயத்தில் மூலமூர்த்தியை அட்டபந்தனம் மூலம் பிரதிட்டை பண்ணி அம்மூர்த்திக்கு அஷ்டபந்தன நவகுண்ட மூலமோ மந்திரங்களால் உருவேற்றப்பெற்ற கும்ப நீரால் மந்திரபூர்வமான நீரால் அபிஷேகித்து அங்கே தெய்வ சாந்நித்தியத்தை நிலை நிறுத்துவார்கள். ஆகாயதில் உள்ள இறை சக்தியை மந்திரங்களால் அக்னியில் இறக்கி நாடி சந்தானத்தால் கும்பத்தில் உள்ள நீரில் சேர்த்து அந்நீரால் பிருதுவி ரூபமான இறைமூர்த்திக்கு அபிஷேகிப்பர்.

பிடியதன் உரு உமை கொள மிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவர் இடர்
கடிகண பதிவர அருளினன் மிகு கொடை
வடிவினர் பயில்வலி வலம் உறை இறையே

உமாதேவி பெண் யானை வடிவம் கொண்டு மேவ, ஆண் யானை வடிவம் தாங்கி அடியவர்தம் இடர் போக்கும் கணபதிநாதன் தோன்றுமாறு அருள் புரிந்த ஈசன், மிகுந்த வள்ளல் தன்மை மிக்க சிறந்தவர் வாசம் புரியும் வலி வலத்தில் உறைகின்ற இறை யாவர் என விநாயகர் தோற்றத்தை திருஞானசம்பந்தர் அருளாளர் விளக்குகிறார்.

சிவபிரானும் உமாதேவியாரும் ஒரு மண்டபத்தை அடைகின்றார்கள். அங்கு எழுதியுள்ள மந்திரங்களைப்பார்த்து வரும் போது பிரணவ எழுத்தைக் கண்டனர் அகார, உகார, மகாரங்களின் கூட்ட ஒலியே பிரணவம். இந்த பிரணவத்தைச் சிவபிரானும் உமையும் உற்று நோக்கினர். அப்போது சிவனாரின் எழுத்தான அகரம் ஆண் யானையாகவும் இறைவியின் எழுத்தான உகரம் பெண் யானையாகவும் ஆயின. பின்பு இரு யானைகளும் கூடின. உடனே யானை முக விநாயகப் பெருமான் தோன்றினார். இது காஞ்சி புராண விளக்கம்.

மூலகார மூர்த்தியாக விநாயகப் பெருமான் ஓங்கார வடிவானவரே. ஓங்காரத்தால் எம்மை புனிதமாக்குவாய் எனவும், ஓங்காரத்தை வில்லாகவும், ஜீவாத்மாவை அம்பாகவும் இறைவனைக் குறியாகவும் கொண்டு சலனமற்ற பக்தி கொண்டால் ப்பரப்பிரம்மத்தை அடையலாம் என உப நிடதங்கள் கூறுகின்றன.

ஓம் என எப்பொழுதும் ஒலித்து தன்னை சித்தி விநாயகர் நாமம், காதலாகி கசிந்து உருகி, ஓதி துன்பங்கள் நீங்கி, பேரின்ப பெருவாழ்வு பெற்று ப்பரப் பிரமத்தை அடைவோமாக.

இப்படிக்கு
க.கு.க.சிவபாலன் (K.K.K)
அகில இலங்கை திருமுறை மன்றம் பொருளாளர்.



(சி-9465)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எவர் விலகினாலும் 2020 வரை அரசை நடத்திச் செல்வேன்

## ஜனாதிபதி மைத்திரி உறுதி



(கொழும்பு)

**எவர் விலகிச் சென்றாலும் 2020 வரை அரசாங்கத்தை நான் நடத்திச் செல்வேன் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.**

நேற்றுக்காலை ஊடக நிறுவன பிரதானிகளுடன் இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

2020 வரை கூட்டாட்சியை நடத்திச் செல்லும் சக்தி தனக்கு உள்ளதாக நம்புகிறேன் எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி, அவ்வாறு செய்ய முடியாது என்று கூறினால், அது சதியொன்றின் மூலம் மட்டுமே சாத்தியம் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

## சுங்க திணைக்களப் பணிப்பாளருக்கு நீதிமன்றம் அழைப்பாணை



பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்சவின் மனைவி ஷஷி வீரவன்சவிற்கு எதிரான வழக்கொன்றில் சாட்சி வழங்குவதற்காகச் சுங்க திணைக்கள பணிப்பாளர் சுலானந்த பெரேராவிற்கு நீதிமன்றம் அழைப்பாணை விடுத்துள்ளது.

இதன்படி எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 9ஆம் திகதி அவரை நீதிமன்றில் ஆஜராகுமாறு கொழும்பு பிரதான நீதவான் லால் ரணசிங்க பண்டார நேற்று அழைப்பாணை விடுத்துள்ளார்.

குடிவரவு குடியகல்வு திணைக்களத்திடம் தவறான தகவல்களை வழங்கி இராஜதந்திர கடவுச்சீட்டொன்றை தயாரித்தமை தொடர்பில் ஷஷி வீரவன்சவிற்கு எதிராகக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

சுலானந்த பெரேரா இதற்கு முன்னர் குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளராக கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## பிரிவினைவாத யுத்தம் முடிவடைந்து பிரிவினைவாத அரசியல் தோற்றம்



பிரிவினைவாத யுத்தம் முடிவடைந்து பிரிவினைவாத அரசியல் வேற்றுமை தோன்றியுள்ளதாக தேசிய ஒற்றுமைக்கான பாக்கீர் மாக்கார் நிலையத்தின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் தெரிவித்துள்ளார்.

இது நாட்டின் நல்லிணக்கத்திற்கு பேராபத்தான செயலெனவும் அவர் தெரிவித்தார். எழுத்தாணிக்கான தன்னடக்கம் எனும் நல்லிணக்க நேய கிழக்கு மாகாண ஊடக செயலமர்வின் ஆரம்ப வைபவத்தில் நேற்று முன்தினம் கலந்து கொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ள நிலையில் இந்த சந்தர்ப்பத்தினை நழுவ விடக் கூடாது எனவும், நாட்டில் சுபீட்சத்தையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்த வேண்டிய பொறுப்பு அனைவருக்கும் உண்டு எனவும் அவர் தெரிவித்தார்.

பிரிவினைவாத யுத்தம் முடிவடைந்து பிரிவினை அரசியல் வேற்றுமை தோன்றியுள்ளதோடு, சந்தேகம், அச்சம் புறந்தள்ளப்பட்டு நிலையான சகவாழ்வும் மகிழ்ச்சியும் ஏற்பட வேண்டுமெனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கடந்த கால அரசாங்கங்கள் நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த தவறிய நிலையில், யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவந்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீது மக்கள் நம்பிக்கை கொண்டிருந்த போதிலும் அவர் தனது கடமையை சரியாக நிறைவேற்றவில்லை எனவும் இரா.சம்பந்தன் எதிர்க்கட்சி தலைவராகவும் அனைவரும் ஒன்றுபட்டுள்ள நிலையில் ஐக்கிய இலங்கைக்குள் ஒரு தீர்வினை நோக்கி நகர்கின்ற இன்றைய சந்தர்ப்பத்தை நாம் முழுமையாக பயன்படுத்திக் கொள்ளவேண்டுமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## விஜயதாஸ விலகியதால் ராஜபக்ஷர்கள் அச்சத்தில்

## அஸாத் சாலி தெரிவிப்பு



நீதி அமைச்சர் பதவியை பொறுப்பேற்க முன்னரே மகிந்தவுடன் இருக்கும் சிலர் ஜனாதிபதியை சந்திக்க வரிசையில் இருந்து வருகின்றனர். அத்துடன் விஜயதாஸ ராஜபக்ஷ நீதிமன்ற நடவடிக்கைகளில் தலையிடவில்லையா என்பதை விசாரணை மேற்கொண்டால் தெரியவரும் என தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அஸாத் சாலி தெரிவித்தார்.

அதிகாரத்தை பகிர்ந்து ஐக்கியப்படுத்தும் இயக்கம் நேற்று முன்தினம் கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

விஜயதாஸ ராஜபக்ஷ நீதிமன்ற மற்றும் சட்டமா அதிபர் திணைக்கள நடவடிக்கைகளில் தலையிடாததனால் அவர் அமைச்சுப்பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார் என்றும் புதிய நீதி அமைச்சர் தலதா அத்துகோரள இந்த விடயங்கள் தொடர்பாக ஒப்பந்தம் செய்து கொண்டுதான் நீதி அமைச்சுப்பதவியை ஏற்றுக்கொண்டுள்ளாரா என உதய கம்மன்பில தெரிவித்துள்ளார். விஜயதாஸ ராஜபக்ஷ நீதிமன்ற நடவடிக்கைகளில் தலையிட்டாரா என்பதை நீதிமன்றத்தில் பொருத்தப்பட்டுள்ள கமரா மூலம் அறிந்து கொள்ளலாம்.

மேலும் விஜயதாஸவின் விலகலுடன் ராஜபக்ஷ குடும்பத்தினர் அச்சமடைந்துள்ளனர். அதனால்தான் தலதா அத்துகோரளவின் நடவடிக்கைகளை மிகவும் அவதானமாக கண்காணிப்பதாக மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அத்துடன் புதிய நீதி அமைச்சர் இன்னும் தனது பதவியை பொறுப்பேற்கவில்லை. ஆனால் தலதாவின் நியமனத்துடன் மகிந்தவுடன் இருக்கும் சில மோசடிக்காரர்கள் ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்த ஜனாதிபதி செயலகத்துக்கு முன்னாலும் ஜனாதிபதி மாளிகைக்கு முன்னாலும் வரிசையில் இருக்கின்றனர்.

அத்துடன் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு மற்றும் செய்தியாளர் மாநாட்டை குழப்பியமைக்கெதிராக ஞானசார தேரருக்கு நீதிமன்றத்தில் உடனடியாக பிணை வழங்கப்பட்டது.

ஆனால் தற்போது விஜயதாஸ ராஜபக்ஷ நீக்கப்பட்டதும் ஞானசார தேரர் நாட்டில் இல்லை என்றே தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் மகிந்த ராஜபக்ஷ அன்று ஐக்கிய தேசிய கட்சியின் தலைவரை பாதுகாக்க நடவடிக்கை எடுத்திருந்தார்.

அதற்கு உபகாரமாகவே மகிந்த ராஜபக்ஷ குடும்பத்துக்கு எதிராக நடவடிக்கை எடுக்காமல் ஐக்கிய தேசிய கட்சி பாதுகாத்து வருகின்றது என அஸாத் சாலி குற்றம் சாட்டினார். (இ-7)

## மகிந்தவுக்கு மீண்டும் பதவி; எதிர்ப்பைச் சமர்ப்பிக்க அவகாசம்

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக மீண்டும் நியமிக்குமாறு கோரித் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில், மனுதாரர் மற்றும் பிரதிவாதிகள் தரப்பின் எழுத்துமூல எதிர்ப்பை சமர்ப்பிப்பதற்கு திகதி குறிக்கப்பட்டது. இந்த எதிர்ப்புகளை, செப்டெம்பர் 4ஆம் திகதி சமர்ப்பிக்குமாறு, கொழும்பு மாவட்ட நீதிபதி சுஜீவ நிசங்க நேற்று முன்தினம் உத்தரவிட்டார்.

எழுத்துமூல எதிர்ப்பை, ஓகஸ்ட் 29ஆம் திகதி சமர்ப்பிக்குமாறு, உத்தரவிடப்பட்டிருந்த நிலையில், தமக்குக் கால அவகாசம் வேண்டுமென இரு தரப்பினரும் கோரியதையடுத்தே, மேற்கண்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

2015ஆம் ஆண்டு ஜனவரி 16ஆம் திகதி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அப்போதைய பொதுச் செயலாளர் அநுர பிரியதர்ஷன யாப்பாவால், கட்சியின் புதிய தலைவர் நியமனம் தொடர்பாக தேர்தல்கள் ஆணையாளருக்கு கடிதம் அனுப்பப்பட்டது.

மத்திய குழுவை முறையாக கூட்டாமல் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று, கே.டீ. அருன பிரியஷாந்த, மத்தேகொட அசங்க நந்தன ஆகியோரால் மனுத்தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த மனுவில், சு.கவின் முன்னாள் பொதுச் செயலாளர் அநுர பிரியதர்ஷன யாப்பா மற்றும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

பிரதிவாதியின் பெயர் சரியாகக் குறிப்பிடப்படவில்லை எனவும் இந்த வழக்கைக் கொண்டு செல்ல முடியாது என்றும் வழக்கைத் தள்ளுபடி செய்யுமாறும் கோரி, அநுர பிரியதர்ஷன யாப்பாவின் சார்பில் ஆஜரான சட்டத்தரணியினால் நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

இது தொடர்பாக, இரு தரப்பினரதும் எழுத்துமூல எதிர்ப்புகளைச் சமர்ப்பிக்குமாறே உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்த நிலையில், மேற்குறிப்பிட்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏ.எல்.பரீட்சையில் ஆள்மாறாட்டம்; ஒருவர் கைது

(கொழும்பு)

இம்முறை கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் ஆள்மாறாட்டம் செய்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

உகன பரீட்சை மத்திய நிலையத்தில் வைத்து, நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதற்கமைய கணக்கியல் பரீட்சைகளுக்காகவே இவ்வாறு மாணவர் ஒருவர் ஆள்மாறாட்டம் செய்துள்ளார்.

இது குறித்து பரீட்சை மேற்பார்வையாளரால் பொலிஸாருக்கு தெரியப்படுத்தப்பட்டதை அடுத்து, ஆள்மாறாட்டம் செய்ய வந்த 32 வயதான குறித்த சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டார்.

அவரை அம்பாறை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை உகன பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# 23 இலட்சம் ரூபா பெறுமதியான கருக்கலைப்பு மாத்திரைகள் மீட்பு



சுமார் 23 இலட்சம் ரூபா பெறுமதியான 16,930 கருக்கலைப்பு மாத்திரைகளுடன் ஒருவர் கட்டுநாயக்க சுங்க திணைக்கள அதிகாரிகளால் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தியாவின் உத்தர பிரதேசத்திலிருந்து கட்டுநாயக்க நோக்கி வந்த இந்திய பிரஜை ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாகச் சுங்க திணைக்கள ஊடகப் பேச்சாளர் சுனில் ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

விசாரணைகளின்றி முக்கிய பயணிகள் செல்லும் பகுதியினூடாக குறித்த நபர் வெளியேற முயற்சித்தவேளை, அதிகாரிகளுக்கு அவர் மீது சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

இதற்கமைய குறித்த நபரின் பயணப்பொதியை பரிசோதனை செய்த போதே பெறுமதி வாய்ந்த கருக்கலைப்பு மாத்திரைகள் கண்டுபிடிக்கப்பட்டதாக சுங்க திணைக்கள பிரதி பணிப்பாளர் பராக்கிரம பஸ்நாயக்க தெரிவித்துள்ளார்.

சந்தேகநபர் கொழும்பு கோட்டை, மருதானை ஆகிய பகுதிகளிலுள்ள தெரிவு செய்யப்பட்ட மருந்தகங்கள் சிலவற்றுக்கு குறித்த மாத்திரைகளை விநியோகித்து மீண்டும் இந்தியாவிற்குப் பயணிக்கவிருந்ததாக முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட நபருக்கு ஒரு இலட்சம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளதுடன், கைப்பற்றப்பட்ட மாத்திரைகள் அரசுடைமையாக்கப்பட்டுள்ளதாகவும் சுங்க திணைக்களம் அறிவித்துள்ளது. (இ-7)

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசியல் செய்வது கேவலம்

## முன்னாள் அமைச்சர் பிரபா கணேசன் கூறுகிறார்



புதிய அரசியல் யாப்பை உருவாக்குவதாகக் கூறிக் கொண்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் அடிவருடிகளாக இருந்த தென்னிலங்கை தமிழ் முற்போக்கு கூட்டணியும் பொதுத் தேர்தலின் போது தமிழ் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிக்கமைய செயற்படாமல் தமது நிலைப்பாட்டை காப்பாற்றிக் கொள்ளும் முகமாக அரசியல் செய்வது கேவலமானது என ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தலைவரும், முன்னாள் பிரதி அமைச்சருமான பிரபா கணேசன் தெரிவித்துள்ளார்.

புதிய அரசியலமைப்பு 100 நாட்களுக்குள் உருவாக்கப்பட வேண்டும் என அழுத்தம் கொடுத்த தமிழ்த்தேசிய கூட்டமைப்பினர் மற்றும் தென்னிலங்கை ஐ.தே.க அடிவருடர்களாக இருக்கும் தமிழ் முற்போக்கு கூட்டணியினர் அதனைப் பற்றி பேசுவதில்லை.

உள்ளூராட்சிசபை தேர்தல் சம்பந்தமாக தனது அதிருப்தியை தெரிவித்த் முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் போன்றவை ஊடகங்களுக்கு தமது எதிரான கருத்துக்களை தெரிவித்து விட்டு அரசாங்கத்திற்கு பாராளுமன்ற வாக்கெடுப்பின் போது ஆதரவு தெரிவித்திருப்பது கேவலமானது.

அதேபோல் தென்னிலங்கை தமிழ் கட்சிகளில் ஒரு சிலர் இதற்கு ஆதரவாக வாக்களித்திருப்பதன் மூலமாக தமது கூட்டணியின் நிலைப்பாட்டை மாற்றியிருக்கின்றார்கள். இவை அனைத்தும் ரணில் விக்கிரமசிங்கவின் பிரித்தாளும் சூழ்ச்சி தான் காரணம்.

ரணில் விக்கிரமசிங்க என்பவர் முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்தனாவின் உறவினர். அவரது நிலைப்பாட்டைத் தான் இவர் எப்பொழுதும் முன்னெடுப்பார்.

இவரை நம்பிய தமிழர்களை தந்தை செல்வா சொன்னது போன்று கடவுள் தான் காப்பாற்றுவார் என முன்னாள் பிரதி அமைச்சரான பிரபா கணேசன் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1177

Search for people, places and things  Nagendram Home

### ராதை





### மதனி




### தர்சினி




### தர்மா




### சர்மிளா




### கயல்விழி




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலைக்காட்சி உலகில் மக்களை ஈர்த்த பிக்போஸ்




## ஜூலி சொன்ன இரண்டாவது பொய்



ஜல்லிக்கட்டு போராட்டத்தில் பிரபலமான ஜூலி பிக் போஸ் வீட்டில் சொன்ன ஒரு பொய் காரணமாக அவரை ரசிகர்கள் வெறுக்க தொடங்கிவிட்டனர்.

பிக்போஸ் வீட்டுக்குள் மறுபடியும் நுழைந்த ஜூலி வீட்டுக்குள் இருப்பவர்களிடம் தொடர்ந்து பொய் கூறி ஏமாற்றி வருகிறார்.

அவர் சொன்ன பொய் என்ன தெரியுமா, பிக்போஸில் இருந்து வெளியேறி வெளியே சென்ற பிறகு ரசிகர்கள் நிறைய கிப்ட் கொடுத்தார்கள்.

கமல்சேர்கூட கொடுத்தார்.ஆனால் ரசிகர்கள் தான் அதிகம் கொடுத்தார்கள்" என ஜூலி சொன்னதும், அது பொய் என மற்றவர்கள் உடனே கண்டுபிடித்து விட்டனர்.

## காதலியை கரம்பிடித்த காஜலின் முன்னாள் கணவர்



பிக்போஸ் நிகழ்ச்சியில் கடந்த வாரத்தில் உள்ளே சென்ற காஜலை சக போட்டியாளர்களுக்கு சற்று பிடிக்கவில்லை என்று தான் கூற வேண்டும். இதனை நிகழ்ந்த எலிமினேஷன் நிகழ்வில் மிகத் தெளிவாகவே காட்டியுள்ளனர். இந்நிலையில் காஜலின் முன்னாள் கணவர் வெளியிட்டுள்ள தகவல் சற்று அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இவரது முன்னாள் கணவரான சாண்டி பிரபல பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் அவர் கடந்த வந்த பாதையில் இருந்த கஷ்டங்களையும், சந்தோஷங்களையும் பகிர்ந்து கொண்டுள்ளார். இதில் கடைசியாக கேட்கப்பட்ட கேள்வி பிக்போஸில் காஜல் கலந்துகொண்டிருப்பது குறித்து கேட்கப்பட்டுள்ளது. அதற்கு அவர், "என் கடந்த காலத்தில் நான் ரொம்பக் கஷ்டப்பட்டிருக்கேன். அதனால் அதை மறக்க நினைக்கிறேன். காஜல் பற்றி நான் எதுவும் பேச விரும்பவில்லை. அவங்களை மறந்துட்டேன். ப்ளீஸ்! என்று பதிலைச் சுருக்கமாக முடித்துள்ளார்.

## ஒரே நாளில் ஓவியாவிற்கு கிடைத்த வரவேற்பு



ஓவியா இன்று பலரும் விரும்பும் ஒரு முகம். சினிமா நடிகையான இவர் பிக்போஸ் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு 50 நாட்கள் ஆகும் முன்னரே மக்கள் மனங்களை வென்று விட்டார்.

பலத்த ஆதரவுகள் ஒரு பக்கம் குவிய, இவர் எதிர்த்தவர்களை மக்களும் விட்டுவைக்கவில்லை. கடும் விமர்சனங்களும் வந்தது. இந்நிலையில் ட்விட்டருக்கு வந்த ஓவியா அன்பையும், அக்கறையையும் விபரித்து சொல்ல வார்த்தைகள் இல்லை.

ஆசிர்வதிக்கப்பட்டவளாக உணர்கிறேன். உங்களின் அன்பிற்கும் மரியாதைக்கும் நன்றி என பதிவிட்டிருந்தார். இதற்கு 24 மணிநேரத்திற்குள் 49000 பேர் லைக் செய்திருந்தனர், மேலும் 14000 பேர் ரீட்வீட், 8500 பேர் கமெண்ட் செய்துள்ளனர்.

## ஆரவ் மீது காதல் சொன்ன ஜூலி பழைய கதையை பேசும் ஆர்த்தி



BiggBoss நிகழ்ச்சியில் ஜூலி மற்றும் ஆர்த்தி மீண்டும் ரீ என்ட்ரி கொடுத்துள்ளனர். அவர்கள் வந்ததில் இருந்து வீட்டில் இருக்கும் அனைவரும் ஒரு மாதிரியாகத் தான் நடந்து கொள்கின்றனர்.

இந்த நிலையில் ஜூலி முதலில் வீட்டில் நுழைந்த போது ஆரவ்வை பார்க்கும் போது ஏதோ செய்கிறது என்று காயத்ரியிடம் கூறியிருப்பார். அதனை மீண்டும் வீட்டில் நுழைந்த ஆர்த்தி பேசுகிறார்.

இதனால் ஜூலி மற்றும் ஆர்த்தி இடையே சூடான வாக்குவாதம் நடக்கிறது. இறுதியில் என்ன நடக்கிறது என்பதை நிகழ்ச்சியில் காண காத்திருப்போம்.

## சுஜா ஓவியாவைப் போல் நடந்துகொள்கிறார்



பிக்போஸ் நிகழ்ச்சியில் வார இறுதியில் கமல் போட்டியாளர்களிடம் இந்த வார அனுபவத்தை கேட்பார். கடந்த சில வாரங்கள் சண்டைசச்சரவு போன்ற பல விடயங்கள் நடந்துள்ளன. ஆனால் இந்த வாரம் பெரியளவில் எந்த் ஒரு பிரச்சினைகள் இல்லாமல் சென்றது.

இந்நிலையில் கமல் என்ன வீடு சந்தோசமாக போகிறதே என்று ஒரு புது விளையாட்டை தொடங்கினார், என்னவென்றால் வீட்டுக்குள் ஒரு நீதிமன்றத்தை உருவாக்கி போட்டியாளர்களிடம் தங்களுக்குள் மற்றவர்களை பற்றி இருக்கும் புகாரை நீதிமன்றத்தில் தெரிவிக்கலாம் என்று கமல் கூறினார்.

அதன் அடிப்படையில் காஜல் வக்கீலாக இருந்து புகார் சுமத்தப்பட்ட சுஜாவிடம் ஏன் நீங்கள் ஓவியா போல் நடந்து கொள்கிறீர்கள் என்று கேள்வி எழுப்பினார்.

அதற்கு நான் இயல்பிலே அப்படி தான், என்னை பற்றி தெரிந்தவர்கள் எல்லோருக்கும் தெரியும் என கூறினார், இருந்தாலும் வீட்டில் உள்ளவர்கள் அனைவரும் ஓவியா போல் தான் நடந்து கொள்கிறார் என்று கூறினார்.

## விமர்சனங்கள் மீது கோபம் கொண்ட கமல்




தற்போது ஒரு பிரபல தனியார் தொலைக்காட்சியில் பிக்போஸ் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கிவருகிறார் கமல்ஹாசன். சனிக்கிழமை ஒளிபரப்பான நிகழ்ச்சியில் ஜூலி, காயத்ரி உள்ளிட்டவர்கள் மீது பொதுமக்கள் வைக்கும் விமர்சனங்கள் பற்றி கோபமாக பேசினார் கமல்.

இந்த கோபத்தை நீங்கள் ஏன் அரசியல்வாதிகள் மீது காட்டவில்லை என அவர் கேட்டார். மேலும் விமர்சனம் செய்வது தவறில்லை, ஆனால் அதன் தரம் குறையாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என கமல் மேலும் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2025 இல் கடன் இல்லாத நாட்டை உருவாக்குவோம்

## பிரதமர் ரணில் நம்பிக்கை



இந்தியா, சீனா, அமெரிக்கா, ரஷ்யா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளுடன் எமக்கு எந்தவொரு பிரச்சினையும் இல்லை. குறித்த நாடுகளுடன் நட்புகொண்டு பிரச்சினைகள் இல்லாமல் தொடர்ந்து பயணிப்போம். அத்துடன் இந்த நாடுகளின் நிதி உதவிகளைப் பெற்று நாட்டின் பொருளாதாரத்தை பலப்படுத்துவோம் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அத்துடன் 2020 ஆம் ஆண்டளவில் பொருளாதாரத்தில் பாரிய மாற்றம் ஏற்படும். 2025 ஆம் ஆண்டில் கடன் இல்லாத நாட்டை உருவாக்குவோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பு மாவட்டத்தில் நேற்று முன்தினம் 1100 குடும்பங்களுக்கு வீட்டுக்கடன் உதவி வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டிலுள்ளகடன்சுமையை தீர்க்க முடியாத காரணத்தினாலேயே முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இரு வருடங்களுக்கு முன்பே தேர்தலை நடத்தினார். அத்துடன் நல்லாட்சி அரசாங்கத்திற்கும் கடன்செலுத்த முடியாது என்றே எம்மை பார்த்து கூறினார். எனினும் நாம் இரு வருடங்களில் கடன் செலுத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்து விட்டோம். அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீன நிறுவனத்துடன் கைகோர்த்து அரச, தனியார் கூட்டு பங்காண்மை மூலமாக முன்னேற்றவுள்ளோம். இந்த வேலைத்திட்டத்தின் ஊடாக கடன்சுமையை மேலும் குறைக்க முடிந்தது.

தேசிய அரசாங்கம் இவ்வளவு கடன் சுமைக்கு மத்தியிலும் பெற்றோல், சமையல் எரிவாயு உட்பட அத்தியாவசிய பொருட்களின் விலைகளை குறைத்து, வருமானத்தை அதிகரித்தது. அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரித்தோம். இரு வருடத்தில் இரண்டரை இலட்சம் தொழில் வாய்ப்புக்களை உருவாக்கியுள்ளோம். எனவே பொருளாதாரத்தை மேலும் பலப்படுத்தியுள்ளோம்.

அத்துடன் தற்போது நாம் இந்தியாவுடன் நல்ல நட்பை வைத்துக் கொண்டுள்ளோம். எந்தவொரு பிரச்சினையும் இல்லை. சீனாவுடனும் ஜப்பானுடனும் அமெரிக்காவுடனும் ரஷ்யாவுடனும் எந்தவொரு பிரச்சினையும் எமக்கு இல்லை. ஆகவே இந்தியா, சீனா, அமெரிக்கா, ரஷ்யா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளுடன் நட்பு கொண்டு பிரச்சினைகள் இல்லாமல் தொடர்ந்து பயணிப்போம்.

ஜப்பானின் நிதி உதவியுடன் கண்டி நகரத்தை அபிவிருத்தி செய்யவுள்ளோம். அத்துடன் அதிவேக வீதி, மேல் மாகாண மாநகர வேலைத்திட்டம், சுற்றுலாத்துறை உள்ளிட்ட அனைத்து துறைகளையும் நாம் வளர்ச்சிக்கு உட்படுத்தவுள்ளோம். மேலும் திருகோணமலை, மாத்தறை, அம்பாந்தோட்டை உள்ளிட்ட அனைத்து பகுதிகளையும் அபிவிருத்தி செய்யவுள்ளோம். மேலும் வடக்கு, மலையகம், கிராமிய பகுதிகளில் வீடமைப்புத் திட்டங்களை ஆரம்பிக்கவுள்ளோம்.

இதன்படி 2020 ஆம் ஆண்டளவில் பொருளாதாரத்தில் பாரிய மாற்றம் செய்யப்படும். 2025 ஆம் ஆண்டில் நாட்டின் முழுமையான கடன் சுமையை நாம் இல்லாமல் செய்வோம் என அவர் மேலும் தெரிவித்தார்.(இ-7)




# நாடாளுமன்றில் மக்கள் பிரதிநிதிகள் இல்லை "பொம்மைகளே" உள்ளன

## ஜே.வி.பி. கடும் விசனம்



மக்களுக்கு மேலும் சுமையை அதிகரிக்கும் வகையில் அரசாங்கம் கொண்டு வர முயற்சிக்கும் வரிச் சட்டத்தை சகல மக்களும் இணைந்து தோற்கடிக்க வேண்டுமென மக்கள் விடுதலை முன்னணி கோரிக்கை விடுத்துள்ளது.

கடந்த வரவு-செலவுத் திட்டத்தில் வற் வரியை 15 வீதமாக அதிகரித்த அரசாங்கம், அத்துடன் நின்றுவிடாது மேலும் சுமையை அதிகரிக்கும் வகையில் அரசாங்கம் உத்தேச வரிச் சட்ட மூலமொன்றை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்திருப்பதாக அந்தக் கட்சி குற்றம்சாட்டியுள்ளது.

புறக்கோட்டை புகையிரத நிலையத்தில் இது தொடர்பில் தெளிவுபடுத்தும் துண்டுப் பிரசுரங்களை விநியோகிக்கும் செயற்றிட்டத்தில் அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளிந்த ஜயதிஸ்ஸ, தொழிற்சங்க தலைவர் கே.டி.லால்காந்த உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

நாடாளுமன்றத்தில் உள்ளவர்கள் மக்கள் மீது சுமையை அதிகரிக்கும் வகையில் கொண்டுவரப்படும் வரிச் சட்ட மூலங்களை எதிர்க்காது சமிக்ஞை விளக்குகள் போன்று செயற்படுவதாக கே.டி.லால் காந்த தெரிவித்துள்ளார்.

தமக்கு வாகனங்கள் உள்ளிட்ட வசதிகள் கிடைக்கும் போது சபையில் கொண்டு வரப்படும் எந்தவொரு சட்டத்துக்கும் ஆதரவு வழங்கும் வகையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் செயற்படுவதாகவும் அவர் குற்றம்சாட்டியுள்ளார்.

மக்கள் பிரதிநிதிகள் நாடாளுமன்றத்தில் இல்லை எனவும் மிக மிகக் குறைந்த எண்ணிக்கையான மக்கள் பிரதிநிதிகளே அங்கு இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பெரும்பாலானவர்கள் வரப்பிரசாதங்களுக்காக பெயரளவில் உள்ள பொம்மைகளாக இருப்பதாகவும், இவர்களின் ஊடாக மக்களுக்கு நன்மை கிடைக்கும் என எதிர்பார்க்க முடியாது எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)



மலர்வு
1982
05
30

உதிர்வு
2014
09
04

# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## சுந்தரலிங்கம் பிரபாகரன் [பிரபா]

திதி(31.08.2017)

சுந்தரரின் புத்திரராய் சிவநாமம் போற்றிய எம்
கரனே பிரபா கரனே சரணமாய் போனதுவே
ஆண்டுகள் மூன்று... பல்லவியே முகாரியானதுவோ
அரனாயிருந்த எம் ஆல மரமே
விழுதுகள் நாம் தவிக்கின்றோம் அத்திவாரமாய் இருந்தவனே
ஏன் சரிந்தாய் நாம் பதைக்க... கண்ணுக்குள் உம்
உருவம் ஒளிருதையா நெஞ்சுக்குள் உன் சிரிப்பு
வாடாமல் மலருதையா இயற்கை தரும் பாடங்கள் 'விதி'
இவைதான் என்றால் அமைதி கொள்கின்றோம்...
அன்புத் தெய்வத்தின்
ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

(278) ஊரெழு மேற்கு, சுன்னாகம். குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

# கர்வம் கொண்ட நரி

ஒரு அடர்ந்த காட்டில் கர்வம் பிடித்த நரி ஒன்று வாழ்ந்து வந்தது. அந்த நரி ஒரு நாள் காலையில், உணவை தேடி வேட்டைக்கு மேற்கு நோக்கி கிளம்பியது. அப்போது கிழக்கே இருந்து எழுந்த சூரிய ஒளியால் நரியின் நிழல் மிக பெரிய தாக தெரிந்தது.

தனது நிழலை பார்த்த நரிக்கு ஒரே சந்தோசம். "நான் ரொம்பப் பெரிய ஆளாக்கும். அதுவும் இந்த காட்டின் ராஜாவாக உள்ள சிங்கத்தை விடவும் பெரியவனாக நான் உள்ளேன் என நினைத்து கொண்டே வேட்டைக்குச் சென்றது.

செல்லும் வழியில் நரி ஒரு சிங்கத்தை கண்டது. சிங்கமோ சற்று முன்னர் தான் ஒரு மானை வேட்டையாடி அதை உண்ட களைப்பில் மெதுவாக நடந்து வந்து கொண்டிருந்தது.

நரியும் தன்னுடைய நிழல் சிங்கதைவிடவும் பெரியதாக இருபதாக நினைத்து கொண்டு சிங்கம் வரும் வழியில் நடந்து சென்றது.



சிங்கமும் உண்ட களைப்பில் இருந்ததால் நரியை ஒன்றும் செய்யாமல் கடந்து சென்றது.



நரிக்கோ ஒரே குஷி. நாம் சிங்கத்தை விடவும் பெரியதாக இருபதனால் சிங்கம் என்னைகண்டு பயந்து சென்றது என நினைத்துகொண்டு அன்று மாலை தன்னுடைய வீட்டிற்க்கு சென்றது.

மாலை வீட்டிற்க்குச் சென்றதும் நரி காட்டில் உள்ள மிருகங்களை எல்லாம் அழைத்தது. அனைத்து மிருகங்களும் நரியின் கூட்டத்திற்கு வருகை புரிந்தன. நரி அனைத்து மிருகங்களிடமும், "இனிமேல் இந்த காட்டிற்கு நான் தான் ராஜா" என்றது.

யானையோ, "இதை நாங்கள் ஏற்க முடியாது என்றது. உடனே நரி காலையில் நடந்த சம்பவத்தைக் கூறி சிங்கமே என்னைக் பார்த்து பயந்து சென்றது" என்றது. கூட்டத்தில் இருந்த மானோ, "சிங்கத்தை உன் முன் மண்டியிடச் சொல் பிறகு உன்னை இந்த காட்டிற்கு ராஜவாக்குகிறோம்" என்றது.

அடுத்த நாள் நரி அந்த சிங்கத்தை தேடிச் சென்றது.

செல்லும் வழியில் சிங்கம் தன்னுடைய பாதையை நோக்கி வருவதை கண்டு நரி கர்வத்துடன் நின்றது.

சிங்கம் வந்தவுடன் சிங்கத்தை பார்த்து, நரி "என் முன்னாள் மண்டியிட்டுச் செல்" என்று கூறியது.

சிங்கமோ மிகவும் கோவத்துடன், தரக்குறைவாக பேசிய நரியை பார்த்து. "உன்னை மன்னித்து விடுகிறேன் உடனே இங்கிருந்து ஓடிவிடு" என்றது.

நரியோ சிங்கம் தன்னை கண்டு பயந்து விட்டது என நினைத்து "முடியாது" என்று பதில் கூறிக்கொண்டே தன்னுடைய நிழலைப் பார்த்தது. அது மதிய நேரம் என்பதால் நரியின் நிழல் உண்மையான அளவில் இருந்தது. அப்பொழுது தான் நரிக்கு புரிந்தது சூரிய ஒளியில் தான் தனுடைய நிழல் பெரியதாக இருந்தது என்று.

இதை பொறுத்துக்கொள் முடியாத சிங்கம் நரியை ஒரே அடியினால் கொன்று தின்றது.

முற்றும்.




## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

◆1422 - ஆறாம் ஹென்றி 9 மாத அகவையில் இங்கிலாந்தின் மன்னன் ஆனான்.

◆1886 - தென் கரோலினாவில் சார்ல்ஸ்டன் நகரில் நிலநடுக்கம் ஏற்பட்டதில் 100 பேர் கொல்லப்பட்டனர்.

◆1888 - கிழிப்பர் ஜேக்கின் முதலாவது படுகொலை இடம்பெற்றது.

◆1897 - தொமஸ் எடிசன் முதலாவது திரைப்படம் காட்டும் கருவியான கினெட்டஸ் கோப்புக்கான காப்புரிமம் பெற்றார்.

◆1919 - அமெரிக்க கம்யூனிஸ்ட் கட்சி அமைக்கப்பட்டது.

◆1942 - மேற்கு உக்ரைன், டெர்னோப்பில் என்ற இடத்தில் காலை 4:30 மணிக்கு 5,000 யூதர்கள் பெல்செக் என்ற நாசி வதை முகாமிற்கு அனுப்பப்பட்டனர்.

◆1945 - ஆஸ்திரேலியாவில் லிபரல் கட்சி ஆரம்பிக்கப்பட்டது.

◆1957 - ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து மலாயா கூட்டமைப்பு விடுதலை பெற்றது.

◆1962 - ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து திரினிடாட் டொபாகோ விடுதலை பெற்றது.

◆1978 - இலங்கையில் ஜனாதிபதி ஆட்சிமுறையை அறிமுகப்படுத்திய புதிய அரசியல் யாப்பு வெளியிடப்பட்டது.

◆1986 - கலிபோர்னியாவில் இரு விமானங்கள் வானில் மோதிக்கொண்டதில் 67 பேர் வானிலும் 15 பேர் தரையிலும் கொல்லப்பட்டனர்.

◆1986 - சோவியத் பயணிகள் கப்பல் "அட்மிரல் நகீமொவ்" கருங்கடலில் மூழ்கியதில் 423 பேர் கொல்லப்பட்டனர்.

◆1991 - சோவியத் ஒன்றியத்தில் இருந்து கிர்கிஸ்தான் வெளியேறி தனிநாடாக அறிவித்தது.

◆1997 - வேல்ஸ் இளவரசி டயானா பாரிஸில் கார் விபத்தில் கொல்லப்பட்டார்.

◆1998 - வடகொரியா தனது முதலாவது செய்மதியை ஏவியது.

◆1999 - புவெனஸ் ஐரிசில் பயணிகள் விமானம் ஒன்று விமான நிலையத்தில் இருந்து புறப்படுகையில் விபத்துக்குள்ளாகியதில் 65 பேர் கொல்லப்பட்டனர்.

◆2005 - பக்தாத்தில் அல் ஆயிம்மா பாலத்தில் கூட்ட நெரிசலில் சிக்கி 1,199 பேர் கொல்லப்பட்டனர்.

◆2007 - அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியை நடிகர் சரத்குமார் ஆரம்பித்தார்.

பிறப்புகள்

◆1569 -ஜஹாங்கீர், முகலாயப் பேரரசர் (இ. 1627)

◆1870 - மரியா மாண்ட்டிசோரி, இத்தாலியக் கல்வியாளர், மருத்துவர் (இ. 1952)

◆1905- எஸ். ஆறுமுகம், ஈழத்துப் பொறியியலாளர், எழுத்தாளர் (இ. 2000)

◆1907 - ரமன் மக்சேசே, பிலிப்பீன்சின் 7வது அரசுத்தலைவர் (இ. 1957)

◆1969 -ஜவகல் ஸ்ரீநாத், இந்தியத் துடுப்பாட்ட வீரர்

◆1970 - யோர்தானின் ரானியா அல்-அப்துல்லா

◆1970 -ஸாக் வார்ட், கனடிய நடிகர், தயாரிப்பாளர்

◆1977 - ஜெஃப் ஹார்டி, அமெர்க்க மற்போர் வீரர், பாடகர்

◆1979 - யுவன் சங்கர் ராஜா, இந்திய இசையமைப்பாளர், பாடகர்

இறப்புகள்

◆1997 - டயானா, வேல்ஸ் இளவரசி (பி. 1961)

◆2000 - கே. கே. பாலகிருஷ்ணன், கேரள அரசியல்வாதி (பி. 1927)

◆2009 - வை. அநவரத விநாயகமூர்த்தி, ஈழத்து எழுத்தாளர், ஊடகவியலாளர் (பி. 1923)

◆2012 - பிராங்க் பெ. மெக்டொனால்டு, அமெரிக்க வானியற்பியல் அறிஞர் (பி. 1925)

◆2014 -பப்பு, இந்திய இயக்குநர் (பி. 1933)

சிறப்பு நாள்

◆விடுதலை நாள் (கிர்கிசுத்தான் 1991)

◆விடுதலை நாள் (மலாயா, 1957)

◆விடுதலை நாள்(டிரினிடாட் மற்றும் டொபாகோ, 1962)

◆தேசிய மொழி நாள் (மல்தோவா)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 150 | 120 | 140 | 160 | 120 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 100 | 120 | 120 | 100 |
| பச்சைமிளகாய் | 300 | 300 | 350 | 200 | 400 | 300 |
| தக்காளி | 160 | 200 | 160 | 150 | 200 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 120 | 100 | 80 | 80 | 80 |
| கோவா | 100 | 120 | 120 | 80 | 100 | 100 |
| கரட் | 100 | 200 | 160 | 140 | 160 | 160 |
| பூசணி | 50 | 40 | 40 | 40 | 60 | 60 |
| புடோல் | 60 | 120 | 80 | 80 | 80 | 70 |
| வாழைக்காய் | 100 | 120 | 120 | 100 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 180 | 220 | 200 | 200 | 200 | 160 |
| பெரிய வெங்காயம் | 130 | 160 | 140 | 120 | 120 | 130 |
| பாகற்காய் | 150 | 300 | 200 | 170 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 40 | 100 | 40 | 80 | 80 | 60 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 120 | 120 | 120 | 100 |
| பயற்றங்காய் | 50 | 60 | 60 | 60 | 80 | 40 |
| லீக்ஸ் | 80 | 120 | 120 | 80 | 100 | 100 |
| பீற்றூட் | 40 | 40 | 50 | 50 | 80 | 60 |
| கறிமிளகாய் | 120 | 200 | 160 | 120 | 120 | 120 |
| முருங்கைக்காய் | 50 | 40 | 80 | 50 | 80 | 70 |
| போஞ்சி | 180 | 200 | 160 | 160 | 240 | 120 |
| கத்தரிதம்புள்ள | 120 | 100 | 100 | 120 | 150 | 100 |
| கீரை -1பிடி | 40 | 20 | 40 | 30 | 30 | 30 |
| தேசிக்காய் | 120 | 100 | 200 | 120 | 250 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 80 | 70 | 65 | 50-70 | 60 |
| இராசவள்ளி | 200 | - | - | 280 | - | - |
| வெங்காயப்பூ | 250 | - | 200 | - | 160 | 250 |
| முள்ளங்கி | 80 | 60 | 80 | 80 | 60 | 60 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 30 | 40 | 40 | 30 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 20 | 20 | 15 |
| ஈரப்பலா | 60 | 60 | 100 | 50 | 80 | 60 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடம்பரமான மெத்தையின் மீதே அநேக சாம்ராச்சியங்கள் அழிந்தன.

– ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## பதவியைத் துறப்போமென எச்சரிக்க யாருளர்?

காணாமல் போனவர்கள் தொடர்பில் இன்னமும் எந்த முடிவும் எட்டப்படவில்லை. இதன் காரணமாக காணாமல் போனவர்களின் உறவுகள் சதா கண்ணீருடன் அலைந்து திரிகின்றனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சில உத்தரவாதங்களை கொடுத்திருந்தாலும் அதுவும் வெறுமை என்றாயிற்று.

இந்நிலையில் காணாமல் போனவர்களின் உறவுகள் நேற்றைய தினம் வடக்கு கிழக்கு எங்கும் ஆர்ப்பாட்டப் போராட்டங்களை நடத்தியுள்ளனர்.

இப்போராட்டம் சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தையொட்டி நடத்தப்பட்டதாயினும் இது தொடர்பில் இலங்கை அரசாங்கமோ அன்றி சர்வதேச சமூகமோ கவனம் எடுக்கும் என்று நம்பிவிடமுடியாது.

அவ்வாறு நடவடிக்கை எடுப்பதாக இருந்தால் எப்பவோ அந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

பொதுவில் காணாமல் போனவர்களின் விவகாரத்துக்கு இன்னமும் ஒரு முடிவு கட்டப்படவில்லை என்பதற்குள் எங்கள் அரசியல் தலைவர்களின் அசமந்தப் போக்கும் பெரும் பங்கு கொண்டுள்ளது என்பதைக் கூறித்தானாக வேண்டும்.

சுருங்கக்கூறின் காணாமல்போனவர்களின் விடயத்தில் தமிழ் அரசியல் தலைவர்கள் எந்த நடவடிக்கையையும் விசுவாசத்துடன் எடுக்கவில்லை என்பதே உண்மை.

அடுத்த தேர்தலில் தங்களுக்கு வாக்குக் குறைந்து விடும் என்பதால், அவ்வப்போது காணாமல் போனவர்க்ள் தொடர்பில் ஏதேனும் கதைப்பார்கள். அந்தளவோடு அந்த விடயம் நின்று விடும்.

நாங்கள் சும்மா கதைப்போம். அதுபற்றி நீங்கள் அலட்டிக் கொள்ளத் தேவையில்லை என்று அரசாங்கத்திடம் கூறி வைத்த மாதிரியாக தமிழ்த் தரப்பின் கருசனை இருக்கும்.

யார் என்ன சொன்னாலும் இதுவே யதார்த்தம். தமிழ் அரசியல் தரப்பை பொறுத்தவரை அவர்களுக்கு காணாமல் போனவர்கள் சார்ந்த விடயமும் தமிழ் அரசியல் கைதிகளின் விவகாரமும் சினத்தையும் வெறுப்பையுமே கொடுக்கிறது,

இது என்ன உபத்திரவம் என்று அவர்கள் நினைப்பதாலேயே காணாமல் போனவர்களின் விடயம் அவர்களின் உறவுகளோடு மட்டும் நின்று விடுகிறது.

உண்மையில் தமிழ் அரசியல் தரப்பு காணாமல் போனவர்களின் விடயத்தில், தமிழ் அரசியல் கைதிகளின் விவகாரத்தில் விசுவாசமான கருசனை கொண்டிருந்தால் அரசாங்கத்துக்கு பலமான எச்சரிக்கையை விட்டிருப்பர்.

காணாமல் போனவர்கள் – தமிழ் அரசியல் கைதிகள் விவகாரங்களில் அரசாங்கம் உரிய நடவடிக்கையை எடுக்கத் தவறினால் அரசுக்கான ஆதரவை நீக்குவோம். எங்கள் பதவிகளைத் தூக்கி எறிவோம் என்று எச்சரிக்கை செய்திருப்பர்.

ஆனால் அப்படி எதுவும் நடக்காமல் காலம் கடத்தும் நாடகத்தையே இவர்கள் செய்து கொண்டிருக்கின்றனர்.

காணாமல் போனவர்கள் மற்றும் அரசியல் கைதிகள் முஸ்லிம் இனம் சார்ந்தவர்களாக இருந்திருந்தால் அதனை முஸ்லிம் அரசியல்வாதிகள் எப்படிக் கையாண்டிருப்பர் என்பதை நாம் கூறி யாரும் அறிந்து கொள்ள வேண்டிய தேவையிராது.

ஆக, எங்கள் தமிழ் அரசியல் தரப்பின் பதவி ஆசையும் இன விசுவாசம் இல்லாமையும் சேர்ந்து எங்கள் தமிழினத்தை தெருத்தெருவாக அலைய வைக்கிறது அவ்வளவுதான்.

# நல்லூரிலிருந்து பேரணியாகச் சென்று

# ஐ.நா.பொதுச் செயலாளர் குட்ரேரஸிற்கு காணாமற்போனோரின் உறவினர்கள் மகஜர்

(யாழ்ப்பாணம்)

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான சர்வதேச தினத்தை முன்னிட்டு வடக்கில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் நேற்றைய தினம் யாழ். நல்லூர் கந்த சுவாமி ஆலய முன்றலில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டதுடன், ஐ.நா. செயலாளர் நாயகத்துக்கு மகஜர் ஒன்றும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த போராட்டத்தில் வடக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களையும் சேர்ந்த காணாமல் போனவர்களுடைய உறவுகள் கலந்து கொண்டிருந்தனர். காணாமல் போன தமது உறவுகளுக்கு நீதி கோரி கோசங்களை எழுப்பியிருந்ததுடன் நல்லூரில் இருந்து பேரணியாக யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள ஐ.நா. அலுவலகம் நோக்கி சென்றனர்.

இதன்போது ஐ.நா. பொதுச் செயலாளர் நாயகம் அன்டோனியோ குட்ரேரஸிடம் சேர்ப்பிப்பதற்காக கையளிக்கப்பட்ட மகஜரில்,

இலங்கையில் போர் முடிவுக்கு வந்து எட்டு ஆண்டுகள் நிறைவடைந்துவிட்டன. எனினும் இலங்கையின் வடக்கு- கிழக்கு பிரதேசங்களிலும் தென்பகுதியிலும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினையானது இன்னும் ஒரு எரிகின்ற பிரச்சினையாகவே தொடர்கிறது.

குறிப்பாக, வடக்கு- கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்ப உறவுகளும் பாதிக்கப்பட்ட சமூகங்களும இன்னும் தமது காணாமல் ஆக்கப்பட்ட அன்புக்குரியவர்களைத் தேடியலைந்து கொண்டிருக்கின்றனர். தொடா கவனயீர்ப்புப் போராட்டங்களில் ஈடுபட்டுள்ளனர். கடும் வெயிலில் காய்ந்து கொண்டும் அடை மழையில் நனைந்துகொண்டும் வயோதிபத் தாய்மார் தமது பிள்ளைகளின் படங்களை கைகளில் ஏந்தியபடி நீதி கோரி வீதியருகே மாதக் கணக்கில் அமர்ந்திருக்கும் காட்சி மனிதத்துவத்தைக் கேள்வி கேட்பதாகவுள்ளது. எனினும் அரச தரப்பால் நம்பிக்கையளிக்கக் கூடிய பதில்கள் எதுவும் இதுவரையில் கிடைக்கவில்லை.

2015 இல் ஆட்சிக்கு வந்த நல்லாட்சி அரசு, இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு உண்மை, நீதி, இழப்பீடு மற்றும் மீள நிகழாமையை உறுதிப்படுத்துவதற்காக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைத்துடன் இணைந்து 01 ஒக்டோபர் 2015 அன்று ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. அதில் நிலைமாறு கால நீதிப் பொறிமுறைகளில் ஒன்றாக காணாமற்போனோர் அலுவலகத்தை அமைப்பது. மற்றும் அதற்கு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நாயகத்தின் அலுவலகம் உட்பட சர்வதேச தரப்புகளின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்வது குறித்து எடுத்துரைக்கிறது.

எனினும், இலங்கையில் காணாமற்போனோர் அலுவலக சட்டமூலமானது பாதிக்கப்பட்டோர், மனித உரிமை ஆர்வலர்கள், சிவில் சமூகத்தினரின் பங்கேற்பின்றி வெளிப்படைத் தன்மையற்ற முறையில் உருவாக்கப்பட்டு பிரதமரின் பணிப்புரைக்கு அமைய வர்த்தமானிப்படுத்தப்பட்டது. பின்னர் பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டு சட்டமாக நிறைவேற்றப்பட்டு 26, ஒகஸ்ட், 2016 அன்று வர்த்தமானிப்படுத்தப்பட்டது.

இந்த அலுவலகமானது சட்ட நடவடிக்கை எடுக்கும் அதிகாரமற்ற அங்கமாகும். தகவல்களைத் திரட்டும் ஒரு அலுவலகமாக மாத்திரமே இது செயற்படும். இந்தத் தகவல்கள் சட்ட நடவடிக்கைகளுக்கான சாட்சியங்களாக பயன்படுத்தப்படாது. அத்துடன் இந்த தகவல் ஆதாரங்கள் பாதிக்கப்பட்டோருக்கும் வழங்கப்படமாட்டாது.

இந்தஅலுவலகமானது வினைத்திறனுடன் செயற்படுவதற்கு எந்த ஒரு நிறுவனத்துடனும் தனிநபருடனும் ஒப்பந்தங்களை செய்து கொள்ளும்அதிகாரம்உடையதெனக் கூறுகிறது.

எனினும், காணாமல் ஆக்கப்பட்டோர் குடும்ப உறவுகளுடனோ சிவில் அமைப்புகளுடனோ கலந்துரையாடாது ஒரு விசேட திருத்தத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்றி காணாமற்போனோர் அலுவலகத்துக்குக் கிடைக்கக்கூடிய இந்த அதிகாரத்தை அரசு இல்லாமல் செய்துவிட்டது.

இவ்வாறு வெளிநாட்டு உதவிகளைப் பெறுவது நாட்டின் இறையாண்மையைப் பாதிப்பதாகும் எனும் "பெரும்பான்மைவாத" அரசியலின் நிலைப்பாட்டினாலே இத் திருத்தம் மேற் கொள்ளப்பட்டது.

இதன் மூலம், அரசு ஏற்கனவே உடன்பட்டிருந்த விடயங்களான ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் நாயகத்தின் அலுவலகத்தினதும் ஏனைய சர்வதேச அமைப்புகளினதும் வல்லுநர்களினதும் ஒத்துழைப்பை காணாமற்போனோர் அலுவலகத்தினால் பெற முடியாது.

இவ்வகையில் இந்த காணாமற்போனோர் அலுவலகமானது ஒரு வெற்றுப் பானையாகவே இருக்கப் போகிறது. இந்தத் திருத்தம் கொண்டுவந்த பின்னர் தான் காணாமற்போனோர் சட்டத்தை அமுல்படுத்துவதற்கான வர்த்தமானியில் ஜனாதிபதி கைச்சாத்திட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அவ்வகையில் காணாமற்போனோர் அலுவலகத்தினால் நீதியும்உண்மையும் நிலைநாட்டப்படும் எனும் நம்பிக்கையை நாம் இழந்துவிட்டோம்.

வலிந்து காணாமல் ஆக்கப்படுதல் என்பது சர்வதேச மனித உரிமை கள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்டங்களுக்கு எதிரான குற்றமாகும். இது ஒரு போர்க் குற்றம் ஆகும். இவ் விடயத்தை இலங்கையின்வடக்கு-கிழக்கு பிரதேசங்களைச் சார்ந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்ப உறுப்பினர்களும், பாதிக்கப்பட்ட சமூகத்தினரும், மனித உரிமை செயற்பாட்டாளர்களும் சிவில் சமூக் நிறுவனங்களைச் சார்ந்தவர்களுமான நாங்கள் எமது கோரிக்கைகளை ஏகோபித்த குரலில்பகிரங்கமாக அறியத்தருவதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)

## கலைஞர்களுக்கான அறிவிப்பு

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் கலாசார அபிவிருத்திச் செயற்றிட்டம் 2017 மூலமாக சண்டிலிப்பாய் பிரதேச செயலகபிரிவிற்குட்பட்ட கலைஞர்களுக் கான விழிப்புணர்வும் கலைஞர் ஒன்றுகூடலும் நிகழ்வினை மேற்கொள்வதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் வலி. தென் மேற்கு சண்டிலிப்பாய் பிர தேச செயலக பிரிவைச் சேர்ந்த 2017 ஆம் ஆண்டு பிரதேச செயலகத்தில் பதிவுகளை மேற்கொள்ளாத கலைஞர்கள் தங்களின் பெயர் விபரங்களை எதிர்வரும் 04.09.2017 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தரிடம் வழங்குமாறு பிரதேச செயலாளர் திருமதி யு.யசோதா அறிவித்துள்ளார். (இ

## சத்திய தரிசனம்



### கோயிலுக்கு அவசியம் செல்லுங்கள்

❖ நாம் அமைதியற்று அலையும் போது, குறுக்கு வழியில் எதையும் அடையத் துடிக்கிறோம். நியாயமான வழி நமக்குச் சிக்கலானதாகத் தெரிகிறது. அதுவே நம்மை தவறான பாதைக்கு அழைத்துச் செல்கிறது.

❖ நம்மை உண்மையான நல்வழியில் செல்ல பெரியோர்களும், ஞானிகளும் கற்றுக் கொடுத்திருக் கிறார்கள். ஆனால், அந்த நல்வழியை நாம் மறந்து விடுகிறோம் அல்லது அந்நெறிமுறைகளுக்கு நாம் மதிப்பளிப்பதில்லை.

❖ இயற்கையின் அமைதிக்கு நடுவே தியானம் செய்யக் கற்றுக் கொள்ளுங்கள். அது உங்கள் மனத் தூய்மைக்கு வழிகாட்டும்.

❖ நம்மால் எதுவும் முடியும் என்று இறுமாப்புடன் வாதிட்டுக் கொண்டிருக்கும் வரையில் கடவுளின் அருள் நமக்கு கிடைப்பதில்லை. "எல்லாம் நீயே, எனக்கு எதுவுமே இல்லை" என்று சரணாகதி அடையும் போது கடவுள் நம்மைக் காப்பாற்ற ஓடோடி வருகிறார்.

❖ கடவுள் எங்கும் இருக்கிறார் என்றாலும் எளிய முறையில் அவரை அடையவேண்டுமானால், கோயிலுக்குத் தான் செல்ல வேண்டும். அங்கு வழிபாடு செய்வதே சரியானதாகும்.

## வாரந்தோறும் புதன்கிழமைகளில் ஆளுநர் - மக்கள் சந்திப்பு

வாரம்தோறும் புதன் கிழமைகளில் ஆளுநர் ரெஜினோல்ட் கூரே யாழ் சுண்டுக்குளியில் அமைந்துள்ள அலுவலகத்தில் மக்களை சந்தித்து அவர்களின் குறைகளை தீர்த்து வைக்கும் வேலைத்திட்டத்தினை செய்து வருகின்றார்.

நேற்றையதினமும்காலை 9 மணி முதல் சமூக மட்ட அமைப்புக்கள், கிராம அபிவிருத்தி சங்கங்கள், விவசாய சம்மேளனப் பிரதிநிதிகள், அரச ஊழியர்கள், தொண்டர் ஆசிரிய சங்க பிரதிநிதிகள், பொதுமக்கள் என பல் வேறு தரப்பட்டோர் ஆளுநர் ரெஜினோல்ட் கூரேயைச் சந்தித்து தமது கோரிக்கை கடிதங்களை கையளித்தனர்.

அவர்களின் பிரச்சினைகளுக்கு உரிய அதிகாரிகளுடன் தொலைபேசி ஊடாக தொடர்பு கொண்ட ஆளுநர் தம்மிடம் தெரிவிக்கப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பில் கவனம் செலுத்தி உரிய பதில் வழங்குமாறு பணிப்புரை விடுத்தார்.

அமைச்சரவை பத்திரத்தில் இடம்பிடிக்காத மேலும் 27 புனர்வாழ்வு பெற்ற பட்டதாரிகள் ஆளுநரை நேற்றைய மக்கள் சந்திப்பின் போது சந்தித்து தங்களையும் பட்டியலில் உள்ளடக்க ஆவன செய்யுமாறு வேண டிக்கொண்டனர்.

ஏற்கெனவே புனர்வாழ்வு பெற்ற 35 முன்னாள் போராளிகள் ஆளுநர் ரெஜினோல்ட் கூரே மற்றும் அமைச்சர் சுவாமிநாதன் ஆகியோரின் ஒழுங்கு அமைப்பில் அமைச்சரவை பத்திரத்தில் உள்வாங்கப்பட்டு பட்டதாரிகள் நியமனத்தில் அவர்களை உள்வாங்குவதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில் நேற்றைய தினம் ஆளுநரை மேலும் பல முன்னாள் போராளிகள் சந்தித்து பேசியுள்ளனர்.

இவர்கள் மத்தியில் கருத்து வெளியிட்ட ஆளுநர் ரெஜினோல்ட் கூரே, உங்களைப் போன்று மேலும் பலர் இதுவரையில் பெயர் விபரங்களை பதிவு செய்யாது இருந்தால் அவர்களையும் எதிர்வரும் ஒரு வாரத்திற்குள் ஆளுநர் செயலகத்தில் தமது கோரிக்கை கடிதங்களைசமர்ப்பிக்குமாறு வேண டிக்கொண்டார். (மு-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 43 ஆவது தேசிய விளையாட்டு விழா ஆரம்பம்






43 ஆவது தேசிய விளையாட்டு ஆரம்ப நிகழ்ச்சியில் ஒலிம்பிக் தீபம் கொழும்பு நகரிற்கு கொண்டு செல்லும் நிகழ்வு மாலுசந்தி பிள்ளையார் கோவிலில் 30.08.2017 அன்று ஆரம்பமானது.இந் நிகழ்ச்சியில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகம், கலவெட்டி பிரதேச செயலர் மற்றும் பருத்தித்துறை பிரதேச செயலர், கொழும்பில் இருந்து வந்த விளையாட்டுத் துறைக்கு பொறுப்பான உத்தியோகத்தர்கள், வடமராட்சிக்கு பொறுப்பான விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் கலந்து கொண்டார்கள். அரசாங்க அதிபர் விளையாட்டு வீரரிடம் ஒலிம்பிக் தீபத்தை சம்பிரதாயபூர்வமாக கையளித்தார். (க-19-60)

# நிமால் எடிஷன் ஞாபகார்த்த மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி

## பைந்தமிழ் அணி வெற்றி







கிளிநொச்சி ஸ்கந்தபுரம் மணியங்குளம் ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் ஒழுங்குபடுத்தலில் காலஞ்சென்ற மாணவன் நிமால் எடிஷனின் ஓராண்டு நினைவையொட்டி நடத்தப்பட்ட 10 ஓவர்கள் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் மொத்தம் 14 அணிகள் விளையாடி, இறுதிபோட்டிக்கு ஆனைவிழுந்தான் பைந்தமிழ் விளையாட்டுக்கழகமும், நஞ்சுண்டான் காடுகண்ணகிபுரம் ஒளிநிலா விளையாட்டுக் கழகமும் தெரிவாகி, 28.08. 2017 அன்று மணியங்குளம் விளையாட்டு மைதானத்தில் நடந்த இறுதிப் போட்டியில் ஆனைவிழுந்தான் பைந்தமிழ் அணி வெற்றியைத் தனதாக்கிக் கொண்டது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ். வடமாகாணசபை உறுப்பினர் என். விந்தன் கனகரட்ணம் உரையாற்றும் போது, போரினால் மிகவும் பாதிக்கப்பட்டு, கல்வி, கலை, சலாசாரம், விளையாட்டு என்று பல துறைகளிலும் எந்தவித வசதி வாய்ப்புகளும் அற்ற நிலையிலும் கூட தங்களுக்குள் இருக்கும் இந்தத் திறமைகளை தங்களிடம் உள்ளசொற்ப வளங்களைக் கொண்டு தக்க வைத்துக் கொண்டு, தங்களை வளர்த்துவரும் இக் கழகங்களை தாம் பெருமையோடு பார்ப்பதாகவும், இவர்கள் மென்மேலும் வளர்ந்து பல சாதனைகளைப் படைக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

ஸ்கந்தபுரம் மணியங்குளம் ஸ்ரார் விளையாட்டுக் கழகத்திற்கு ரூபா 50 ஆயிரம் பெறுமதியான விளையாட்டு உபகரணங்களை தனது நிதி ஒதிக்கீட்டில் இருந்து யாழ்.வடமாகாணசபை உறுப்பினர் என். விந்தன் கனகரட்ணம் வழங்கியிருந்தமை இங்கே குறிப்பிடத்தக்கது. (க)

# வங்கப்புலிகளிடம் அடி வாங்கியது கங்காருக்கள்



அவுஸ்திரேலிய அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் பங்களாதேஷ் அணி 20 ஓட்டங்களால் திரில் வெற்றிபெற்றுள்ளது. பங்களாதேஷ் மற்றும் அவுஸ்திரேலிய அணிகள் மோதும் முதலாவது டெஸ்ட் போட்டி பங்களாதேஷின் மிர்பூரில் இடம்பெற்றது.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணி முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கியது. அந்த வகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 260 ஓட்டங்களைப்பெற்றது.

இந்நிலையில், பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸை ஆரம்பித்த அவுஸ்திரேலிய அணி, பங்களாதேஷ் அணியின் சஹிப் அல்-ஹசனின் அபார பந்துவீச்சுக்கு தாக்குப்பிடிக்க முடியாது 217 ஓட்டங்களுக்குள் சுருண்டது.

43 ஓட்டங்களால் முன்னிலை வகித்த பங்களாதேஷ் அணி தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்தது. ஆடுகளம் சுழற்பந்துவீச்சுக்கு சாதகமாக ஒத்துழைக்க, அவுஸ்திரேலிய அணியின் லயனின் சுழலில் சிக்கிய பங்களாதேஷ் அணி அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 221 ஓட்டங்களைப்பெற்றது.

முதல் இன்னிங்ஸில் 43 ஓட்டங்கள் முன்னிலை பெற்றிருந்ததால் பங்களாதேஷ் அணி அவுஸ்திரேலிய அணிக்கு நிர்ணயித்த வெற்றி இலக்கு 265 ஆகியது.

இந்நிலையில் 265 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய அவுஸ்திரேலிய அணி மீண்டும் வங்கப்புலிகளின் சுழலில் சிக்க, அனைத்து விக்கெட்டு களையும் இழந்து 244 ஓட்டங்களைப் பெற்று 20 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.





20 ஓட்டங்களால் திரில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணி 2 போட்டிகள் கொண்ட தொடரில் 1-0 என முன்னிலை பெற்றுள்ளது. இப் போட்டியின் ஆட்டக்காரராக பங்களாதேஷ் அணியின் சகிப் அல் ஹசன் தெரிவுசெய்யப்பட்டார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பண்ணை படகு...

...ந்த யாழ் பல்கலைக்கழக மாணவி நேற்... தினம் சிகிச்சை பலனின்றி உயிரிழந்...ார்.

நா...ாந்துறை மண்பிட்டியை சேர்ந்த யாழ்.ப...கலைக்கழக கலைப்பீடம், 3ஆம் வரு...டத்தில் கல்விபயின்றுவரும் மாணவியுமான சகாயதாசன் டயானா (வயது 23) என்ப...ரே மேற்படி உயிரிழந்தவராவார்.

...கடந்த 24ஆம் திகதி யாழ்ப்பாணம் ...ர்ணை, குருசடி தீவு அந்தோனியார் ஆல...துக்கு ஒரு படகில் 6 பேர் சென்றுள்ளனர். ...் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் இளம் ...ம்பஸ்தர் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்த...ன், அவருடன் சென்ற ஒன்றரை வயது குழந்தை உட்பட 5 பெண்கள் மீட்கப்பட்டு ...ம்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்த நிலையில்,

சிறுமி உட்பட ஏனைய 3 பெண்களும் சிகிச்சை பெற்று வீடு திரும்பியிருந்தனர். மேற்குறித்த மாணவிக்கு மேலதிக சிகிச்சை வழங்கப்பட்டு வந்தது. இந்த நிலையிலேயே குறித்த மாணவி சிகிச்சை பலனின்றி நேற்றைய தினம் உயிரிழந்துள்ளார்.

இவரது மரண விசாரணையை யாழ். போதனா வைத்தியசாலை மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டிருந்தார். (மு-4,9,30)

## காணாமல் ஆக்கப்...

ரணில் கூட்டு அரசாங்கத்தின் கூலிகளாகவும் செயற்பட்டு வருகின்றனர் எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின்பொதுச் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் கடுமையா...் சாடியுள்ளார்.

வடக்கு கிழக்கைச் சேர்ந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் முன்னெடுத்த கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் நேற்று முற்பகல் யாழ்ப்பாணம் பிரதான பேருந்துத் தரிப்பிட நிலையத்திற்கு முன்பாக இடம்பெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

யுத்தம் முடிவடைந்து எட்டு வருடங்கள் கடந்துள்ள நிலையிலும் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது? என்பது தொடர்பாக அரசாங்கம் உரிய பதில் எதனையும் வழங்கவில்லை. குறிப்பாக இறுதிப் போரின் இறுதி நாட்களில் இராணுவத்தினரிடம் குடும்பத்தினரால் கையளிக்கப்பட்டதன் பின்னர் ...ணாமல்ஆக்கப்பட்டவர்கள் மற்றும் வீடுக...் குடும்ப உறவினர்களுக்கு முன்பாக இராணுவத்தினராலும், துணை இராணுவக் குழுவினராலும் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்பது தெரியாமல் இன்று வரை அவர்கள் கண்ணீருடனும், மாறாத வலிகளுடனும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

...இலங்கை அரசாங்கத்திற்கு இரண்டு ...ட கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதன் மூலம் எந்தவித நன்மைகளும் எமது மக்களுக்குக் கிடைக்கப் போவதுமில்லை. உள்ளக விசாரணையில் தமிழ் மக்களுக்குத் துளியளவேனும் நம்பிக்கையில்லை. ஆகவே சர்வதேச சமூகம் எமது பிரச்சினையில் நேர...யாகத் தலையிட்டுச் சர்வதேச விசாரணையூடாக காணாமல் ஆக்கப்பட்டவர்களைக் கண்டுபிடிப்பதற்கும், போர்க்குற்றவாளிகளைத் தண்டிப்பதற்கும் காலம் தாழ்த்தாது உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.(மு-4)

## தமிழ் மக்களின்...

ரெஜினோல்ட் கூரே தெரிவித்துள்ளார்.

நாட்டில் நிலவும் சமாதான சூழல் மற்றும் ச...ய ரீதியிலான சக வாழ்வு எனும் தொனிப் பொருளில் அஸ்கிரிய பீடத்தின் மகா நாயக்க தேரர் மதிப்புக்குரிய வரக்காக்கொட ஸ்ரீ பஞ்ஞானந்த ஞானரத்ன மஹாநாயக தேரர் தலைமையில் யாழ்.மாவட்டத்தில் உள்ள சர்...மத தலைவர்களுடனான கலந்துரை...டல் ஒன்று நேற்றைய தினம் யாழ்.மாவ...ட செயலகத்தில் நடைபெற்றது.

அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

புத்த பெருமான் இந்த உலகத்துக்கு நல்ல போதனைகளை போதித்துள்ளார். அனைத்து மக்களும் சமாதானமாக வாழ வேண்டும் என தெரிவித்துள்ளார்.

அபிவிருத்திகள் செய்வதால் மட்டும் பயனில்லை. நாம் அனைவரும் அன்போடும் சகோதரத்துவத்துடனும் நல்லெண்ணத்துடன்வாழ வேண்டும். அத்துடன் அரசால் அனைத்து காரியங்களையும் செய்ய முடியும் என யாரும் நினைக்க கூடாது. அதே போல அரசியல்வாதிகளும் எமக்கு எல்லாம் செய்வார்கள் என எதிர்பார்க்க முடியாது. குறைபாடுகள் எப்பவுமே இருக்கும். அதாவது வல்லுறவு, கொலை, மதுபோதை என பல குற்றச்செயல்கள் தொடர்ச்சியாக நடந்தவண்ணம் உள்ளது. ஆனால் நீதி சட்டம் என்பது அனைவருக்கும் ஒன்றுதான். குற்றங்களுக்கு பாதுகாப்பாக ஒவ்வாரு வீட்டுக்கும் பாதுகாப்பு படைகள், பொலிஸ் ஆகியோரை அமர்த்தி பாதுகாப்பு போட முடியாது. அதை அனைவரும் புரிந்து கொண்டு அனைவருடனும் ஒற்றுமையாக இருக்க வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் உள்ள அனைத்து மக்களும் சுதந்திரமாக வும் நல்ல வாழ்வையும் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். நான் ஆளுநராக இங்கு இருப்பதனால் என்னால் அதை உணர்ந்து கொள்ள முடிகிறது.

ஏனெனில் கடந்த சில நாட்கள் நாங்கள் அனைத்து மக்களுடனும் இணைந்து டெங்கு ஒழிப்பு தின நிகழ்வை நடத்தியுள்ளோம். பிக்குகள் வருகை தந்து இரத்த தானம் வழங்கியுள்ளனர். அத்துடன் அண்மையில் யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதிக்கு துரதிர்ஷ்டவசமாக நடைபெற்ற நிகழ்வுக்கு தென்னிலங்கையில் இருந்து பௌத்த துறவி வந்து அவருக்கு ஆசி வழங்கியுள்ளார்கள். இவ்வாறு எல்லா வசதிகளையும் நாம் தான் உருவாக்கி கொள்ள வேண்டும்.

வடக்கு பகுதிக்கு செல்வதற்கு பயம் என தென்பகுதியில் உள்ளவர்கள் நினைக்கிறார்கள். ஆனால் ஆயிரம் கதைகள் சொன்னாலும் நேரில் வந்து பார்த்தால் தான் உண்மை புரியும். தமிழ் மக்கள் அப்பாவிகள், அன்பானவர்கள் அதை எனது சேவை காலத்தில் புரிந்து கொள்கிறேன்.

எல்லாரும் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்றால் மனிதாபிமானம் ஒன்று இருந்தால் மட்டுமே ஒற்றுமையாக வாழ முடியும். வேறு ஒன்றும் தேவையில்லை. யுத்தம் இல்லாமல் இருந்திருந்தால் எமது நாடு பாரிய அளவில் முன்னேறியிருக்கும். எல்லா மதத்தினருக்கும் நல்லிணக்கம், அன்புதான் போதிக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.(மு-9)

## வடக்கு-கிழக்கில்...

வடக்கு கிழக்கில் யுத்தத்திற்கு முன்னரும் பின்னரும் இராணுவம் மற்றும் அதனோடு சேர்ந்தியங்கிய ஆயுதக்குழுக்களால் ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்கள், யுவதிகள், குடும்பஸ்தர்கள், மதகுருமார்கள், மனிதவுரிமை செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள் என பலதரப்பட்டவர்கள் கடத்தப்பட்டனர். இதேபோன்று யுத்தம் முடிவுறும் தருணத்திலும் ஆயிரக்கணக்கான மக்களை சரணடையுமாறு கூறி, பஸ்களில் ஏற்றி சென்ற இராணுவம் அவர்களை தாம் அழைத்து செல்லவில்லை என கைவிரித்துள்ளது. எனினும் இவ்வாறு அழைத்து செல்லப்பட்டதற்கு கண்கண்ட சாட்சியங்கள் இருந்தும் அது தொடர்பில் இராணுவம் பெரிதாக அலட்டி கொள்ளவில்லை. முன்னர் ஆட்சியில் இருந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ காணாமல் போனவர்கள் தொடர்பில் விசாரணை செய்ய ஆணைக்குழுக்களை அமைத்திருந்தார். எனினும் அவை காணாமல் போயிருந்தன.

மேலும் தற்போது ஆட்சியில் உள்ள மைத்திரிபால சிறிசேன தலைமையிலான அரசாங்கம் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் தாம் விரைந்து நடவடிக்கை எடுப்பதாக சர்வதேசத்திற்கு காட்டிக்கொண்டது. அதேபோன்று தமிழ் மக்களிடமும் பல்வேறு வாக்குறுதிகள், உறுதிமொழிகளை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வழங்கியிருந்தார். எனினும் இன்று வரை அவர் வழங்கிய வாக்குறுதிகள் எவையும் நிறைவேற்றப்படவில்லை.

இறுதியாக காணாமல் ஆக்கப்பட்டோர் பட்டியலை வெளியிட பாதுகாப்பு கவுன்சிலில் வலியுறுத்துவதாக கூறியிருந்தார். எனினும் அதுவும் பல மாதங்களாகியும் நடைபெறவில்லை. இவ்வாறு மாறி மாறி வரும் அரசுகளால் ஏமாற்றப்பட்டு வரும் நிலையிலேயே 2017ஆம் ஆண்டுக்கான சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினம் வடக்கு கிழக்கு தமிழர் தாயகத்தில் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது. இந்த வருடமாவது முடிவில்லாமல் தொடரும் தமது எதிர்பார்ப்புக்கள், காத்திருப்புக்கள் நிறைவு பெறாதா? என்ற எதிர்பார்ப்புடன் உறவுகளை பறி கொடுத்த உறவுகள் ஏக்கங்களுடன் இருந்ததை காண முடிந்து. வடக்கில் வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களிலும், கிழக்கில் மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களிலும் காணாமல் ஆக்கப்பட்டோரின் போராட்டங்கள் நேற்றைய தினம் நடைபெற்றுள்ளன. இந்த மாவட்டங்களில் ஏற்கெனவே காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் பல மாதங்களாக தொடர்ச்சியாக போராடி வரும் நிலையில்,

நேற்றைய தினம் கவனயீர்ப்பு போராட்டங்கள் நடைபெற்றுள்ளன. இந்த போராட்டங்களில் அரசியல் வாதிகள் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (மு-4)

(மேலதிக செய்திகள் உள்ளே)

## புலி இலட்சனை...

விடுதலைப்புலிகளின் இலட்சிணை பொறிக்கப்பட்ட துண்டுப்பிரசுரங்கள் பரவலாக விசுறப்பட்டுள்ளது.

இது குறித்து பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலையடுத்து சம்பவ இடங்களுக்கு வந்த பொலிஸார் அதனை மீட்டதுடன், இது எவ்வாறு வந்தது? யாரால் விநியோகிக்கப்பட்டது என்பது குறித்து விசாரணைகள் இடம் பெற்று வருவதாக தெரிவித்தனர்.(மு-250)

## சிங்கள மகா...

கொள்வேன் என அஸ்கிரிய பீடத்தின் மகா நாயக்க தேரர் மதிப்புக்குரிய வரக்காக்கொட தம்மசித்தி ஸ்ரீஞானரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் நிலவும் சமாதான சூழல் மற்றும சமய ரீதியிலான சகவாழ்வு எனும் தொனிப் பொருளில் தேரர் தலைமையில் யாழ் மாவட்டத்தில் உள்ள சர்வமத தலைவர்களுடனான கலந்துரையாடல் ஒன்று யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்றைய தினம் நடைபெற்றது.

நாட்டில் இடம்பெற்ற யுத்தத்தால் வடக்கு தெற்கு என அனைத்து இனத்தவருக்கும் பிரச்சினை தான் ஏற்பட்டுள்ளது. இது தீர்க்க வேண்டும் என்றால் புத்த பெருமான் எதை சொல்லியிருந்தாரோ அதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அதாவது எல்லா சமயமும் ஒரே சிந்தனையை தான் கூறியுள்ளது. உயிர்களை துன்புறுத்த கூடாது அழிக்க கூடாது எல்லா உயிர்களுக்கும் வாழ ஆசை உள்ளது. அவர்களை மனிதாபிமானத்துடன் வழிநடத்த வேண்டும்.

உலகத்தில் பல மதங்கள் உள்ளது. சமயம், சாதி, மதம் வித்தியாசம் இல்லை. அதை மனிதர் தான் வெவ்வேறாக வகுத்துள்ளார்கள். எல்லா மதமும் சமாதானத்தையும் ஐக்கியத்தையும் ஒற்றுமையையும் தான் போதித்துள்ளது. வேற்றுமையுடன் செயற்பட்டால் அழிவை தான் சந்திப்போம். வேற்றுமையை புறம் தள்ளி மனிதர்களாக வாழ்வது தான் இன்றைய காலத்தின் கடப்பாடாக உள்ளது.

அனைத்து மக்களுக்கும் உரிமை உள்ளது. அதை பெற வேண்டும் என்றால் ஜாதி மதத்துக்கு அப்பால் அதை கருத்தில் எடுக்காமல் ஒற்றுமையாக வாழ்ந்தால் மட்டுமே உரிமையுடன் வாழ முடியும். பசி தாகம் அனைவருக்கும் ஒன்றுதான். அனைத்து உரிமைகளையும் மக்களுக்கு பெற்று கொடுப்பதற்கு அரசால் முடியாது. ஆனால் ஒரு மனிதனுக்கு இருக்கும் அடிப்படை தேவைகளை பெற்றுக்கொடுப்பதற்கு சமய தலைவர்கள் ஒன்றிணைந்து செயற்பட்டால் அவற்றை பெற்றுக் கொள்ள எம்மால் முடியும். இந்த நாடு முன்னேற வேண்டும் என்றால் நாம் ஒத்துழைப்புடன் வாழ வேண்டும்.

இன்று (நேற்று) பல கோரிக்கைகளை மத குருக்கள் முன்வைத்துள்ளனர். அவற்றை ஜனாதிபதிக்கு தெரிவித்து அவற்றை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கவுள்ளேன். விசேடமாக எமது நாட்டில் மும்மொழி தான் உள்ளது. அனைவரும் மும்மொழிகளையும் கற்று தெரிந்திருந்தால் இந்த நாட்டில் உள்ள இனத்தவருக்கிடையில் வேற்றுமை இருந்திருக்காது. இன்னொருவருடைய கஷ்டத்தை புரிந்து கொள்ள கூடியதாக இருந்திருக்கும்.

யாழ்ப்பாணத்தில் சிங்கள மகா வித்தியாலயம் தேவை என்பதும்,யாழ் மக்கள் சிங்களம் படித்து ஐக்கியமாக வாழ விரும்புகிறார்கள் என்பதை ஜனாதிபதிக்கும் தென்பகுதிக்கும் தெரிவிக்கவுள்ளேன். அத்துடன் மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த வேண்டும் என்பது பற்றி கலந்து ஆலோசித்து முடிவெடுப்போம்.

போதைவஸ்து குற்றச்செயல்கள் தொடர்பாக முப்படைகளுடன் கதைத்துள்ளோம். அதற்கு முடிவு எடுக்க வேண்டும். சமயத் தலைவர்கள் இணைந்து முடிவெடுக்க வேண்டும். வருடத்துக்கு ஒரு முறையாவது நான் இங்கு வருகை தந்து அனைத்து மதகுருக்களுடனும் கலந்துரையாட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (மு-9)

## இதுவரை நடவடிக்கை...

மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தில் வடகிழக்கில் கவனயீர்ப்புப் போராட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. பல தடவைகள் நாங்கள் எழுத்து மூலமும், வாய் மூலமும் காணாமல்போனோர் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்குமாறு கூறப்பட்டிருந்தபோதும், இதுவரை ஆக்கபூர்வமான எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இவர்கள் சம்பந்தமாக ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய நடவடிக்கைகளை விரைந்து எடுப்பதாக சர்வதேச நாடுகளுக்கு அரசாங்கம் கூறிய போதிலும் எதையும் செயற்படுத்தவில்லை. இதனால் எமது அரசாங்கத்திற்கு மேலதிக இருவருட காலக்கெடு விதித்த சர்வதேச நாடுகள், எங்களுடைய காணாமல் ஆக்கப்பட்டோர் சம்பந்தமாக போதிய நெருக்குதல்களை ஏற்படுத்த வேண்டும் என நாம் கோருகின்றோம். மேலும், உங்கள் அனைவரது போராட்டத்திலும் நாங்களும் உங்களுடன் இருக்கின்றோம் என தெரிவித்துள்ளார். (மு-11)

## இந்திய மீனவர்கள்...

தல் வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன் பிடியில் ஈடுபட்டதாக இந்த வருட ஆரம்பத்தில் இருந்து இந்த மாதம் வரையிலான காலப்பகுதியில் 80 இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையால் பல்வேறு தினங்களில் கைது செய்யப்பட்டிருந்தனர்.

நெடுந்தீவு மற்றும் காங்கேசன்துறை கடற்பரப்புக்களில் கைது செய்யப்பட்ட இவர்கள் அந்தந்த பிரதேசங்களில் உள்ள நீதிமன்றங்களில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

அந்த வகையில் இவர்களில் 76 பேரை விடுதலை செய்யுமாறு அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் குறித்த மீனவர்கள் இன்றைய தினம் அந்தந்த நீதிமன்றங்களின் ஊடாக விடுதலை செய்யப்படவுள்ளனர். (மு-9)

## உண்ணாவிரதத்தை...

ஏற்று தனது போராட்டத்தை கை விடுவதாக அவர் அறிவித்துள்ளார்.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை வழக்கில் கைது செய்யப்பட்டு சிறைத் தண்டனை பெற்றுள்ள முருகன் ஜீவசமாதி அடைவதற்கு அனுமதி கோரியிருந்தார்.

இது குறித்து பிரதமர் மோடிக்கும் அவர் கடிதம் எழுதியிருந்தார். இதனையடுத்து கடந்த 13ஆம் திகதி முதல் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வந்தார்.

இதன் காரணமாக அவரின் உடல் நிலை மிகவும் மோசமடைந்திருந்தது.


இந்நிலையில், வைத்தியர்கள் மற்றும் பொலிஸ் ஆணையாளரின் ஆலோசனையின் பிரகாரம் தன்னுடைய உணவு தவிர்ப்பு போராட்டத்தை கைவிடுவதாக முருகன் அறிவித்துள்ளார்.

இதேவேளை, 1991ஆம் ஆண்டு மே மாதம் 21ஆம் திகதி இந்தியாவின் முன்னாள பிரதமர் ராஜீவ் காந்தி, மனித வெடிகுண்டு மூலம் சென்னையில் வைத்து படுகொலை செய்யப்பட்டார்.

இந்த சம்பவம் தொடர்பில் விடுதலைப் புலிகள் அமைப்பின் மீது குற்றம் சாட்டப்பட்டது. அத்துடன், பேரறிவாளன், நளினி, சாந்தன், முருகன் உள்ளிட்ட 7 பேர் கைது செய்யப்பட்டு சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (மு-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம் : 19.05.1937 மறைவு : 01.08.2017

கடந்த 01.08.2017 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்

## அமரர் கணபதிப்பிள்ளை சிதம்பரலிங்கம்

அவர்களது சிவப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் இன்றையதினம் 31.08.2017 வியாழக்கிழமை காலை 6.00 மணியளவில் கல்லூரி வீதி, தாமரைக் குளத்தடி அந்தியேட்டி மடத்தில் நடைபெறும். அந் நிகழ்விலும் தொடர்ந்து எமது இல்லத்தில் முற்பகல் 11.30 மணியளவில் நடைபெற விருக்கும் சபிண்டீகரண நிகழ்விலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் கலந்துகொண்டு அன்னாரது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு : இவ் அழைப்பினையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நாகலிங்க முதலியார் வீதி,
பருத்தித்துறை.

இங்ஙனம் :
குடும்பத்தினர்.

(C-9468)


விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
- மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்
- விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு
- எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண், மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு

UK - 550/= (C-9382)

கப்பல் மூலம் கடைாவிற்குப்பொதிகள் அனுப்ப
CANADA - 400/= மட்டுமே
(நிபந்தனைக்குட்பட்டது)

V2 TRAVELS-0768226240

யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • சாவகச்சேரி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை



Organ, Guitar, புல்லாங்குழல் வகுப்புக்கள்

புதிய சினிமாப்பாடல்களின் இசைக் குறிப்புக்கள் (Notes) விற்பனைக்கு உண்டு.

கரவீணா இசை மன்றம்
4, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர்
தொ.பே : 077 703 1293

(276)



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532



V2 TRAVELS

PASSPORT

வெளிநாடுகளிலிருந்து வருவோருக்கு இலங்கை விசா நீடிப்பு யாழ்ப்பாணத்திலேயே செய்து கொடுக்கப்படும்.

VISA EXTENSION
FOR FOREIGN PASSPORT
(வீசா எக்ஸ்ரென்சன்)

(C-9383)

0768227499

யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • சாவகச்சேரி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை



எவரெஸ்ட் குமாரிக்கா சந்தனாதி தைலம்

- நீண்ட கூந்தல் வளர்ச்சிக்கும்
- இளநரையை போக்கவும்
- பொடுகிலிருந்து நிவாரணம் பெறவும்
- கண் எரிச்சல், தலை வலியை நீக்கவும்
- ஞாபக சக்தியை அதிகரிக்கச் செய்யவும்
- ஏழு வகையான மூலிகைகள் உள் அடங்கிய சிறப்பு தைலம்

100 வீதம் இயற்கையானது

(கற்றாழை, வல்லாரை, நெல்லிக்காய், கரிசலாங் கண்ணி, கறிவேப்பிலை, பொன்னாங்காணி, அவுரி மற்றும் விற்றமின் E)

எல்லா மருந்தகங்களிலும் சாதாரண கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்

தயாரிப்பு:
எவரெஸ்ட் மருந்தகம்,
உசன், மிருசுவில்,
யாழ்ப்பாணம்.

ஏக விநியோகஸ்தர்
பிரமநாதன் & Co
எண்.28, 26, பேரின்பநாயகம் வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

கைபேசி எண்: 0776389356, 0777153571

(9447)


## காணா...

வேறொன்றுமல்ல.

இதேவேளை தற் போதைய ஜனாதி பதியும் பிரதமரும் போர்க் குற்றம் செய்த இராணுவத்தினரைப் பாது காப்பதிலேயே அதிக அக்கறை கொண் டுள்ளனர்.

துரதிர்ஷ்ட வச மாகத் தமிழ் மக் களின் தலைவர்கள் என்று தம்மைத் தாமே சொல்லிக்கொள் ளும் கூட்டமைப்பின் தலைமையும் போர்க் குற்றம் செய்த முன் னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை யும் அவரது சகா களையும் பாதுகாக் கின்றவர்களாக மைத்திரி - 23


KINGS ELECTRONICS(PVT) LTD

ELECTONICS | FURNITURES | BABYCARE | TOYS

எங்குமே இல்லாத விலைக்கழிவில் எம்மிடம்
மின் உபகரணங்கள், தளபாடங்கள் மற்றும் குழந்தைகளுக்கான பொருட்கள்

★SPECIAL★ ★OFFERS★

LED TELEVISIONS



WARRANTY 3 YEARS

Samsung 32" -28750/=
Hisence 32" -23500/=
Hisence 24" -16900/=
Panasonic 32" -27900/=
Hitachi 32" -25900/=
Tcl 24" -17250/=
Hitachi 42" -59000/=

Abans32" RS.20,750/=

SAMSUNG R19 REFRIGERATOR
10 YEAR WARRANTY
35900/=

LG REFRIGERATOR
10 YEAR WARRANTY
54,900/=

INNOVEX WASHING MACHINE
34500/=

SOFA SET 3+1+1 34,900/= ONLY



WARRANTY 5 YEARS

Stand Fan
Rs. 2,900

Telesonic Air Cooler
16,480/=

HAIER WASHING MACHINE
36500/=

(C-9459)

SONY SMART FULL HD
48" RS.119,900 ONLY

Haier SMART FULL HD
32" RS.28,900 ONLY

SAMSUNG FULL HD
48" RS.96,900 ONLY

GLASS TV STAND
10,900/=

OPEN
9.00AM TO 8.00PM
365 DAYS

Sony 5.1 Home Theater
RS 21,000/=

021-4546699 | mykings.lk | kingsjaffna | 12, Point Petro Road, Jaffna


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 31.08.2017 இல் அச்சிட்டு வெளியிடப்ப...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org